# வைர மலர்

## 1952 - 2012




## கோண்டாவில் கிழக்கு
## ஸ்ரீ நாராயணா

சனசமூக நிலையம்
கிராம அபிவிருத்திச் சங்கம்
மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்
பாலர் பாடசாலை
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
வெளியீடு
2012

"Jaffna's No. 1 Shop" எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் மக்களின் மனங்கவர்ந்த பாங்கொங் ஆடைகளை அழகாக தேர்ந்தெடுக்கலாம்.
பாங்கான வரவேற்போடு உங்களுக்காக காத்திருக்கும்



# TOPAZ

# டொபாஸ்

இல. 70, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 4743

சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகள், திருமணப் பட்டுப்புடவைகள், மங்கையர், ஆடவர் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை தெரிவுகளுக்கும் விசேஷமான கோட் சூட் வகைகளுக்கும்...
அத்துடன்
கோட் சூட், ரவுசர், சேட், மற்றும் பெண்கள் ஆண்களுக்கான அனைத்து ஆடை வகைகள் நாகரீக வடிவமைப்பில் குறித்த தினத்தில் தைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தொட்டுத் தொடரும் பட்டுப் பாரம்பரியங்களின் அழகுச் சோலை

## மிலேனியம் பெசனட்
## அன் பொம்பே பஸார்



இல. 10–11, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:– 021 222 9399


ஆகா என்ன அழகு எத்தனை அழகு என்று எண்ணத்தூண்டும்.
உலகத்தரம் வாய்ந்த பட்டுச்சாறிகள் எல்லோரையும் வசீகரப்படுத்தி
தம்பால் ஈர்க்கவைக்கும் சல்வார்கள், சுடிதார்கள்,
மற்றும் ஸ்கேட்அன் பிளவுஸ் வகைகள், ஆண்களை அட்டகாசப்படுத்தும் தரம் மிக்க
றெடி மேற் ஜீன்ஸ், மற்றும் அவற்றிற்கு பொருந்தும் சேட், ரீசேட்,
என்பனவற்றை தெரிவு செய்யவும்.
சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஆடைகள், மழலைகள் மனம் கவர்ந்த
உடைகள் இவை எல்லாவற்றிற்கும் சிறந்த தெரிவு


வானத்தில் கண் சிமிட்டு நட்சத்திரங்கள் போல் அழகிய கலை நயப்படைப்புகள்
நிறைந்த நகையகம் உங்கள் தங்க நகைத் தெரிவுகளுக்கு...



# ஜீ வஸ்பிளாசா

இல. 91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்





# வைரமலர்

கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ நாராயணா
சனிசமூக நிலையம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்,
மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்,
பாலர் பாடசாலை,
மாதர் அபிவிருத்திச் சங்கம்,
வெளியீடு
2012

வைரவிழா மலர்க்குழு
ச.நிமலன்
கு.தனூரன்
ஜ.நியூட்டன்
சு.குலதேவகுமார்
இ.பார்த்தீபன்

நூல் : வைரமலர்

வெளியீடு : சித்திரை 2012

ஆக்கம் : மலர்க்குழு

இதழாசிரியர் : திரு.ச.நிமலன்

பதிப்பு : ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

இணையம் : www.srinarajana.com

அச்சுப்பதிப்பு : மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
முருகேசர் லேன்,
நல்லூர்.
**021 2229285**

பக்கங்கள் : xxvi+92

பிரதிகள் : 400

# வைரவிழா மலர்

# சமர்ப்பணம்

நித்திலங் கொழிக்கும் நெடுங்கடல் சூழ்ந்த இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இரத்தின தூவிபமாம் இலங்கையின் வடக்கே சைவமும் தமிழும் தழைத்தோங்கி மிளிரும் இலங்கையின் மணி முடியாகிய யாழ்ப்பாணத்திலே கோண்டாவில் என்னும் ஊரில்.

அருளாட்சி புரியும் ஸ்ரீ வல்லீபுரநாதரின் அருட்கடாட்சம் நிறைந்த இம் மண்ணில் அவதரித்து மாண்புடன் வாழ்ந்து காட்டி சிறப்பிகளுக்குள் முத்தாக விளங்கும் எமக்கெல்லாம் முன் உதாரண புருஷர்களாக நற்பாலம் அமைத்துத் தந்த எம் முன்னோர்களுக்கும் செழிப்பான சமூகம் பல்கிப்பெருக வேண்டும் என்ற சிந்தனையோடு எங்களுக்காய் தங்களைத் தந்து உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இம்மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்.

நிர்வாகிகள்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
கோண்டாவில்.

# சங்கக் கீதம்

இராகம் : மத்தியமாவதி

வாழியவே! ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
வாழியவே! எம் கிராம அபிவிருத்திச் சங்கம்
வாழியவே! மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்
வாழியவே! கோண்டாவில் பாலரின் பாடசாலை
– வாழியவே

ஞாலத்தின் மாண்பினுக்கோர் நன்னிலவாய் உதித்து
நூலகமாய் எழுந்து நுண்ணறிவு படைத்து
காலத்திற் கேற்றதுவாய் கலை பலவும் செழித்து
ஈழத்தின் வாழ்வினுக்கே எம்தமிழாய்ச் சிறந்து
– வாழியவே

கண்ணியத்தில் வாழ்வைக் கற்று நிதம் தெளிந்து
உண்மை நிலை நின்று உயர்வுபல அடைந்து
மண்ணிலே இங்கு மகுடமென உயர்ந்து
பன்நூறு ஆண்டுகள் பாரினிலே வாழியவே!
– வாழியவே!

இயற்றியவர்
ம. சிவலிங்கம்

# தமிழ்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லைய கன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அளந்ததனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

# இதழாசிரியர் சிந்தனையிலிருந்து ....

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வெளியீடு செய்யப்படும் "வைர மலருக்கு" இதழாசிரியராக எழுத்துப் பணி ஆற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

செந்தமிழும் செந்நெறியும் செழித்தோங்கும் கோண்டாவில் அருந்திவூரில் வைஷ்ணவ ஆகம முறைப்படி பூஜை புனக்காரணங்களால் நாம் பூஜித்து வழிபடும் ஸ்ரீ வல்லீபுரநாதரின் அருட்பார்வையினால் புண்ணியங்கள் ஒருங்கே அமையப்பெற்ற புனித மண் கோண்டாவில் கிழக்கில் புகழ்பூத்தது.

இன்று புதுப்பொலிவுடன் வைர விழா கண்டு உள்ளம் பூரிக்கும் ஸ்ரீ நாராயணா சன சமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டு கழகம், பாலர் பாடசாலை, மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் என்ற பல அமைப்புக்கள் "ஒரு குடையின் கீழ் பல கிளைகள்" என்ற வாக்கிற்கு இணங்க பல சேவைகளை ஆற்றி வருகின்றது. அந்த வகையில் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, ஆத்மீகம், சிரமதானம், பொருளாதாரம், அரசியல் என்ற வகையில் சமூதாயப் பணி செய்வதை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

எத்தனையோ விழாக்கள் நடந்தாலும் அவ்விழாக்களின் ஆவணமாக விழா மலர்கள் மட்டுமே நெடுங்காலம் எஞ்சி நிற்கின்றன. அந்த வகையில் எமது நிலையத்தின் சேவைகளைப் பெறுகின்ற நீங்கள் உட்பட அனைவரும் சங்கங்களின் சேவைகள் அதன் உருவாக்கம் மற்றும் வரலாற்றுப் பின்னணிகள் வளர்ச்சிப்படி நிலைகள் வரலாற்றுச் சாதனைகள் என்பவற்றை அறிந்து கொள்ள இம் மலர் உதவியாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

வெறுமனே விளம்பர ஏடு, அறிக்கைகள் என்ற பதத்திலிருந்து விடுதலை பெறும் வண்ணம் இம்மலர் உருவாக்கப்பெற்று துறை சார்ந்தவர் களின் ஆக்கங்களும் உள்ளே பல்சுவை விருந்துகளாக அமைகின்றன. எனவே அவற்றில் பிடித்தமானவற்றை சுவைக்கலாம், ரசிக்கலாம், மகிழ லாம்.

**திரு. ச. நிமலன்**
Dip.in Coun
வைரமலர் ஆசிரியர்

# 2012 ம் ஆண்டு வைர விழா நிர்வாகிகள்




இருப்பவர்கள் (இ.வ.) : திரு. K. தியாகராஜா, திரு. S. நிமலன், செல்வன் A. T. கஜன், செல்வன் T. சுகிர்தன், செல்வன் A. ரஜீவன், செல்வன் S. குலதேவகுமார், திரு. M. சிவலிங்கம்

நிற்பவர்கள் (இ.வ.) : செலவன். I. பார்த்தீபன், திரு. K. நிறஞ்சன், திரு. P. சயிந்தன், செல்வன் K. புருசோத், செல்வன் J. நியூட்டன், செல்வன் K. தனூரன், திரு. V. சிவகுமாரன், திரு. S. கஜதீபன், செல்வன் A. கஜதீபன், திரு. K. நரேந்திரன், திரு. S. சுஜீவா, திரு. P. கருணதாஸ், செல்வன் M. தனீஸ்வரன், செல்வன். N. பிறேமானந்

# பொருளடக்கம்


- ஆசிச் செய்திகள்
- வாழ்த்துச் செய்திகள்
- செயலாளரின் நோக்கில் ... 01-15
- பொருளாளர் பார்வையில் 16
- குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் மேலதிக உணவு ஆரம்பித்தல்...... 17-19
- ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே .....? 20-23
- காசநோயற்ற உலகை நோக்கிப் பயணிப்போம் 24-30
- குருதி (கேள்வி விடை) 31-32
- சமய வளர்ச்சியில் ராம்மோகன்ராயின் சமூகப்பார்வை 33-41
- தலைமைத்துவம் (LEADERSHIP) 42-44
- மின்னஞ்சலை மீட்டுவோம் E-mail 45-46
- குறள் ஒன்று குரல் நூறு 47-50
- வருமானத் திட்டமிடலும் பங்கு முதலீடும் 51-54
- அன்றாட வாழ்வில் மின்சாரம் 55-58
- கலையின் வடிவம் நாட்டியம் 59-60
- பூகோள இடநிர்ணயமுறை (GPS) 61-62
- வாழ்த்து கவிதைகள் 63-68
- காலத்தின் அருமை 69-70
- சமகாலத்தகவல்கள் புதியவகை நோய் 72-73
- உயிரினங்களும் சிறப்பியல்புகளும் 74
- இளைஞர்களே விழித்தெழுங்கள் 75
- பின்னிணைப்புக்கள் 76-93



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை

021 222 2870



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்

## அருளாசிச் செய்தி

அன்புக்கினியவர்களுக்கு,

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் இன்று தனது 60வது வயதினை அடைந்திருப்பதை இட்டு மகிழ்ச்சியடைகின் றோம். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்களில் சனசமூக நிலையமும் ஒன்றாகும் கோண்டாவில் வாழ் மக்களின் கல்வி, விளையாட்டு, பொருளாதார வளர்ச்சி தொழிற்பயிற்சி சமூக ஒற்றுமை அனைத்தையும் தனதாக்கி 60 ஆண்டுகள் மக்களின் சேவை ஆற்றி தலை நிமிர்ந்து நிற்கும் சனசமூக நிலையத்தினை அனைவரும் பாராட்டுகின்றனர். இன்றுபோல் என்றும் சமூகப் பணியையும், சமயப்பணியையும் பல்லாண்டு காலம் பணியாற்றி வளர வாழ்த்துகின்றோம். இப்புனிதப் பணியை 60 ஆண்டுகள் பணியாற்றிய தலைவர், செயலாளர், உறுப்பினர் அனைவருக்கும் இறைவனது ஆசி கிடைப்பதாக இப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**

**பரமாசார்ய சுவாமிகள்**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர்

# யாழ் ஆயரின் ஆசிச்செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் தமது 60 ஆண்டின் நிறைவினை இன்று கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இச் சனசமூக நிலையமானது கல்வியிலும், கலாசாரத்திலும், விளையாட்டுத் துறைகளிலும், ஆன்மீகப் பணிகளிலும் இக் கிராம மக்களை வளர்த்து முன்னேற்றி யுள்ளதை அறிந்து மகிழ்வதுடன் தொடர்ந்தும் எம் இளம் சமூகத்தில் அவர்கள் பால் இத்துறைகளை மென்மேலும் பரப்பி எதிர்கால எம் மக்களின் வாழ்வு சிறப்படைய இச் சனசமூக நிலையம் பெரிதும் உதவ வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**மேதகு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்.
Bishop's House,
P.O.Box 2,
Jaffna.

# ஆசியுரை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் 60வது அகவையை அடைந்து வைரவிழாவினை கொண்டாடுவதை இட்டு மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றேன். 1952ல் ஸ்தாபிக்கப்பட்டு வெள்ளிவிழா, பொன்விழா ஆகிய விழாக்களைக் கண்டு இக் கிராம மக்களின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு இந்நிலையம் பங்களித்து இவ்வருடம் 60வது ஆண்டை பூர்த்தி செய்கிறது. மேலும் இம்மக்களுக்கு பல சேவைகளை புரிந்து பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா ஆகியவற்றை காண எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீவல்லீபுரநாதரின் அருள் வேண்டி எனது ஆசிகளைக் கூறி அமைகின்றேன்.

இப்படிக்கு

**பிரம்மஸ்ரீ அ. இரவீந்திரகுமாரக் குருக்கள்**

ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான பிரதம குருக்கள்

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

MIRACLE CENTER

# ASSEMBLY OF GOD, KONDAVIL

ASSEMBLIES OF GOD

Pastor. V.P.Kanagalingam. Rajah D.Th, BA in M&M

Since 1914 INCORPORATED IN SRI LANKA BY ORDINANCE 53 OF 1947

## Message of Blessings

I with great pleasure, convey my hearties greetings to Kondavil East Sri Narayana Community Centre, on their 60th Anniversary.

This Community Centre which serves the community in various ways through their, Pre School, Rural Development Society, Marumalarchi Sports Club and other means, for last sixty longs years. They have served for the development of individuals to the community in various ways. Their endeavors have been successful with lot of struggles.

Our church community was blessed by this community centre by their support in various ways. We thank you all for these support given thus far.

I wish them all good will and best of future endeavors to the community as a whole through 'Sri Narayana' community centre, Kondavil East.

PASTOR V.P.K. RAJAH
ASSEMBLY OF GOD

Pr. Kanagalingam Rajah
(Pastor - Miracle Centre,
Assembly of God, Kondavil)

# தலைவரின் உள்ளத்திலிருந்து

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் வைஷ்ணவமும் வளர்ந்தோங்கும் கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் வையகமாகும் "ஸ்ரீ நாராயணா சனசமூகம்" தன் சேவைகளை மக்கள் தேவையறிந்து "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை எனும் தாரகமந்திரத்தோடு தன் சமூக வாழ் மக்களிற்காக அர்ப்பணித்து அளப் பெரிய சேவை செய்துவந்து இன்று அறுவதாவது அகவையில் "வைரவிழா" கண்டு வளர்ச்சியுற்று பர்ணமித்துள்ள இவ் வேளையில் வாழ்த்துரை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"நாம் என்ன நினைத்தோமோ அப்படித்தான்
நாம் எல்லோரும் இருக்கிறோம்"

–புத்தர்–

வல்லமையுள்ள எம்சமூக மக்களிற்கு என்நாளும் நல்லவை நடக்க வேண்டும் என்ற உணர்வோடு ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும், நலத்துக்கும், சீர்திருத்தப் பணிகளிற்கும் பொது அமைப்புக்களினூடாக உன்னத உயர்நிலையை எய்துவிட முடியும் என்ற எண்ணம் அன்றைய இளைஞர்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்து பன்முகத்தன்மை வாய்ந்த மனித சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் நிறுவனமயமாக்கப்பட்டிருந்து வளர்ச்சியடைய வேண்டும் என்று 1952ம் ஆண்டு "நந்தன வருஷம்" சித்திரைத்திங்கள் 20ம் நாள் "ஸ்ரீ நாராயணா" எனும் திருநாமமிட்டு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் பாலர் பாடசாலை என பல துறை நோக்கில் ஒரு குடையின் கீழ் செவ்வனே வளர்ச்சியடைந்துள்ள தென்றால் அன்றைய இளைஞர்களின் உன்னத பணியை இன்றைய தலைமுறையினர் நாம் போற்றி இவ்வேளையில் நினைவு கூற வேண்டும்.

எமது சனசமூக நிலையம் ஆரம்ப காலங்களில் பல சோதனைகள், வேதனைகளை எதிர்கொண்ட போதிலும் கால நீரோட்டத்தில் தன்பணியை என்றும் தொடர்ந்து எங்களுடைய மக்களின் வாழ்வில் எல்லா வளங்களும் கிடைக்க அரும்பாடுபட்டு பல சாதனைகளை நிகழ்த்திய ஆரம்பகால தலைவர்கள் முதல் வெள்ளிவிழா, பொன்விழா கண்டு இன்று வைரவிழாவின் "ஆறாவது தசாப்தத்தில்" நான் சிறியவனாக இருந்த போதிலும் இந்த புண்ணிய காலத்தில் சிறப்பாக எமது சனசமூக நிலையம் ஆரம்பித்த அதே "நந்தன" வருஷத்தில் "என்கடன் பணி செய்து கிடப்பது" என்பதற்கிணங்க எனக்கும்,

எங்கள் மக்களிற்கு பணி செய்ய கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை நல்கிய நாராயணனிற்கும் எம் மக்களிற்கும் என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்தையும் நன்றியையும் கூறுகின்றேன்.

மேலும் இம்மலரை வெளியீடு செய்வதன் மூலம் எம்மக்களின் வாழ்வியலை இம்மலர்வடிவில் இளைய தலைமுறையினரும் ஒரு சாசனமாக பயன்பெற முடியும். எனவே இம்மலர் வெளியீட்டு குழுவினரிற்கும் எனது வாழ்த்தை கூறுவதுடன் எமது சனசமூக நிலையம் தனது தளராத சேவையோடு பவளவிழா, நூற்றாண்டு விழா என்பன கண்டு பல்லாண்டுகாலம் உலகளாவிய ரீதியில் பல புகழ்பரப்ப வேண்டும் என்று வாழ்த்தி இந்நூலினை வாசிப்பதன் மூலம் பல உள்ளங்களில், பல சமூகங்களில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எல்லோரும் நல்லோராய் வாழ்ந்திட புதுயுகம் படைத்திட நிறைவரம் பெற்றிட வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றேன்.

தெ. சுகிர்தன்
தலைவர்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம்
பாலர் பாடசாலை

කාර්යාලය / அலுவலகம் / office: 2669277, 2690800

පොදු / பொது / General: 2669269, 2689360, 2689361

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2669278

නිවස / வதிவிடம் / Residence: 2503467

Mobile: 0777781891

E-Mail: deva@slt.lk

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2585255

ඩග්ලස් දේවානන්දා පා.ම.

டக்ளஸ் தேவானந்தா பா.உ.

DOUGLAS DEVANANDA M.P.

සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍ය

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

MINISTER OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT


# பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 60 வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

1952ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை போன்ற பிரிவுகளினூடாக இப்பகுதி மக்களின் நலன்கருதி பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இவ்வாறான பொது அமைப்புக்கள் பல எமது மக்களின் நலன்சார்ந்து பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் பணிகளும் பாராட்டத்தக்க வகையிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 60வது வருடத்தைப் பூர்த்தி செய்யும் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் பணிகளைப் பாராட்டுவதுடன் இதன் எதிர்கால பணிகள் எமது மக்களுக்கு நலன்தரும் வகையில் மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா பா.உ

செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

இணைத் தலைவர் – யாழ் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அபிவிருத்திக் குழு.

# பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அவர்களின் வாழ்த்துரை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சன சமூக நிலையம் அதன் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக வைரவிழா மலர் ஒன்றை வெளியிடுவது பற்றி எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாலர் பாடசாலை, மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் போன்ற உப அமைப்புக் களையும் உருவாக்கி கிராம மக்களுக்கு அறுபதாண்டு சேவையாற்றிய பெருமை ஸ்ரீ நாராயணா சன சமூக நிலையத்துக்கு உண்டு.

கிராம மக்களை ஒன்றிணைப்பதிலும் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளில் அவர்களை வலுப்படுத்துவதிலும் தொடர்ச்சியாக இந் நிலையம் சேவையாற்றியதுடன் தமிழ் இனத்தின் கலை, கலாசாரத்தையும், பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாப்பதிலும் இந்த நிலையம் பெரும் பணியாற்றியிருக்கிறது.

நீண்ட காலம் மக்கள் சேவையாற்றி வெற்றி கண்ட இந்த நிலையம் மென்மேலும் வளர்ந்த மக்கள் மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

**மாவை. சோ. சேனாதிராசா**

**பாராளுமன்ற உறுப்பினர்**

# வைரவிழா வாழ்த்துச் செய்தி

௬0ஆவது ஆண்டு நிறைவில் வைரவிழாவினை வரவேற்கின்ற ஸ்ரீநாராயண சனசமூக நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற வைரவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கிராமத்திற்கு புத்துயிர் ஊட்டுகின்ற பணிகளை மேற்கொள்கின்ற சனசமூக நிலையங்கள் காலமாற்றத்திற்கேற்ப கிராமங்களை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அழிவடைந்து வருகின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணி பாதுகாக்கும் ஆரம்ப செயற்பாடுகள் கிராமங்களிலிருந்தே தோற்றம் பெறல் வேண்டும். இவற்றுள் சமூக, கலாசார சீர்கேடுகளினை கட்டுப்படுத்துவதற்கு சனசமூக நிலையங்கள் நல்லதொரு பங்களிப்பினை வழங்கமுடியும்.

பல சனசமூக நிலையங்கள் பத்திரிகைகளை வாசிக்கின்ற வாசிப்பு இடமாகவும், மாலை வேளையில் அரட்டை அடிக்கும் அரங்கமாகவும் மாறிவருகின்றது. கிராமத்தின் பல தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும், அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கான இயங்குதளம் சனசமூக நிலையங்களுக்கிடையேதான் இருக்கின்றது. எனவே, இவ்வியங்குதளத்தை சரிவர செயற்படுத்தப்படுகின்ற போதே குறித்த கிராமங்கள் அதிதுரிதமான ஓர் வளர்ச்சிப் போக்கை எட்ட முடியும்.

மூன்று தசாப்த காலமான யுத்த நடவடிக்கைகளால் பாதிப்புற்ற எமது தேசத்தை கட்டியெழுப்புவதற்கு சனசமூக நிலையங்கள் உந்து சக்தியாகவிருந்து செயற்படும்போது கிராமங்கள் நல்லதொரு வளர்ச்சியினை அடையும் என்பது உறுதி.

**சில்வேஸ்திரி அலென்ரின்**
யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone 021-222 2235
ෆැක්ස් / பக்ஸ் / Fax 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. Message from GA
ඔබේ අංකය / உமது எண் / Your No.
දිනය / திகதி / Date 16.03.2012

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

கலை, கலாசார விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட கோண்டாவில் கிழக்கு வாழ் மக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு 1952ம் ஆண்டு அமைக்கப்பட்ட ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது தனது மகத்தான சேவைகளின் வளர்ச்சியில் இன்று 60வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடவிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய தாகும். ஒரு சமூகத்தின் கட்டமைப்பு அந்தக் கிராமத்தின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. கிராமத்தின் வளர்ச்சி அந்தக் கிராமங்களில் இயங்கும் பொது அமைப்புக்களில் தங்கியுள்ளது. இந்த வகையில் இக் கிராமத்தின் தேவைகளை அடையாளம் கண்டு அத் தேவைகளைச் செவ்வனே நிறைவேற்றுதலைத் தம் நோக்கமெனக் கொண்டு கல்வி கலாசாரம், விளையாட்டு, சமயப் பணிகள் என்பவற்றில் ஈடுபட்டு அக் கிராமத்தின் வளர்ச்சியை அடையாளப்படுத்தி இந்நிலையம் விளங்குவது பெருமைக்குரிய விடயமாகும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டு சிறப்புடன் வளர்ச்சிகண்டு நிமிர்ந்து நிற்கும் இச் சனசமூக நிலையத்தின் படிமுறையான வளர்ச்சியின் சான்றாகக் கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகியன தோற்றம் பெற்று இக் கிராமவாழ் மக்களுக்குப் பயன்மிகு சேவைகளையாற்றி வருகின்றன. தனிமரம் தோப்பாகாதென்பதற்கிணங்க சமூக நலனில் அக்கறை கொண்ட பலரும் ஒன்றுசேர்ந்து இச் சனசமூக நிலையத்தை நடாத்தி அதன் மூலம் கோண்டாவில் கிழக்குக் கிராமத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வது மிகவும் பாராட்டுதற்குரியது. இக்கிராம மக்களின் வளர்ச்சிக்காக அரும்பணிகளாற்றி வரும் இச் சனசமூக நிலையம் தனது சூழலில் வசிக்கின்ற மக்களின் தேவைக்கேற்ப மென்மேலும் வளர்ச்சியடைந்து மக்களை நல்வழிப்படுத்தும் பயனுள்ள பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும், இதன் அறுபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் சார்ந்துநிற்கும் தகவல்களை உள்ளடக்கி வெளி வரவுள்ள சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலர்,
யாழ். மாவட்டம்.

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் தனது அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட இருக்கும் வைரமலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு கிராமமும் முன்னேற்றமடைவதற்கு அங்குள்ள அடிமட்ட நிறுவனங்களின் பங்கு அளப்பரியது அவற்றின் திறமையான செயற்பாட்டிற்கு அவற்றின் சிறந்த நிர்வாகமே மூல காரணமாகும். எனவே அடிமட்ட நிறுவனங்களான சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றனவற்றின் சிறந்த செயற்பாடுகளுக்கு அக்கிராம மக்களின் ஒத்துழைப்பும் நம்பிக்கையும் மிகவும் அவசியமானவை. அந்த வகையில் மக்களினது ஒத்துழைப்புடனும் நம்பிக்கையுடனும் கடந்த அறுபது வருடங்களாக ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் சிறந்த சேவையாற்றி வருகிற தென்றால் அது மிகையாகாது. பல சனசமூக நிலையங்கள் பெயரளவில் மட்டுமே இயங்கி வருகின்றன. ஆனால் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது மற்றவற்றிற் கெல்லாம் முன்னோடியாகவும் எடுத்துக்காட்டாகவும் இயங்கி வருகின்றது.

சிறந்த சேவையாற்றி நன்மதிப்புடன் திகழும் இச் சனசமூக நிலைய நிர்வாகிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களுடைய சேவையைப் பாராட்டுவதுடன் வைரவிழா மலர் சிறப்புறவும் இந்நிலையம் தொடர்ந்தும் பல்லாண்டு கள் சிறந்த சேவையாற்றவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. பா. செந்தில்நந்தனன்**
பிரதேச செயலர்,
நல்லூர்

# வாழ்த்துரை

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே சனசமூக நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. சுதந்திரம் அடைந்த ஆண்டுகளை அண்மிய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது இன்று தனது 60வது ஆண்டு விழாவினை கொண்டாடுவதனையிட்டு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன்.

ஆரம்ப காலங்களில் இளைஞர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் கழிப்பதற்காக உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்களானவை இன்று சனசமூக அபிவிருத்தியில் பல்வேறு வகைகளில் பங்களிப்பினை வழங்கி வருகின்றன.

சனசமூக நிலைய இயக்கங்களானவை வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் சமுதாய அபிவிருத்தியில் அளப்பரிய பங்களிப்பினை வழங்கிய அமைப்புக்களாகும். பின்வந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட போர் சூழ்நிலைகளினால் வளர்ச்சி பாதையில் செல்ல முடியாதவையாகவே மாறின.

ஆயினும் இன்று நல்லாட்சியினை ஏற்படுத்தும் வழிவகைகளில் அரசு, சிவில் சமூகம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்குபணி பற்றி விரிவாக பேசப்பட்டு வருகின்றது. அவ்வகையில் சனசமூக நிலையங்கள் தங்கள் மரபார்ந்த செயற்பாடுகளிலிருந்தும் விலகி கிராம மட்ட அபிவிருத்தி அலகுகளாக மாற்றப்பட வேண்டிய தேவையினை எமது திணைக்களம் உணர்ந்து நிற்கின்றது.

திணைக்களம் முன்னெடுக்கும் அபிவிருத்தி பணிகளில் சனசமூக நிலையத்தின் பங்குபற்றலை அதிகரிப்பதற்குரிய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதாவது அபிவிருத்தியின் பங்காளர்களாக, கிராம மட்ட அமைப்புகளை உள்வாங்கி மக்கள் தங்கள் பிரச்சனைகள் தாமே விளங்கி, அவற்றிற்குரிய தீர்வுகளை அவர்களே உருவாக்குவதற்குரிய பொறிமுறையினை உருவாக்குவதற்கு சனசமூக நிலையங்கள் மிகச் சிறந்த அமைப்புக்கள் என்பதில் ஐயமில்லை.

ஒரு பொது அமைப்பின் அறுபது (60) ஆண்டுகால வாழ்வு என்பது குறுகிய காலம் அல்ல, அது ஒரு நீண்ட காலமாகும். இக் காலப்பகுதியில் பல்வேறு சவால்களை சந்தித்தே சனசமூக நிலையமானது வளர்ச்சி பாதையில் அடியெடுத்து வைத்து வந்துள்ளது. இச் சாதனைகள் தொடர மேலும் என் வாழ்த்துக்கள்.

**சே. பிரணவநாதன்**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

# முதல்வர் - மாநகர சபை யாழ்ப்பாணம்

# නගරාධිපති - යාපනය මහනගර සභාව

# Mayor - Municipal Council Jaffna

## பணி சிறக்க வாழ்த்துகிறேன்

வைரவிழாக் காணும் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் கோரிக்கைக்கமைய வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு கிராமத்தின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் அக் கிராமத்தில் அமைந்துள்ள முன்பள்ளிகள், பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள் ஆற்றி வரும் சேவையை அளவிட்டுக் கூற முடியாது. இவற்றுள் சனசமூகநிலையங்கள் வகிக்கும் பங்கு அக்கிராமத்தின் வளர்ச்சியில் முக்கியமான ஓரிடத்தைப் பெற்றுள்ளது.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை முதலியவற்றை உள்ளடக்கி அப்பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவையை மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மக்கள் பணியில் அறுபதாண்டு காலம் கால் பதித்து சேவையாற்றி ... ்ச் சனசமூகநிலையம் மேலும் மேலும் தனது பணிகளை ... க்கு பணியாற்ற வேண்டும் என வாழ்த்துகின்(றேன்)

# 60வது ஆண்டு அகவை நிறைவு விழாவிற்கு எனது நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் என முப்பரிமாண வளர்ச்சி பெற்று இன்று 60வது அகவை நிறைவு விழாவினை வெகு சிறப்போடு முன்னெடுத்து வைரவிழா மலரினை வெளியீடு செய்யவுள்ளது. எமது சபை எல்லைக்குள் நல்ல முறையில் இயங்கிவரும் சன சமூக நிலையங்களில் மேற்படி நிலையமும் ஒன்றாகும். மக்களின் பங்களிப்போடு, மக்களின் தேவையை அறிந்து வருடம் தோறும் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்திவருவதும், இதற்காக இரண்டு நாட்கள் அனைத்து பொது மக்களும் ஒன்றுகூடி வயது வேறுபாடின்றி விளையாட்டு நிகழ்வில் மனமகிழ்வோடு கொண்டாடுவது ஆரோக்கியமான சமூகத்திற்கு இன்றைய காலகட்டத்தில் மிகமிக இன்றியமையாததும் வரவேற்கத்தக்க விடயமுமாகும்.

மேலும் வருடாவருடம் தெரிவு செய்யப்படும் இந்நிலையத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் அனைவரும் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருவதனால் இந்நிலையம் தொடர்ந்தும் நல்ல முறையில் இயங்கி இன்று 60வது அகவை நிறைவு விழாவினை கொண்டாடுவதுடன் அதனைச் சிறப்பிக்கும் முகமாக வெளியிடப்படும். இம்மலர் மலர்ந்து இந்நிலையத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையம் மேலும் பலதுறைகளிலும் சிறப்புப் பெற்று தரமான நிலையமாக விளங்க வேண்டுமென எனது மனமார்ந்த பாராட்டினையும் வாழ்த்தினையும் நல்லூர் பிரதேச சபையின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.


மே. சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை

# நல்லூர் பிரதேச சபை உறுப்பினரின் வாழ்த்துரை

வைரவிழாக் காணும் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் வளர்ச்சியை கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஒரு சனசமூக நிலையம் அக்கிராமத்தின் முதுகெலும்பு ஆகும். அந்த வகையில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் பெரு விருட்சமாக வளர்ந்து பல துறைகளிலும் அக்கிராம மக்களுக்கு நிழல் பரப்பிக்கொண்டிருக்கிறது. கல்வி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம், தொழில்துறை, விளையாட்டு போன்ற துறைகளில் மிகமிக வளர்ச்சி அடைந்துள்ளது.

சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களான எமது மக்கள் தாங்கள் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக தாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுதிரண்டு 1968ம் ஆண்டிலிருந்து சனசமூக நிலையத்தினூடாக கிராமசபை, பிரதேச சபைகளுக்கு 3 அங்கத்தவர்களை தெரிவு செய்து சபையில் குரல் ஓங்கி ஒலிக்கச் செய்துள்ளனர். இவர்கள் இவ் ஒற்றுமையை தொடர்ந்தும் பேணிக் காப்பார்கள் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

எமது கோண்டாவில் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களினுள்ளும் நல்லூர் பிரதேச சபையின்கீழ் உள்ள மொத்தம் 42 சனசமூக நிலையங்களினுள்ளும் எமது ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் வைரம் பதித்து முதன்மை பெற்று பிரதேச சபையின் நன்மதிப்பை பெற வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

**நா. சிவலோகநாதன்**
உறுப்பினர்
நல்லூர் பிரதேச சபை

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் அவர்களது வாழ்த்துச் செய்தி

யாழ் கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் தனது 60வது ஆண்டினைப் பூர்த்தி செய்கின்றது. இதனை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துரை ஒன்றினை வழங்க வாய்ப்பு கிட்டியதையிட்டு முதலில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பில் நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

1952ம் வருடம் நந்தன வருடம் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் 2012ம் வருடம் நந்தன ஆண்டில் தனது 60வது ஆண்டினைப் பூர்த்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கோண்டாவில் பகுதி மக்களுக்கு பல்வேறு துறைகள் சார்ந்த நலன்தரும் பணிகளை முன்னெடுத்து வருகின்ற ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமானது இப்பகுதி மக்களின் நல்ல வரவேற்பினையும் பெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை என தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ள ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டு மென எதிர்பார்த்து அதன் வளர்ச்சியுடன் தொடர்புடைய அனைவருக்கும் நன்றி தெரிவித்து, வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**க. கமலேந்திரன்**
பிரதம அமைப்பாளர்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
யாழ்மாவட்டம்.

# வாழ்த்துச் செய்தி

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்டு இயங்கிவரும் சனசமூக நிலையங்கள் பல இருந்தாலும் சிறப்பாக இயங்குகின்ற சனசமூக நிலையங்களுள் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமும் ஒன்றாகும். எந்த நோக்கத்திற்காக ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் உருவாக்கப்பட்டதோ அந்த இலக்கை அடையும் மையமாக இது பரிணமித்துக் கொண்டிருக்கிறது. இச்சனசமூக நிலையம் காலங்காலமாக நல்ல நிர்வாக கட்டமைப்பும், ஒற்றுமையும், அர்ப்பணிப்பும், பரந்தநோக்கும் கொண்டு சேவையாற்றிவருவது இதன் சிறப்பம்சமாகும். இவைதான் இதன் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் ஏதுவாகின்றன.

தனக்கென ஒரு முன்பள்ளி, தனக்கென ஒரு விளையாட்டுக் கழகம், தனக்கென ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை உருவாக்கி அதன்மூலம் தனது கிராம மக்களின் மேம்பாட்டிற்காக கலை, கலாசாரம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவற்றை வலுவூட்டி கிராமத்தை மிளிரச்செய்கிறது. அத்துடன் நூலக சேவையை வழங்கி வாசிப்புபழக்கத்தை இளைஞர், யுவதி, முதியோர், சிறுவர் எல்லோருக்கும் நல்லதொரு சேவையை வழங்கிவருகின்றது.

நிர்வாகக் கட்டிடங்கள், பொதுக்கட்டிடங்களை காலத்திற்கு காலம் ஒழுங்காக நெறிப்படுத்தி தனது கிராமமக்களின் மேம்பாட்டிற்கான தீர்மானங்களை செயல்படுத்தி நல்லதொரு கிராமத்தையும், நல்ல பிரஜைகளையும் இச்சனசமூக நிலையம் உருவாக்கி வருகிறது. பிரதேச சபையினால் நடாத்தப்படும் கூட்டங்களிலோ, போட்டிகளிலோ ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் பங்குபற்றத் தவறாது. இது இச்சனசமூக நிலையத்தின் சிறப்பான பண்பாடும்.

சித்திரைப் புத்தாண்டில் தொடர்ந்து ஒருவாரம் பழம் பெரும் பண்பாட்டு விளையாட்டுக்களை தொடர்ச்சியாக நடாத்தி வருவது இந்நிலையத்தினால் மேற் கொள்ளப்படும் ஒரு பெரும் விழாவாகும். இது அக்கிராம மக்கள் அனைவரையும் மகிழ்வூட்டும் நிகழ்வாகும். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றத்தினால் ஏற்படுத்தி நடாத்தப்பட்ட சிறந்த சனசமூக நிலைய தெரிவுப் போட்டியில் "ஸ்ரீ நாராயணா"3ம் இடத்தைத் தட்டிக்கொண்டது பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது. இனி வருங்காலங்களில் முதலாவது இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பது எனது ஆசை.

தொடர்ந்து "ஸ்ரீ நாராயணா" தனது அயரா உழைப்பினாலும், விடாமுயற்சி யினாலும், பல்வேறு தனது கிராம அபிவிருத்தி திட்டங்களால் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்களாலும் பங்குபற்றுவதுடன் மேன்மேலும் தனது சேவையை விஸ்தரிப்புடன் மக்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களையும் அடைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி. சந்திராதேவி சுபாஸ்சந்திரன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம்
பிரதேச சபை, நல்லூர்.

# வாழ்த்து மடல்

நலம் சுரக்கும் நாராயணாயெனும் நாமம் பூண்டு
விரிகடலும் நீள் விசும்பும்
நிலமைந்தும் சேர்ந்து வாழ்ந்த நித்திமொயிலங்கும்
சனசமூக நிலையமே நீ வாழி?
குலமுறை வழுவா தொழுகும் குண முடையோர் போற்ற
அகவையறுபதில் தடம் பதித்தனையே
அலங்கார மண்டபத்தில் ஆரோகணித்திருக்கும் உனக்கு
பாலாபிஷேகம் செய்தோம் நீ வாழியவே!

கோண்டாவிழுறை கொற்றவனாம் நீராழி நிறத்தன்
வல்லீபுரநாதன் திருவருளோடும்
புண்ணியம் நிறையூரில் புதுமைகள் பெருக மறுமலர்ச்சி
தனைத்தோங்க வித்தானவனே நீ வாழி!
எண்ணரும் பளுசுமந்து ஏற்றமிகு பணிகளாற்றி
ஆணிவேரொப்ப ஆதாரம் தந்த
அண்ணலேவுனக்கு அணையா விளக்கேற்றி நாம்
ஆராதனை செய்தோம் நீ வாழியவே!

நிறைந்திடும் தத்துவங்கள் நிலை பெறுமாகமங்கள் நீரால்
யூறும் திருக்கோயிலுள்ள வூரில் நீயும்
கறையாய் நல்லமுதாய் ஆவின்பாலாய் உள்ளும்தோறும்
இனிக்கும் தமிழாய் வாழ்பவனே நீ வாழி!
பொறையில் நிலமாய் பொன்னீன் குணமாய் கங்குல் பகலாய்
தூங்கா விழியினாய் தக்க துணையாய்
இறையாய் சேவகனாம் தோழனாய் இணைந்தே எம்மொடு
ஒன்றி நின்ற நாராயணா நீ வாழியவே!

அன்புச்சோலையாய் அறிவூட்டும் சாலையாய் பண்புதனை
யூட்டும் பாசறையாய் சீலம்நிறை
ஆன்மீகம் வளர் ஆனந்தக் கோயிலாய் திகழும் நீ வாழி!
அபிவிருத்தி சங்கமும் இணைந்த பிறவுமுயர

முன்னின்றுழைத்த முன்னவர்க்கு முதல் வணக்கம் செலுத்தி
ஆக்கி வைத்தி பெருந்திறனை யெண்ணி
நன்றியெனும் நன்னெறியோம்பி அவர் வழி யொழுகி
நாமும் அவர் புகழ் பாடுவோமே!

கல்வியெனும் பல்கடலில் அறிவெனும் கலமோட்டி
கரையேறும் முதற்படியாம் முன்பள்ளிதனை
செல்வச் சிறார்களுக்கு நிறுவி எழுத்தறியும் செம்மையறம்
செய்தார்க்கு உந்து சந்தியான நீ வாழி!
வல்லீபுரநாதன் சுடராழி சுந்தரன் வண்ணத் தேரேனும்
தெய்வத் திருப்பணி ஈடேற
வல்லமை தந்த திவ்வியனே நாராயணா வான்புகழ்
கொண்ட வள்ளலே நீ வாழியவே!

திங்கள் முகத்தில் திகழும் குறுஞ்சிரிப்பும் திருக்கரத்தில்
மணிக்கொடியும் கொண்டுயர்
பொங்கு தமிழ் மணக்கும் பேர்பெறு திருவூரில்
ஆறு பத்தாண்டுகள் அகலாதிங்கே
செங்கமல பீடத்தில் செம்மலே நீயிருந்து எமக்கு
வளம் சிறக்கும் வாழ்வின்பலமாக
தங்க நிகர் தலைமகனாக ஓங்கி வளர்ந்தின்று
வைரவிழா பெருவிழாவில் மனமொன்றி
மங்காத விளக்கேந்தி மாசறு கொடியுமேந்தி சக்தியாய்
வாகைபல சூடவைத்தவுனக்கு
மங்கலமாய் பண்ணிசைத்து நிறை மொழி மாந்தர் சேர்ந்தே
போற்றிடுவோம் நாராயணா நாளெல்லாம் வாழியவே!

**கந்த தியாகராசா**
காப்பாளர்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

# வைரவிழாக் காணும் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்றும் "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதும் முதுமொழிகள். இதன் பிரகாரம் மக்கள் ஒன்றுகூடிச் செயற்படும் இடங்கள் இரண்டு ஒன்று ஆலயம் மற்றையது சனசமூக நிலையம், இவை இரண்டும் கிராமத்தின் இரு கண்கள். இவ்விரண்டு கண்களும் நல்ல ஒளி பொருந்திய பார்வையிருப்பின் மக்களின் வாழ்வு சிறப்படையும். இந்நிலையில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்கின்றது. என்றால் அது 25 வயது இளைஞனாகி 50 வயதில் பொறுப்புடன் இருந்து தற்போது அனுபவமுள்ள முதுநிலையில் அறுபதை அடைகின்றது.

பல்வேறுபட்ட இடையூறுகளுக்கும் மத்தியில் எதிர்நீச்சல் போட்டு மக்களின் கல்வி பொருளாதார கலாசார விழுமியங்களை முன்னெடுத்து அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தி மாநிலம் போற்றும் மாந்தர்களாக வாழவைத்த பொறுப்பு ஸ்ரீ நாராயண சனசமூக நிலையத்தையே சாரும். அத்தகைய சிறப்புமிக்க நிறுவனம் ஒன்று அறுபதாவது அகவையை அடைவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் மேலும் இதன் பணி தொடர எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதரின் துணையையும் பெரிதும் வேண்டி அமைகின்றேன்.

**K.G. சத்தியகுமார்**
தலைவர்,
அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதர் தேவஸ்தானம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

# ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் வைரவிழாவிற்காக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக இருந்து வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இச் சனசமூக நிலையம் 1952ல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு பிள்ளையான் முத்தி, ப. சின்னத்துரை அவர்களால் காணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. திரு க. செல்லையா அவர்களால் நிரந்தர கட்டிடத்துக்கு அத்திவாரம் இடப்பட்டு அதன் பின் சனசமூக நிலையம் பாலர் பாடசாலை அமைக்கப்பெற்று தற்போது மீளப் புனரமைக்கப் பெற்று மாடிக்கட்டிடமாக அமைந்துள்ளது.

மேலும் இதன் வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்கியவர்களையும் செயற்படுத்திய நிர்வாக குழுவினர்களையும் இந்நேரத்தில் நன்றி கூறுகின்றேன். எமது நிலையம் நிலைமைக்கு ஏற்றவகையில் தற்போது மிகவும் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய கணனி பயிற்சியை ஒரு நிலையமாக அமைத்து மாணவர்களின் முன்னேற்றத்துக்கு உறு துணையாக இருக்க வேண்டும் என்றும், விளையாட்டு, கலை கலாசார போட்டிகளில் மாகாண மட்டத்துக்கு செல்வதற்கான செயற்றிறன்களை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். இவ் வைரவிழா மிக சிறப்பாக இடம்பெற வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லீபுரநாதரை வணங்கி வேண்டிநிற்கின்றேன்.

**செ. சண்முகலிங்கம்**
தலைவர் ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்கம்
தலைவர், யாழ் மாவட்ட தாச்சி சங்கம்,
நிதி உதவியாளர் பிரதேச செயலகம்,
வேலணை.

# ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்

அன்னதானசபை தலைவர் அவர்களின்
வைரவிழா வாழ்த்துச் செய்தி

எமது சமுதாயம் சீராகவும் சிறப்பாகவும் செழிப்பாகவும் வாழவேண்டும் என்ற நன்நோக்கத்திற்காகவும், கல்வியிலே மேலோங்க வேண்டும் என்ற கொள்கைக்காகவும் கஸ்ரப்பட்ட தலைவர் அ. முருகேசு அவர்கள் 1952ம் ஆண்டு கோண்டாவில் கிழக்கினிலே ஸ்ரீ நாராயணா கிராம முன்னேற்ற சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். இச்சங்கம் சிறுதுளி பெருவெள்ளம் போல் வளர்ச்சி அடைந்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் இச்சங்கம் எத்தனையோ இன்னல்களையும் துன்பங்களையும் இடப் பெயர்வுகளையும் சந்தித்த வேளையிலும் கூட இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றான் என்றால் மெய்ச்சுவதை தவிர வேறு வழியில்லை. இதற்கெல்லாம் மூலகாரணம் மூத்த உறுப்பினர்களே ஆகும். அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற விதிகளுக்கமை யவும் சங்க பற்றாளர்களாகவும் இருந்தபடியால்தான் 1977ம் ஆண்டிலே வெள்ளி விழாவையும், 2005ம் ஆண்டிலே பொன்விழாவையும் மிகவும் சிறப்பாக கொண்டாடி யதை நாம் அறிவோம். இருந்தும் இதன் வளர்ச்சி பரிணாமம் மிகவும் ஓங்கி வளர்ந்தமை யினால் 2012ம் ஆண்டிலே மிகவும் குதூகலமாக மணிவிழா கொண்டாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். தொடர்ந்தும் இச் சங்கம் ஆலம் விருட்சம் போல் வளர்ந்து பவளவிழா, நூற்றாண்டு விழா ஆகிய விழாக் களை மிகவும் செழிப்பாக கொண்டாட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டு வைரவிழா மலருக்கு எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு செ. பேரின்பநாதன்**
தலைவர்
அன்னதான சபை
ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்

# ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான இராஜகோபுர திருப்பணிச்சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் 60வது ஆண்டு வைரவிழா சிறப்புற நிகழ எமது நல்வாழ்த்துக்கள். மக்களின் வாழ்வையும் சமூக ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்காக 1952ம் ஆண்டு எமது முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த சனசமூகநிலையம் மக்களின் சகல முன்னேற்றத்துக்காக தொடர்ந்து செயற்பட்டு கிராமத்தின் கல்விச் சிறப்பு, செல்வச்சிறப்பு வளம்பெற்று விளங்கப் பெற்றதன் பயனாக எமது குலதெய்வமாகிய அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானமும் பெரும் வளர்ச்சி கண்டு இராஜகோபுரம் அமைக்கும் நிலையில் மேம்பட்டு நிற்கின்றது.

இக்கிராமத்தில் வாழ்வோர் அனைவரும் நல்ல நோக்கமும் கிராமப்பற்றும் கொண்டவர்கள். இந்த சனசமூக நிலையம் பல வளர்ச்சியில் வெற்றியைக் கண்டு 60வது ஆண்டு வைரவிழா கொண்டாடும் இவ்வேளை வாழ்த்து செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இவ்விழா சிறப்பாக நிகழ வேண்டுமென வல்லீபுர நாதரை வேண்டிநிற்கின்றோம்.

**தலைவர்**

**திரு. ஐ. இராசரத்தினம்**

இராஜகோபுர திருப்பணிச்சபை

அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தானம்

கோண்டாவில்

# அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் இவ்வருடம் 60வது அகவையை பூர்த்தி செய்வதையிட்டு நான் மனமார சந்தோஷம் அடைகின்றேன். இதன் வெள்ளிவிழா, பொன்விழா போன்ற விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டபோது அவற்றைக் கண்டுகளித்த எனது கண்கள் இவ்வருடம் இடம்பெறுகின்ற வைரவிழாவை யும் பார்த்து மகிழ்வதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

நாராயணா சனசமூக நிலையம் பல சமூகத் தொண்டர்களையும் தலைவர்களை உருவாக்கியது அதன் பலனாக இக்கிராமத்திற்கு வெளியிலுள்ள நிறுவனங்கள், அலுவலகங்களில் பல முக்கிய பதவிகளில் திறமையுடன் செயற்படுவதற்கு துணிவையும் ஆற்றலையும் கொடுத்தது எமது சனசமூகநிலையமே என்றால் அது மிகையாகாது என்று நெஞ்சத்திலிருந்து வருகின்ற பசுமை எண்ணங்களை சமர்ப்பிப்பதுடன் மேலும் இந் நிலையம் பல விழாப்பொலிவுகளைக் கண்டு பல்லாண்டு பல்லாவிரத்தாண்டு தன் சேவைகளை ஆற்ற வாழ்த்துகின்றேன்.

**திரு. நா. கிருஷ்ணபிள்ளை**

தலைவர்

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை

# வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம் தனது 60வது ஆண்டு நிறைவை சிறப்பாக கொண்டாடும் நேரத்தில் அவர்கள் வெளியிடும் வைர மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகன்றேன்.

மேலும் அங்கும் இங்குமாய் ஓடித் திரிந்த எமது சனசமூக நிலையத்தை ஓர் இடத்தில் அமர்த்த அரும் பாடுபட்டவர்கயைும், அதற்கு காணியை வழங்கிய மூத்தி அவர்களையும் சின்னத்துரை அவர்களையும் நினைவு கூர்ந்து

மென்மேலும் இதுவரை உழைத்த தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்றி கூறி மேலும் மைதானம் கட்டிடங்கள் என வளர வேண்டும் என்றும் இக்கிராமம் சிறப்புற வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. கந்தையா ஸ்ரீபரன்**
லண்டன்

# ஸ்ரீ நாராயணா முன்பள்ளி ஆசிரியர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

ஈழவள நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் எழில் வளம் பொருந்திய கோண்டாவில் பதியில் வல்லீபுரநாதனின் நன்னருளால் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் ஆரம்பித்து வளர்ச்சிப் படிகளின் நிமித்தம் அறுபது ஆண்டுகள் நிறைவெய்தி வைரவிழா காணும் பொன்நாளில் மிக சிறப்பாகக் கொண்டாடுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ் நாராயணா சனசமூக நிலையமானது தனித்து சனசமூக நிலையம் என்றிராது அதனுடன் பாலர் பாடசாலை, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்ற பாகங்களை உள்வாங்கி இருப்பது மிகப் பெருமை சேர்க்கிறது.

கலைகளை வளர்ப்பதற்கும் திறமைகளை வெளிக்கொணருவதற்கும், கலை கலாசார சமய நிகழ்ச்சிகள் மூலம் நற்கலைஞர்களை வளர்த்தெடுப்பதற்கும், அறிவினைப் போதிப்பதற்கும் நல்ல கல்வி மான்களை உருவாக்குவதற்கும் ஏற்ப பாலர் பாடசாலையும் தாயாகவும், தாரமாகவும், சகோதரியாகவம் பல அவதாரங்களில் மிளிர்ந்த காட்டக்கூடிய பெண்களின் அடிமைத்தனம் ஒழிந்து பெண்களின் உரிமைகள் பெற்று நல்வளர்ச்சியில் ஓங்கி நிற்க மாதர் சங்கம், உயர்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி. இன்னும் உருவாக்கி கொண்டிருக்கும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் வைரவிழா காணுகின்ற இந்நாளை நினைக்கும் போது உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

இந்நிலையமானது தற்போது வைரவிழா கொண்டாடுகின்றது "விழா மலர்" ஒன்றும் வெளியிடுகிறது. இம்மலர் வெளிவந்து நன்முறையில் பயனளிக்க வேண்டும். என்றும் இதே போன்று பவளவிழா கண்டு இன்னும் பல சேவைகள் செய்து நிமிர்ந்து விளங்க எல்லாம் வல்ல நாராயணா பெருமானின் அருளாசியை வேண்டி எமது வாழ்த்துக்களையும் கூறுகின்றோம்.

நாராயணா முன்பள்ளி ஆசிரியர்கள்
திருமதி.கிருபாகரன் மதிமாலா
செல்வி விருசினி தியாகராசா

# செயலாளரின் நோக்கில் ....

**கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றினது வரலாற்றுப் பின்னணியும் அவற்றினது வளர்ச்சிப் படிநிலைகளும்**

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகிய ஸ்தாபனங்கள் எமது பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகவும் கல்வி, கலை கலாசாரம், விளையாட்டு, சுகாதாரம், கிராம அபிவிருத்தி போன்ற சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றது. இச்சங்கத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை "வைரவிழா" இன்று (20.04.2012) வெள்ளிக்கிழமை கொண்டாடும் வேளை இச்சங்கத்தின் உருவாக்கம் அதன் வளர்ச்சிப் படிநிலைகள் பற்றியும், சங்கத்தை வளர்த்த மூதாதையினரையும், சங்க அபிமானி களின் சேவைகள் பற்றிச் சிந்திப்பதற்கும் எழுதுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றமை யினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பகுதி மக்கள் ஐம்பது ஆண்டுகளு க்கு முன்பு கல்வி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கலாசார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, கலை பண்பாட்டு விழுமியங்கள், போன்ற பல்வேறு அம்சங்களில் பிற அடக்கு முறைகளினாலும் பாதிக்கப்பட்டிருந்த வேளை, இம்மக்களின் சகல நலன்களையும் மேம்படுத்துவதற்கு சங்கம் ஒன்று தேவை என அன்றிருந்த வயோதிபர் களும், இளைஞர்களும் சிந்தித்து அதன் அவசிய த்தை உணர்ந்து 1951ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ஆம் திகதி (தென்னம்பிள்ளை புளிய மரத்தடியில்) **திரு.நா.கனகையா** தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது திரு. சி. ஐயாத்துரை, திரு. க. ஆசைப்பிள்ளை, திருவாளர்கள் பொ. மாணிக்கம், நா. தம்பிஐயா, சி. ஐயம்பிள்ளை, க. நல்லதம்பி (நல்லான்) வி. பொன்னர், மு. இராமநாதன் (தேசிகர்), க. கந்தையா, ஐ. பழனி, ஆ. முருகேசு, க. துரை, சி. கந்தையா, வேலன் – கந்தையா – கந்தன் (துள்ளுக்குட்டி) ஆகிய பெரியார்கள் சங்கத்தின் அவசியம் பற்றி பொதுமக்கள் மத்தியில் உரை யாடியும், வேறு பல அன்பர்களும் உரையாடிய பின் சங்கத்தின் அவசியம் பற்றி உணர்ந்த மக்கள் **திரு.நா.கனகையா** அவர்களை அதன் அமைப்பாளராக ஏகமனதாக மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, முதன்முதலில் **வே.மயில் வாகனம்** அவர்களால் பணம் அன்பளிப்பு செய்யப் பெற்று, அதன் பின் வேறு பல அன்பர்களின் பண உதவியுடனும், 1952 ஆம் ஆண்டு சித்திரைப் புதுவருடத்தில், தேசிய கீத கதம்ப சுற்றுலா மூலம் கோண்டாவில், அரியாலைப் பகுதியில் பணம் சேகரிக்கப்பெற்றது இப்பணச் சேகரிப்புக் கான தேசிய கீதப் பாடல்களை முத்தமிழ் செல்வன், கவிமணி, திருப்புகழ் மணி, தேசிகர் **திரு.மு.சோமசுந்தரம்** அவர்களால் இயற்றப் பெற்று இளைஞர்களுக்கு அவற்றை பழக்கி அவர்களின் ஒத்துழைப்பும் வழங்கப் பெற்றது. அதன் பின் மேற்கூறப்பட்ட பெரியோர்களின் பூரண முயற்சியால் **1952ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி** அவ்வாண்டின் தலைவராக திரு.ஆ.முருகேசு அவர்களும், செயலாளராக திரு. நா.கனகையாவும், திரு. சி. ஐயாத்துரை (அறிஞர்) அவர்கள் பொருளாளராகவும் மொத்தம் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர் கள் திரு. நா. கனகையா அவர்களால் மேற்படி சங்க இடத்தில் கூட்டப்பெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப் பெற்று திரு. கணபதி நல்லதம்பி

அவர்களின் பேராதரவுடன் அவருடைய சகோதரியான திருமதி. கந்தையா தையல் அம்மா அவர்களின் வீட்டின் தெற்குப்புற விறாந்தையில் மேற்கூறப்பட்ட முதலாவது நிர்வாக சபையுடன் 1952ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி **"ஸ்ரீ நாராயணா நூல் நிலையம்"** எனும் பெயரில் செனற்றர் திரு.பொ.நாக லிங்கம் என்பவரால் சங்கம் திறந்து வைக்கப் பெற்று சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பெற்றது. சங்க நடவடிக்கையில் இவ் நிர்வாக சபையின் பூரண முயற்சியினாலும், பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பாலும், சங்கத் தேவைக்காக ஒரு பெரிய மேசையும், இரண்டு பெரிய வாங்குகளும் செய்யப் பெற்றதுடன் தினசரிப் பத்திரிகை, தாச்சி விளையாட்டு, கரப்பந்தாட்டம், ஊஞ்சல் விளையாட்டுக்கள் மூலம் பொது மக்கள் அனைவருக்கும் சங்கத்தின் தேவையை உணரச் செய்தார்கள். இதற்கு மேலாக அன்றைய காலகட்டத்தில் மக்களின் தேவையாக விளை யாட்டும், நாடகமும் முக்கிய பங்கு வகித்தமையால் 1953ஆம் ஆண்டு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் மறுமலர்ச்சி நாடக மன்றமும் உருவாக்கப்பெற்று நூல் நிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் நிர்வாகம் செய்யப்பெற்றன. தொடர்ந்து இவ்வாண்டு சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு தேசியகீதச் சுற்றுலா மூலம் மக்களிடம் பணம் சேகரிக்கப் பெற்று அந்நிதி மூலம் இல்ல மெய்வல்லுனர் போட்டியும் நடாத்தப்பெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் மறுமலர்ச்சி நாடக மன்றத்தின் முயற்சியால் "மந்திரகமாரி" எனும் நாடகம் அரங்கேற்றப் பெற்று முதலாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பெற்றது. இத்தகைய தேசிய கீத சுற்றுலாவும், இல்ல மெய்வல்லுனர் போட்டியும் எமது சங்க வளர்ச்சியில் இன்றும் பிரதான நிகழ்வுகளாக அமைகின்றன.

மக்களின் பொருளாதார நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் குடிசைக் கைத்தொழிலை மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தும் நோக்குடன் சங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக 1956ஆம் ஆண்டு **தேசிகர் மு.சோமசுந்தரம்** தலைவராக இருந்த காலப்பகுதியில் குடிசைக் கைத்தொழில் திணைக்களத் தலைவர் திரு.எஸ். கந்தவனம் அவர்களால் "பாரதி ஐக்கிய நெசவு நிலையம்" ஆரம்பிக்கப்பெற்றது. இதன் பயனாக பல ஆண்களும், பெண்களும் பலர் குடிசைக் கைத்தொழிலை மேற்கொண்டு தமது இயல்பு வாழ்க்கை நிலையின் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்றமையினால் அக்காலப் பகுதியில் எமது கிராமத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டது. இவ்வாண்டு காலத்திலேயே நூல் நிலையத்தின் ஒற்றுமையினையும் வளர்ச்சியையும் கண்ட (D.R.O) அவர்களால் ஸ்ரீ நாராயணா நூல் நிலையம் அரசாங்கத்தில் **"ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமாக** (J/V/C 14/CC/350) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றது. இதன் மூலம் சனசமூக நிலையத்தின் சேவை மேம்படுத்தப்பெற்றது.

1957ஆம் ஆண்டு **திரு.சி.ஐயம்பிள்ளை** அவர்கள் தலைமையில் திரு கந்தன் – நாகன் அவர்களிடமிருந்து அரைப்பரப்பு காணி விலைக்கு வாங்கப்பெற்றது. இவ் வருடம் சங்க இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட திரு.வேலன் வல்லியின் காணியில் கொட்டில் அமைத்து சங்க நடவடிக்கைகள் தொடரப்பெற்றது.

1959 ஆம் ஆண்டு சமூக மக்களின் மத்தியில் பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், எமது சமூகத்திற்கிருந்த அடக்கு முறைகளை உடைத்தெறியும் நோக்கத்தற்காகவும், சனசமூக நிலையத்தில் **திரு. க. கிருஷ்ணராஜா** அவர்களின் தலைமையில் சமூக சீர்திருத்த வாலிபர் கழகம் ஆரம்பிக்கப்பெற்று மக்களின் விழிப்புணர்ச்சிக்கும், சமூக அடக்குமுறையில் இருந்து விடுபடவும், பல வருடங்களாக பல அகிம்சைப் போராட்டங்களையும், அரசாங்கத் தலையீடுகள் மூலமாகவும் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டது.

இதற்கு அன்றைய இளைஞர்களும் சங்க அபிமானிகளும் பலவிதமான துன்பங்ளையும், பல கஸ்டங்களையும் அனுபவித்ததன் பயனா கவே இன்று எமது சமூகம் மேம்பாடு அடைந்து விளங்குகின்றது என்பதனை யாரும் மறைக் கவோ, மறுக்கவோ முடியாத உண்மைகளாகும்.

1960ஆண்டு **டாக்டர் எம். ஐ. பூபால சிங்கம்** (சமாதான நீதிவான்) அவர்கள் தலைவ ராக இருந்த காலத்தில் எமது சங்கமானது நிலையான ஒரு இடத்தில் நிறுவப்பட வேண்டும் என கருதப்பட்டு திரு.வி.மு. கந்தையா அவர் களின் பூரண முயற்சியால் திருமதிபிள்ளையான் முத்தி ஞாபகார்த்தமாக ஒன்றேகால் பரப்புக் காணி அவரின் உறவினர்களால் அன்பளிப்புச் செய்யப் பெற்றது. இக் காணியில் தற்காலிக கொட்டில் ஒன்று அமைக்கப்பெற்று சங்க நட வடிக்கைகள் நிரந்தரமாக இயங்க ஆரம்பித்தது.

பின்பு சங்கத்திற்கு நிலையான கட்டிடம் தேவையென சங்க அபிமானிகள் சிந்தனையின் பயனாக 1962ம் ஆண்டு **திரு.க. செல்லையா** அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் திரு. பாலச்சந்திரன் (D.R.O) அவர்களால் புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் (சங்குஸ்தாப னம்) இடம்பெற்று பத்திரிப்புவரை வேலை நிறைவு பெற்றது.

1963ம், 1964ம் ஆண்டு காலப்பகுதி யில் **திரு.நா. கனகையா** அவர்கள் தலைமையில் சங்கத்தின் சகல சுவர்களும் கட்டி முடிக்கப் பெற்றது. 1966ம் ஆண்டு திரு.வே.வ. கோபால சிங்கம் அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் சங்கக் கட்டிடத்தின் கூரை வேலை, பூச்சு வேலை, நிலவேலைகள் யாவும் பூர்த்தியாக்கப் பெற்று **திரு. சிவஞானம்** (D.R.O) அவர்கள் இக்கட்டிடத் திறப்பு விழாவிற்கு பிரதம அதிதி யாக கலந்து கொண்டு அவர்களால் இக்கட்டிடம் திறந்து வைக்கப்பெற்றது. ஊர் மக்களின் உதவியுடனும், பொது மக்களின் பலவிதமான அன்பளிப்புக்கள் மூலமும் இக்கட்டிடமானது திறந்து வைக்கப் பெற்றவிடயம் எமது சங்க வளர்ச்சியில் மிகமிக மகத்தான தொன்றாகும்.

எமது மக்களின் ஒற்றுமையையும், சங்க வளர்ச்சி, சங்கத்தின் நேர்மையான நிர் வாகத் திறமை கண்டு 1967ம் ஆண்டு **திரு.வே. வ.கோபாலசிங்கம்** தலைவராக இருந்த காலத் தில் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச்சங்கம், (R/D/J/57/A/02) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப் பெற்றது.

1968ம் ஆண்டு **திரு.நா.சங்கரப்பிள்ளை** அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் எமது மக்களின் ஒற்றுமையை வெளியுலகிற்கு காட்டும் நோக்குடன் செயற்பட்டு சங்கத்தின் முயற்சியால் எம்மக்களின் பிரதிநிதியாக கொக்குவில், கோண்டாவில் கிராமசபை 14ம் வட்டார அங்கத்தவராக **திரு. ப. சின்னத்துரை** அவர்கள் தெரிவானார். இதன் பயனாக எமது நிலையத்தின் முன் பிரதான வீதி பொதுமக்க ளின் உதவியுடன் அகலமாக்கி சீராக்கப்பெற்றது. திரு. ப. சின்னத்துரை அவர்களின் முயற்சியால் கொக்குவில் கிராமசபை மூலம் குறிப்பிட்ட இவ் வீதி தார் இடப்பெற்று செப்பனிடப் பெற்றது. அரசடி வைத்திய சாலை (ஆஸ்பத்திரி) வீதியில் இருந்து எமது ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான ஆலயம்வரை மின்சார விநியோகம் இணைக்கப் பெற்றது.

1970ம் ஆண்டு தலைமைத்துவம் இளைஞர் கைக்கு மாற்றம் செய்யப்பெற்று **திரு. சு.சண்முகநாதன்** அவர்கள் தலைமைப் பதவியை ஏற்று எமது சங்க ஆண்டு விழாவும் விளையாட் டுப் போட்டிகளும், வெகு சிறப்பாகக் கொண்டா டப்பெற்றது.

1971ம் ஆண்டு **திரு.நா.கனகையா** அவர்கள் தலைமையில் எமது மாணவர்கள்

கல்வி பயிலும் யா/கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மலசலகூடம் எமது சங்கத்தினால் சிரமதானமாக அமைக்கப்பெற்றது. தொடர்ந்தும் 1972ம் ஆண்டின் தலைவராக திரு. நா. கனகையா இருந்த காலத்தில் எமது மக்கள் இலகுவாக உணவுப் பொருட்களை பெறக்கூடிய வகையில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை இலக்கம் 19னை உடைய நாராயணா என்னும் விற்பனை நிலையம் எமது சங்கத்தின் முயற்சி யினால் திரு. த. மயில்வாகனம் அவர்களின் இல்லத்தில் திறந்து வைக்கப்பெற்றது.

1974ம் ஆண்டு எமது பாலர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் குறிப்பிட்ட இவ்வாண்டின் தலைவரான **திரு. நா. கனகையா** அவர்களின் தலைமையில் முதன் முதலாக பாலர் பாடசாலை சங்கக் கட்டிடத்தில் அமைக்கப்பெற்று இதன் முதல் ஆசிரியராக திருமதி தவமணி சுப்பிரமணியம் அவர்கள் நியமனம் செய்யப்பெற்றார். அப்பொழுது முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இப் பாலர் பாடசாலையில் கல்வி பயின்றனர். இவ்வாண்டு அரசாங்க விசேட நன்கொடைப் பண உதவி யுடனும், பொதுமக்களின் சகல உதவியுடனும் முன் மண்டபம் பூர்த்தி செய்யப் பெற்று திறப்பு விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. இக் கட்டிடத்தை திரு. விமல் அமரசேகரா (அரசாங்க அதிபர்) அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

1975ம், 1976ம் ஆண்டு காலத்தில் திரு. க.கதிரேசு அவர்கள் தலைமையில் பாலர் பாடசாலைக்கு ஒரு நிரந்தர கட்டிடம் அமைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டு **திரு. ப. சின்னத்துரை** அவர்களிடமிருந்து ஒன்றேகால் பரப்புக்காணி அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றது. இதில் பொது மக்களின் ஆதரவுடனும், யாழ்/லயன்ஸ் கழகத்தின் உதவியுடனும் பாலர் பாடசாலை மண்டபம் அமைக்கப்பெற்றது. இதற் கான ஓடுகள் திரு. க. கனகராசா (அதிபர், மில்க் வைற் ஸ்தாபனம்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. இக்கட்டிடத்தின் திறப்பு விழா 23.05.1957ம் ஆண்டு D.R. யோகு பசுபதி (தலைவர் யாழ்/லயன்ஸ் கழகம்) அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. பல லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளும் இவ் விழாவில் கலந்து கொண்ட னர். இவர்களுடன் இவ் விழாவிற்கு லயன்ஸ் கழக தலைவர் திரு. இராசேந்திரா எனும் பெரியார் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்தார் அத்துடன் இவ்வாண்டு யாழ்/லயன்ஸ் கழகத்தி னால் 10 மேசைகளும், 10 வாங்குகளும் அன் பளிப்புச் செய்யப்பெற்றது.

1977ஆம் ஆண்டு **திரு.க.கிருஸ்ணராஜா** தலைமையில் சங்கத்தின் வெள்ளிவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பெற்று, இவ் வெள்ளி விழாவினை யொட்டி சங்கத்தின் சிறப்பு மலர் ஒன்று வெளியீடு செய்யப்பெற்றது. இவ் விழா விற்கு உயர்திரு. மு. சிவசிதம்பரம் (பாராளு மன்ற உறுப்பினர் நல்லூர் தொகுதி) அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்.

1978ஆம் ஆண்டு **திரு.சி. இராசரத்தினம்** தலைவராக இருந்த காலத்தில் நல்லூர் பாராளு மன்ற உறுப்பினர் உயர்திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் பணிப்பின்பேரில் எமது கிராமத்து க்கு மின்சார விநியோகம் வழங்கப் பெற்றது. அத்துடன் எமது நிலையத்துக்கும் மின்இணைப்பு வழங்கப்பெற்றது.

1979ஆம் ஆண்டு **திரு. இரத்தினசபாபதி** அவர்களின் தலைமையில் கொக்குவில் கிராம சபையில் ஒப்பந்த வேலைகள் பொறுப்பேற்கப் பெற்று எமது கிராமத்தின் சென்-செபஸ்த்தியார் வீதி செப்பனிடப்பெற்றது. அதில் வந்த இலாபப் பணத்தினை வங்கி ஒன்றில் முதல் தடவையாக வைப்பு செய்யப்பெற்றது. அத்துடன் அரஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் (கண்ணாடி அலுமாரி) சோக்கேஸ் அமைக்கப்பெற்றது. மேலும் சங்க

நடவடிக்கை தொடர்பாக திரு.சு.இரத்தினசபாபதி யும், ந. குணசிங்கம் அவர்களும் யாழ்ப்பாணம் சென்ற வேளை பலாலி வீதியில் பலத்த விபத்துக் குள்ளாகியமை என்றும் மறக்க முடியாத நிகழ் வாகும்.

1980ஆம் ஆண்டு **திரு.ப.சின்னத்துரை** தலைவராக இருந்த காலத்தில், தமிழர் விடு தலைக் கூட்டணியினர் சமபந்தி போசன சுற்று லாவினூடாக எமது நிலையத்திற்கு வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1981ஆம் ஆண்டு **திரு. க. தியாகராசா** அவர்கள் தலைமையில் யாழ்/ லயன்ஸ் கழகத் தின் உதவியுடன் நிலைய பாலர் பாடசாலை மாணவருக்கு ஒரு மலசல கூடமும், கொக்கு வில் கிராமசபையில், வல்லீபுரநாதர் தேவஸ் தான பொதுக் கிணற்றுக்கு ஒப்பந்தம் செய்யப் பெற்றமையும், ஆலய பரிபாலன சபையுடன் இணைந்து தீர்த்தக் கிணறு ஆலயத்தின் தெற்கு வீதி பக்கமாகவும் அமைக்கப்பெற்றது.

1982ஆம் ஆண்டு **திரு. சி. வாமதேவன்** அவர்கள் தலைமையில் முதன்முதலில் நிலை யத்தில் பௌர்ணமி விழா கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான மகோற்சவத் தின் 10 தினங்களும் நிலையம் சார்பாக மண்ட கப்படி வைத்து ஆத்மீக தொண்டிலும் நிலை யத்தின் சேவை விஸ்தரிக்கப்பெற்றது.

1984ஆம் ஆண்டு **திரு.சு.இரத்தின சபாபதி** அவர்கள் தலைமையில் பிரபல ஒப்பந்த காரர் வெற்றிவேல் (உரும்பிராய்) அவர்களின் உதவியுடன் நிலைக் கட்டிடம் புனரமைப்பு செய்யப்பெற்று வர்ணங்களும் பூசப்பெற்றது. நிலைய வருமானத்தை பெருக்கும் நோக்கில் ஒரு தொகுதி இரும்புக் கதிரைகள் செய்யப் பெற்று வாடகைக்கு வழங்கியமையும் குறிப் பிடத்தக்கது.

1985ஆம் ஆண்டு **திரு. சி. தேவராஜா** தலைமையில் நிலைய முன் மண்டபத்திற்கு சுருக்குக்கேற் இடப்பெற்றமையும், மேலும் ஒரு தொகுதி இரும்புக்கதிரைகள் வாங்கப்பெற்றது.

1986ஆம் ஆண்டு **திரு.ஐ. இராசையா** அவர்கள் தலைமையில் எமது தற்போதைய சங்கத்துடன் இணைக்கப் பெற்றிருக்கும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கான அடிக்கல் இவரது தலைமைத்துவ காலத்தில் நாட்டப் பெற்றது. முதன்முதல் ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ் தான மகோற்சவத்தின் தேர்த்திருவிழா அன்று "அமுத சுரவி" அன்னதானமடம் அமைத்து அன்ன தான நிகழ்வு நிலையத்தினால் பொதுமக்களின் உதவியுடன் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப் பெற்றது. வறிய மக்களின் வீடுகளில் ஏற்படும் மரணச் சடங்கின் செலவைக் குறைப்பதற்காக பொதுமக்களின் உதவியுடன் ஒரு பிரேத வண்டி செய்யப்பெற்றது. காலப்போக்கில் அது பழுத டைந்துவிட்டது. அன்னதான மிகுதிப் பணத்தில் ஒரு கிடாரம் வாங்கி ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ் தானத்திற்கு வழங்கப்பெற்றது. அத்துடன் ஒரு தொகுதி இரும்புக் கதிரைகளும் செய்யப்பெற்றது.

1987ஆம் ஆண்டு **திரு.செ.பேரின்ப நாதன்** தலைமையில் நிலைய முன் மண்டபம் கொத்தி மீண்டும் சீமெந்து இடப்பட்டு இழுக்கப் பெற்றது. நிலையத்திற்கு வர்ணமும் பூசப் பெற்றது. அத்துடன் பாலர்பாடசாலை மாணவரு க்கு நான்கு ஊஞ்சல் அமைக்கப்பெற்று நூல் நிலையத்திற்கு பல புத்தகங்களும் சேகரிக்கப் பெற்று நூல் நிலையத்திற்கு புதுப்பொலிவு வழங்கப்பெற்றது.

1990ஆம் ஆண்டு **திரு. செ. சண்முக லிங்கம்** அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் உள்ளூராட்சித் திணைக்களம் மூலம் பாலர் பாடசாலை மாணவர்கள் பாவிப்பதற்குரிய ஒரு தொகுதி தளபாடங்கள் கிடைக்கப்பெற்றது. திரு. நா. கனகையா அவர்களின் பெரு முயற்சி

யால் கிராமத்தின் சிறிய வீதிகள் எங்கும் இலங்கை மின்சார சபையால் மின்னிணைப்புகள் வழங்கப்பெற்றன.

1991ஆம் ஆண்டு **திரு.சி.ஞானசம்பந்தன்** அவர்களின் தலைமையில் உதயன் பத்திரிகை அதிபர் திரு. சரவணபவன் அவர்களால் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரு தொகுதி தளபாடங்கள் கிடைக்கப்பெற்றது. அதுமட்டுமன்றி பாலர் பாடசாலை ஆசிரியருக்கு மேலதிக பயிற்சி வழங்கப்பெற்று பாலரின் கல்வி மேம்படுத்தப் பெற்றது.

1992 ஆம் 1993ஆம் ஆண்டுகளில் **திரு. ஐ.இராசரத்தினம்** அவர்கள் தலைமையில் 20வது வருடங்களுக்கு மேலாக எமது சமூகத்தை பல விதங்களில் பாதிப்புக்குள்ளாக்கிய "கள்ளுத் தவறணை" அகற்றப்பெற்றது. அத்துடன் தேசிய கீத சுற்றாடலின் ஒருபகுதி பணத்தில் ஒரு பெற்றோல்மக்ஸ் வாங்கப்பெற்றது. பாலர் பாடசாலை மாணவரின் கல்வியை மேம்படுத்த திரு.லிங்கவாசனால் பாலர் பாடசாலை மாணவருக்கு புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப் பெற்றது. யாழ் சர்வோதய நிறுவனத்தினதும் பொதுமக்களின் உதவியுடனும் குழாய்க்கிணறு அமைக்கப் பெற்றது. இக்கிணறு இளைஞர்களின் பெரு முயற்சியால் ஒரேநாளில் தண்ணீர் காணப் பெற்ற விடயம் மறக்க முடியாத நிகழ்வாகும். ஊரில் சிரமதானத்தின் மூலம் இரண்டு கிணறுகள் சிரமதானம் செய்து கொடுக்கப்பெற்றது. கிராம அபிவிருத்திச் சங்க உதவியுடன் வசதி குறைந்த மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு திட்டங்களுக்கு கடன் வழங்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பெற்றமையும், யாழ் சிறுகைத் தொழில் திணைக்களத்தின் மூலம் வசதி குறைந்தவர்களுக்கு நெசவு உபகரணங்கள் வழங்கப் பெற்றது. கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அந்த உபகரணங்கள் சேதமாக்கப்பெற்றன. வீடமைப்பு திணைக்களத்தின் உதவியுடன் இலவசமாக வீடு வசதியற்ற வறிய குடும்பங்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கப் பெற்றது. அத்துடன் எமது நிலையத்தின் மறு மலர்ச்சி விளையாட்டுக் கழகமானது (RDJ 57/A/02) என்னும் பதிவிலக்கத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பெற்றது. திரு.க. பாஸ்கரன் (கொலண்ட்) அவர்களால் ஒரு மேசையும் அன்பளிப்பு செய்யப்பெற்றது. இவ்வாண்டு நடைபெற்று முடிந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் பின்னர் அவ்வாண்டு இல்லத் தலைவர்களால் எமது நிலையத்திற்கு பல பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பெற்றது.

1994ஆம் ஆண்டு **திரு.செ.சண்முகலிங்கம்** அவர்கள் தலைமையில் சங்கத்தின் வளர்ச்சி பற்றிய சிறப்பு மலர் ஒன்று வெளியிடப் பெற்றது. இம்மலரும் இன்று நமது சங்கம் வெளியிடும் விழா மலருக்கு பேருதவியாக வுள்ளது. மேலும் மாணவர்கள் மத்தியில் சமய அறிவுப்போட்டி, பாடசாலை மட்டங்களில் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பெற்றமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

1995ஆம் ஆண்டு **திரு.ந.ஸ்ரீதரன்** தலைமையில் சங்கத்தின் 43 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு "சங்கோசை" என்னும் நிலைய வரலாற்றை உள்ளடக்கிய சிறப்புமலர் ஒன்று வெளியிடப்பெற்றது. இம்மலரும் எமது இன்றைய வெளியீடான வைரவிழா மலருக்கு உதவியாக இருந்தது. இக்காலப் பகுதியில் பல அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்பட்டன.

| அன்பளிப்பு செய்தவர்கள் | அன்பளிப்பு பொருட்கள் |
|---|---|
| 1. இல்லத்தலைவர்கள் | கம்பளம், மணிக்கூடு, கரம்போட், பெற்றோல்மகஸ், டாம் போட்டு, கரப்பந்து, வலை |

2. Dr. திரு தெய்வேந்திரா ஒரு தொகுதி நூல்கள்
3. திரு.வை. கந்தசாமியின் சிறுவர் பூங்கா ஊஞ்சல்
முயற்சியினால் ஒரு தொகுதி புத்தகங்கள்
யூனிசெவ்
4. திரு. சி. லிங்கவாசன் " "
5. சத்திய சாயிபாபா " "
சமுர்த்தி நிலையம்

1995ஆம் ஆண்டு நாட்டினது யுத்த அனர்த்தங்களினால் நமது கிராமத்தினூடாக அமைக்கப்பெற்ற இராணுவ வேலி காரணமாக எமது கிராம மக்களின் காணிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தமையும் அவற்றினை நீக்கி அக்காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் காணியில் குடியேறுவதற்கும் 1998ஆம், 1999ஆம் ஆண்டு காலங்களில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரின் உதவியுடனும், புல்டோசர் இடப்பட்டு காணிகளில் இருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்காக அக்காணிகள் வழங்கப்பெற்றது. அதுமட்டுமன்றி வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் நோக்குடன், நல்லூர் பிரதேச சபை செயலகத்தின் உதவியுடன் G.T.Z நிறுவனத்தின் மூலம் வறியகுடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பெற்றது. மேலும் திரு. ஐ.இராசையா அவர்கள் தலைவராக இருந்த காலத்தில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை 19ஆம் இலக்கமுடைய நாராயணா கிளைக்கு அடிக்கல் நாட்டப்பெற்ற அக்கட்டடமானது அவ்வாண்டு காலத்தில் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் **திரு.வெ.கனகசபாபதி** அவர்களின் பெருமுயற்சியால் இக்கட்டிட வேலைகள் யாவும் நிறைவேற்றப் பெற்று அவர்களினாலேயே இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை திறந்து வைக்கப் பெற்றது. மேலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க 19வது கிளை எமது கிராமத்திற்கு பேருதவியாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமன்றி ஒரு தொகுதி இரும்புக் கதிரைகளும் கொள்வனவு செய்யப் பெற்றது.

1996ஆம், 1997ஆம் ஆண்டு காலத்தில் **திரு.கே.ஜீ.சத்தியகுமார்** தலைமையில் எமது சங்க பாலர் பாடசாலைக்குரிய காணியை அன்பளிப்புச் செய்த திரு. ப.சின்னத்துரை அவர்களுக்கு கௌரவிப்பு விழா கொண்டாடப் பெற்றது. மேலும் நல்லூர் பிரதேச சபையின் சமாசம் நடாத்திய பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டியமையும், எமது கிராம நாராயணன் வீதியின் 320' அடி நீளமான வீதி நல்லூர் பிரதேச சபையின் உதவியுடன் தார் இடப்பெற்று செப்பனிடப்பெற்றது. இதன் மூலம் பெற்ற மிகுதிப் பணத்தில் ஓர் இரும்பு அலுமாரி வாங்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் அமரத்துவம் அடைந்த சீ.ஜெயன் ஞாபகார்த்தமாக ஒரு தொகுதிப் புத்தகங்களும் திரு.ம.உருத்திரராசா அவர்களால் விளையாட்டுப் பொருட்களும் வழங்கப் பெற்றது.

1998ம், 1999ஆம் ஆண்டு காலத்தில் **திரு.ஐ.இராசரத்தினம்** அவர்களின் தலைமையில் கடந்தகால வன்செயல்களினால் நிலையக் கட்டிடம் பாதிப்படைந்திருந்தமையினாலும் கட்டிடத்தை புனரமைப்பு நடவடிக்கைக்கு நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவியுடனும், U.N.H.C.R. நிறுவனத்தின் நிதியுதவியுடனும், நல்லூர் பிரதேச சபை உபதலைவர் திரு. துரை தவராஜா அவர்களின் உதவியுடனும், நல்லூர் பிரதேச சபையின் நிதியதவியுடனும் நிலைய சேமிப்பு பணத்தின் ஒருபகுதி நிதியுதவியுடனும் நிலைய சேமிப்பு பணத்தின் ஒருபகுதி நிதியதவியுடனும், எமது முன்னோர்கள் கட்டிய நிலையத்தின் பழைய உபகரணங்களுடனும் புதிதாக சங்கத்தை புனரமைப்பு செய்வதற்கு 25-11-1998 ஆம் ஆண்டு தலைவர் திரு.ஐ. இராசரத்தினம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்று தற்போது புதுப்பொலிவுடன் விளங்கும் நிலையத்தின் கீழ்மண்டப வேலைகள் யாவும் பூரணப்படுத்தப் பெற்று மேல்மண்டபத்திற்கான கொட்டகை வேலைகள் பூரணப்படுத்திய நிலையில் கீழ்

மண்டபமானது நல்லூர் பிரதேசசபை உப தலைவர் திரு. துரை தவராஜா (சமாதான நீதிவான்) அவர்களால் 07.02.2001 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. நாராயணன் வீதி, அம்மன் வீதி ஆகிய வீதிகள் நல்லூர்ப் பிரதேச சபையின் உதவியுடன் தார் இடப்பெற்று செப்பனிடப் பெற்றது. அத்துடன் நல்லூர் பிரதேச சபையால் விளையாட்டு உபகரணங்களும், எமது நூல் நிலையத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்களும் அன்பளிப்பு செய்யப் பெற்றது. மேலும் லயன்ஸ் கழகத்தினால் பெற்றோல்மக்ஸ் ஒன்றும், கண் பார்வையற்றவர்களுக்கு கண் ணாடியும் வழங்கப் பெற்றது.

2001ம் 2002ம் ஆண்டு காலப்பகுதி யில் **திரு.கோ.நரேந்திரன்** தலைமையில் பொன் விழா மண்டபத்திற்கான வேலைகள் நடைபெற்று 2002ம் ஆண்டு **பொன்விழா மண்டபம் உயர்திரு. S. செல்வரத்தினம்** (பிரதேச செயலர்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பொன்விழாவினை முன்னிட்டு யாழ் மாவட்ட தாச்சி சங்க அனுமதியுடன் தாச்சிச் சுற்றுப் போட்டியினையும் மற்றும் யாழ் மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி யும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் பாடசாலை மாணவர் மட்டத்தில் பொது அறிவு வினாடிவினா போட்டியை நடாத்தியமையும் எமது கிராம மாணவர் மத்தியில் பேச்சுப்போட்டி நிகழ்வுகள் நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் பொன்விழாவினை சிறப்பிக்கும் முகமாக **"பொன் விழா மலர்"** மேலும் **திரு.து.ஜேந்திரன்** அவர்கள் இதழ் ஆசிரியராக இருந்து எமது நிலைய வரலாற்றுச் சிறப்புக் களை சித்தரிக்கும் மலராக வெளியீடு செய்யப் பட்டது. இம் மலரும் எமது வைர மலருக்கு பெரும் உறுதுணையாக இருந்தது.

மேலும் ஆரம்பகாலத் தலைவர்கள் செயலாளர், பொருளாளர் ஆகியோரை **பொன் னாடை** போர்த்திக் கௌரவித்தும் முன்னை நாள் தலைவர்கள் **மலர் மாலை** அணிவித்தும் கௌர விக்கப்பட்டனர்.

அத்தோடு விளையாட்டுப்போட்டிக்கு தேவையான பரிசில்களை அன்பளிப்பாக பெற்றுத் தந்தும் பொன்விழா மலருக்கு விளம் பரங்கள் பெற்றுக்கொடுத்த திரு.செ சண்முக லிங்கம் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மற்றும் இவ் ஆண்டில் நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப்பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில் **ஆண்கள்** அணியினர் **முதலாம், இரண்டாம்** இடங்களையும், **பெண்கள்** அணியி னர் **முதலாம்** இடத்தையும் பெற்று எமது நிலை யத்திற்கு பெருமை சேர்க்கப்பட்டது.

மேலும் இக்காலப் பகுதியில் நிலையத்திற்கு பல அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்பட்டன

| **அன்பளிப்பு செய்தவர்கள்** | **அன்பளிப்புப் பொருட்கள்** |
|---|---|
| கிருஸ்ணபிள்ளை அவர்களின் முயற்சியால் யுனிசெவ் நிறுவனம் | 1000$l$ தண்ணீர் தாங்கி |
| திரு. நா. இராசையா | மின்மோட்டாரும் உபகரணங்களும் |
| இளைஞர்கள் | திரைச்சீலை |
| திரு.ம. கனகலிங்கம் சுவிஸ்லாந்து | மேசை பிளாஸ்ரிக் கதிரை |
| அமரர் தேவிசிகாமணி ஞாபகார்த்தமாக அருளம்பலம் | மின்விசிறி |
| திரு. ந. குணசிங்கம் | மின்விசிறி |

| | |
|---|---|
| நல்லூர் பிரதேச சபை | தொலைக்காட்சிப் பெட்டி<br>விளையாட்டு உபகரணங்கள் |
| அமரர் நல்லையா ஞாபகார்த்தமாக திருமதி பூரணம் | மின்விசிறி |
| அமரர் குணசேகரம் சுதாகரன் திருமதி இலட்சுமி | மின்விசிறி |
| திரு. ந. குணபாலசிங்கம் | மின்ஒளிர் குழாய் (ரியூப் லைற்) |
| திரு. ஆ. செல்வநாயகம் | சுவர்மணிக்கூடு |
| இல்லத்தலைவர்கள் | பல பொருட்கள் |
| திரு. வ. கமலநாதன் (சுவிஸ்லாந்து) | பிளாஸ்ரிக் கதிரைகள் |
| அமரர் உருத்திரன் ஞாபகார்த்தமாக திருமதி லலிதாமணி | மின்ஒளிர் குழாய் (ரியூப் லைற்) |

2003ம் ஆண்டு **திரு. சீ. சுஜீவா** அவர்களின் தலைமையில் எமது பாலர் பாடசாலை யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற்ற நடனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. மேலும் புனித செபஸ்தியார் வீதியும் ஆலடி வீதியும் செப்பனிடப்பட்டு ஸ்ரீ நாராயணா வீதி இரண்டாம் முறை தார் ஊற்றப்பெற்று திருத்தியமைக்கப்பட்டது.

2004ம் ஆண்டு **திரு. சி. கர்ணன்** தலைமையில் லயன்ஸ் கழக உதவியோடு இலவச மருத்துவ முகாமும் சமூதாய மருத்துவத் துறை மாணவர்களின் ஒத்துழைப்போடு இலவச திருமணப் பதிவுகளும் சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதார கருத்தரங்கும் மேற்கொள்ளப்பட்டது மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடனும் இளைஞர்களின் உதவியுடனும் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

மேலும் பொன்விழா மண்டபத்தில் நூலகம் மீண்டும் புனரமைக்கப்பட்டு வாழ்நாள் மருத்துவ பீட் பேராசிரியர் திரு. சிவஞானம் (நந்தி) அவர்களால் திறந்து வைக்கப்பட்டு நூலகருக்கான ஊதியத்தினை வண. சாம்ராஜசூரிய கியூ மெடிக்கா நிறுவனத்தினூடாக போதகர் க.ராஜா அவர்கள் இன்றுவரை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. கஜேந்திரகுமார் அவர்களின் நிதி உதவியுடன் மலசல கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

2005ம் ஆண்டு காலப்பகுதியில் **திரு. கோ. நரேந்திரன்** தலைமையில், பாலர் பாடசாலைக்கும் நிலைய முன் மண்டபத்திற்கும் வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டது. மேலும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க 19வது கிளைக்கு 18 அங்கத்தவர்கள் இணைக்கப்பட்டனர்.

| **அன்பளிப்பு செய்தவர்கள்** | **அன்பளிப்பு பொருட்கள்** |
|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் | பெரிய கதிரை 42<br>சிறிய கதிரை 27 |
| திரு.நா. சுந்தரலிங்கம் (சுவிஸ்லாந்து) | மின்விசிறி |
| திரு. போதகர் க.ராஜா | மேசை விசிறி |
| நல்லூர் பிரதேச சபை | கரப்பந்து 1, கால்பந்து 1<br>வலைப்பந்து 1 |
| திரு. வ. கமலநாதன் | சிறுதொகை நிதி |
| திரு. ச. சர்வேஸ்வரன் | சிறு தொகை நிதி |
| காந்தி இல்ல வீரர்கள் | ஒரு கொடித்தம்பம் |
| பாரதி இல்ல வீரர்கள் | மேடைப் பேச்சு ஸ்ரான்ட் |

2006ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் **திரு. கோ. நரேந்திரன்** அவர்களின் தலைமையில் திரு. ச. நிமலன் அவர்

களின் முயற்சியினால் வெண்புறா நிறுவனத்தினால் எமது இளைஞர் யுவதிகளுக்கு “வாழ்க்கைத்திறன் விருத்தி” எனும் தொனிப் பொருளில் 3 நாட்கள் பயிற்சி பட்டறை நடாத்தப்பட்டது.

மேலும் சாயி சேவா நிலையத்தினால் இலவச மருத்துவ முகாமும் நடாத்தப்பட்டது. மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. க. றமேஸ்நேசன் அவர்களினால் 5 வயதிற்கு உட்பட்ட 26 மாணவர்களுக்கு 100/- வீதம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

இவற்றைவிட சனசமூக நிலையத்திற்கு பின்புற காணியில் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி உதவியுடன் எமது இளைஞர்களின் பெரு முயற்சியினாலும் புதிதாக பாலர் பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு பிரதேச செயலாளர் திரு.பா.செந்தில்நந்தனன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தினால் நடாத்தப்பட்ட தாச்சி சுற்றுப்போட்டியில் எமது வீரர்கள் 3ம் இடத்தையும் சுண்ணாகம் கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்திய 20 வயதிற்குட்பட்ட போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுள்ளது.

மேலும் எமது விளையாட்டு வீரர்கள் அணிவதற்கு விளையாட்டுச் சீருடையை திரு. வே. சத்தியபாபு அன்பளிப்புச் செய்துள்ளார். மற்றும் நிர்வாகத்தின் முயற்சியினால் அமரர் முருகன் அன்னம் மற்றும் அமரர் சிவஞானம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக சனசமூக நிலையத்தின் பின்புறக் காணிக்கு அருகில் உள்ள 2 குழி காணியையும் **திரு. கு. அருமைநாயகம்** அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

| **அன்பளிப்பு செய்தவர்கள்** | **அன்பளிப்பு பொருட்கள்** |
|---|---|
| திரு.வ. விஜயகுமார் | கோல் ஊன்றிப் பாயும் கோல் |
| போதகர் க. ராஜா | கரும்போட் ஸ்ரான்ட் |
| அமரர் சு. வள்ளிப்பிள்ளை ஞாபகார்த்தமாக சு. குலதேவகுமார் | பொது அறிவு புத்தகம் 2 |
| சர்வோதயம் | துடுப்பு மட்டை பெரிது 1, சிறிது 1 விக்கெற் 6, கால்பந்து 1 |
| வெண்புறா | துடுப்பு மட்டை 1, விக்கெட் 6 பட்மின்ரன் ஒரு சோடி, கரும்போட் |
| 2006ம் ஆண்டு பாரதி இல்ல வீரர்கள் | போக்கஸ் லைட் 1 |
| 2006ம் ஆண்டு அண்ணா இல்ல வீரர்கள் | நிறைகுடச் செற் 1 |
| திரு.வெ. சத்தியபாபு | விளையாட்டுச் சீருடை |

2009ம் ஆண்டு காலப்பகுதியில் **திரு.சீ.சுஜீவா** அவர்களின் காலப்பகுதியில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு என ஒரு மலசல கூடம் அமைக்கப்பட்டது. மேலும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் ரூபா.75000/- வழங்கப்பட்டு ஆண்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அடுத்து எமது மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு நிலையத்தின் வர்ணம் பூசவும் பட்டது மற்றும் அமரர் வைரமுத்து நாபகார்த்தமாக திரு. வை. விஜயகுமார் அவர்களினால் மேசை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேலும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உதவியுடன் வடிகால் அமைக்கப்பட்டது.

2011ம் ஆண்டு காலப்பகுதியில் **திரு.தெ. சுகிர்தன்** அவர்களின் தலைமையில் ஆண்டு 1 முதல் க.பொ.த.உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு பரீட்சை நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டும் மேலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பல்கலைக்கழகம் சென்றவர்

கள், தேசிய கல்வியற் கல்லூரி சென்றவர்கள், தேசிய விருதுகள் பெற்றவர்கள் ஆகியோரை கனடா வாழ் **திரு. க. மகிந்தன்** அவர்களின் நிதி உதவியுடன் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியர் கௌரவித்தல் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டி, பெற்றோர்களின் நிதி உதவியுடனும் சிங்கப்பூர் வாழ் **திரு. க. நல்லை நாதன்** மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் **திரு. சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்)** ஆகியோரின் உதவியுடன் நடாத்தப்பட்டது. மேலும் பாலர் பாட சாலை ஆசிரியர்களான **திருமதி.கிருபாகரன் மதி மாலா, செல்வி.விருசினி தியாகராஜா** ஆகியோர் களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் **கௌரவ ஈ. சரவணபவன்** அவர்களினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து எமது பாலர் மாணவர்களுக்கு 20,000/- பெறுமதியான கற்றல் உபகரணங்க ளையும், நூலகத்திற்கு புத்தகங்களை தந்ததோடு கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு இரண்டு கணனி களை வழங்கினார். அதனை கிராம அபிவிருத்திச் சங்கம் எமது நிலையத்திற்கு தந்துள்ளனர்.

மேலும் பாலர் பாடசாலை மாணவர் களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் **கிஷேபுல்லா** அவர்களால் ஊஞ்சல் மற்றும் விளையாட்டு உபகரணம் வழங்கப்பட்டு சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் **திரு. நா. சிவலோகநாதன்** அவர்களின் பெரு முயற்சி யினாலும் சமூக சேவை நோக்கத்தினாலும் மின் விளக்குகள் கிடைக்கப்பெற்று எமது வீதிகளுக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பினால் பொருத்தப் பட்டது. மேலும் வே.சிவகுமார், திரு.நா.செல்வ குமார் அவர்களினாலும் மின் விளக்குகள் வழங்கப்பட்டன.

மேலும் நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கலை கலாசாரப் போட்டியில் எமது நிலையத்தினால் **"சத்தியவான் சாவித்திரி"** எனும் இசை நாடகம் **திரு. வே. சிவகுமாரன்** அவர் களின் நெறியாள்கையில் முதன்முதலில் பிரதேச செயலக மட்டத்தில் போட்டிக்கு சென்ற நாடகம் என்ற பெருமையையும், **2ம்** இடத்திற்கான பரிசை யும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அந்த நாடகம் எமது கிராம மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டது.

அடுத்து உதயன், வலம்புரி, தினக்குரல், தினமுரசு போன்ற பத்திரிகைகள் படிப்பதற்கு வைத்ததோடு தினமுரசு பத்திரிகை செல்வன் ஜஸ்ரின் நியூட்டன் அவர்களின் முயற்சியி னாலும் இலவசமாக கிடைக்கப்பெறுகிறது.

மேலும் CSC ஏசியன் கணனிக் கல்வி நிறுவனத்தினால் இலவசமாக கணனிப் பயிற்சிப் பட்டறை ஒன்றும் நடாத்தப்பட்டது.

இன்று வைரவிழா காண்பதற்கு அடி யெடுத்து வைத்துள்ள எமது நிலையமானது செல்வன் தெ.சுகிர்தன் அவர்களின் தலைமை யில் நிலையத்தின் மண்டபங்கள் முழுமையாக மதன் ஆட்ஸ் குழுவினரின் உதவியுடன் இலவச மாக வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவு பெறு கின்றது.

அடுத்து யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத் தின் அனுமதியுடனும், திரு.S.சிவலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்), ஒலிம்பியாஸ், பெஷன் கவுஸ் என்பவற்றின் அனுசரணையுடனும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளையும், **சுந்தர்சன்** அனுசரணை யுடன் மரதன் ஓட்டப் போட்டி என்பவற்றை நடாத்தியும், பாடசாலை மட்டத்திலான போட்டிப் பரீட்சையும், எமது கிராம மட்டத்திலான கவிதை,

பேச்சு போட்டி நிகழ்வுகள் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது வைரவிழாவினை முன்னிட்டு தானங்களில் சிறந்த தானமான **இரத்த தானத்தை** எமது ஊர் இளைஞர்கள் இரத்த வங்கிக்கு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

நல்லூர் மக்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் Sond நிறுவனத்தின் அனுசரணையில் பெண் களுக்கான இலவச நடமாடும் மருத்துவ முகாம் ஒன்றையும் நடத்தியுள்ளோம்.

மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள், கல்வியியற் கல்லூரி அனுமதி பெற்றவர்கள், வெளிவாரியாக கலைமாணி பட்டம் பெற்றவர்களையும், தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்களையும் அமரர் செல்வராசா புஸ்பமலர் ஞாபகார்த்தமாக திரு.செ.செல்வ சுதந்திரனின் அனுசரணையுடன் கௌரவித்துள் ளோம்.

நிலையத் தலைவர்களைக் கௌர விக்கும் நிகழ்வில் தலைவர்களுக்கு சுவிஸ் வாழ் திரு.நா.சுந்தரலிங்கம் அவர்களின் அனுசரணை யுடன் நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌர வித்துள்ளோம்.

எமது வைரவிழாவின் முதல் நாள் நிகழ்விற்கு ஆசிரியை திருமதி நட்பினி நல்ல சிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மாணவர்களின் பான் வாத்திய இசையுடனும், எமது கிராம மாணவி செல்வி. க.பமிலா அவர்களின் ஏற் பாட்டில் மாணவர்களின் அணிவகுப்புடன் பிரதம விருந்தினர் எமது நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இறுதி நாள் நிகழ்விற்கு செல்வி க.லிஷாந்தினி அவர்களின் ஏற்பாட்டில் இசையும் அசைவும் எனும் உடற்பயிற்சி நிகழ்வும் இடம் பெற்றது அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

மேலும் எமது நிலையத்தின் வைர விழா நிகழ்விற்கு மின் பிறப்பாக்கி மூலம் இலவசமாக மின்சாரத்தினை வழங்கிய ஸ்ரீதரன் (சுவிஸ்) குடும்பத்தினருக்கும், டிஜிற்றல் ஒளி அமைப்பினை வழங்கிய JSK Brothers (கஜன் வீடியோ) அவர்களுக்கும் நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

மற்றும் அ.சந்திரசேகரன் முயற்சியால் மக்கள் வங்கியால் பெண்களுக்கான அஞ்சல் ஓட்டத்திற்கான பரிசில்களினை அன்பளிப்பாக பெற்றுத் தந்தார். ஸ்ரான்லி வீதி, சிங்கர் பிளஸ் முகாமையாளர் திரு.S.கிரீஷன் அவர்களால் ஒரு தொகுதி பரிசில் பொருட்களும் கிடைக்கப் பெற்றன.

வைரவிழா நிகழ்வில் வைரம் பதிக்கும் நிகழ்வாக விளையாட்டு மைதானம் வாங்குவ தற்காக திரு.கந்தையா ஸ்ரீபரன் அவர்களால் நிலையத்தின் வங்கிக் கணக்கில் 10000/- பணம் வைப்பில் இடப்பட்டது.

மேலும் தாச்சிச் சங்க அனுமதியுடன் வசந்தம் தொலைக்காட்சி நிறுவனத்தால் மருதடி ஆலயத்தின் முன்பாக நடாத்தப்பட்ட புதுவருட சிறப்பு தாச்சிச் சுற்றுப் போட்டியில் எமது மறு மலர்ச்சி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தி னைப் பெற்று 7500/- பணப்பரிசினை பெற்றுக் கொண்டுள்ளமை வைரவிழாவில் கால் பதித்த இவ்வேளை மனங் கொள்ளத்தக்கதாகும்.

**மேலும் எமது வைரவிழாவினை சிறப்பிக்க உதவியோர்கள்**

| | |
|---|---|
| திரு.செ.நிமல்ராஜ் (ஜேர்மன்) | 15340.00 |
| திரு.நா.சுந்தரலிங்கம் | 15000.00 |
| திரு.செ.செல்வசுதந்திரன் | 12000.00 |
| திரு.க.ஸ்ரீபரன் (லண்டன்) | 10000.00 |
| திரு.க.ஸ்ரீதரன் (சுவிஸ்) | 10000.00 |
| திரு.மா.ஸ்ரீகுமார் (நகுலன், பெல்ஜியம்) | 5100.00 |
| செல்வன் க.கதீஸ் | 5000.00 |
| செல்வன் த.கவாஸ்கர் | 5000.00 |
| திரு.க.ரமேஸ்நேசன் | 5000.00 |
| செல்வன் தெ.சுதர்சன் (டோகா) | 5000.00 |
| செல்வன் சு.சதீஸ்குமார் (இலண்டன்) | 5000.00 |
| JSK brothers (கஜன் வீடியோ) | 5000.00 |

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் திரு.நா.சிவலோகநாதன் அவர்களின் முயற்சியினால் எமது நிலையத்திற்கு 11000/- பெறுமதியான விளையாட்டுப் பொருட்கள் நல்லூர் பிரதேச சபையினால் வழங்கப்பட்டது. காதல் தின நிகழ்வினை ஒருங்கமைத்த து.மயூரலெனின், அ.திலீப் அவர்களினால் பாலர் பாடசாலைக்கு 5000/- பெறுமதியான பரிசுகளை அன்பளிப்பு செய்யப்பட்டது.

எமது நிலையத்தின் **கல்விப்பணியில்** நிலையம் ஆரம்பிக்கப்பெற்ற காலத்திலிருந்து ஊரில் கல்வி கற்ற பெரியோர்களினால் இலவசமாக மாலை நேரவகுப்புக்கள் நடாத்தப்பெற்றமையும், மாணவரதும், வாசகரினதும் நன்மை கருதி நூல் நிலையம் நடைமுறைப்படுத்தப்பட்டு, இயங்கி வருகின்றது. மேலும் 2004ம் ஆண்டிலிருந்து Pr.கனகலிங்கம் ராஜா அவர்களின் உதவியோடு கியூமெடிக்கா நிறுவனத்தினால் மாதாந்தம் 2000/- வீதம் எமது நிலையத்தின் கல்வித் தேவைகளுக்கு வழங்கப்படுகின்றது.

மற்றும் எமது நிலையத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்களினால் வழங்கப்பட்ட கணனிகளை கொண்டு மாணவர்களுக்கு கணனி அறிவு ஊட்டப்படுகின்றது. மேலும் பாலர் பாடசாலையினூடாக மாணவர்களுக்கான ஆரம்பக்கல்வி போதிக்கப்படுகின்றது.

எமது நிலையத்தின் விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கப்பெற்ற காலம் முதல் இன்று வரை பாரதி, காந்தி, அண்ணா என்ற மூன்று இல்லங்களாக பிரிக்கப்பெற்று இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வுகள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றன. எமது நிலையமானது நல்லூர் பிரதேச செயலகம் நல்லூர் பிரதேச சபை மூலம் நடாத்தப்பெற்ற பல விளையாட்டுக்களில் பங்குபற்றி பல பரிசில்களை வென்றுள்ளது. கிராமிய விளையாட்டான தாச்சி (கிளித்தட்டு) விளையாட்டில் யாழ் மாவட்டத்தில் முதன்மைபெற்ற விளையாட்டுக் கழகமாக எமது மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமானது திகழ்கின்றது. இதில் விடயம் என்னவென்றால் தாச்சிச் சுற்றுப் போட்டியில் எமது அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது மனம் கொள்ளத்தக்கதாகும். இவ்வாறு பல்வேறு தாச்சி விளையாட்டுக்களில் அன்று முதல் பங்குபற்றி பல வெற்றிக் கேடயங்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

எமது நிலையத்தின் கலைப்பணியில் ஆரம்பத்தில் மறுமலர்ச்சி நாடகமன்ற என்ற ஒரு நாடக மன்றம் உருவாக்கப்பெற்று ஊரில் பல கலைஞர்களை உருவாக்கியும், பல இடங்களில் நடைபெற்ற போட்டிகளில் (நாடகம்) வெற்றி பெற்றதுடன் சிறந்த நாட்டுக் கூத்து அண்ணாவியர் நாகமுத்து செட்டியார் அவர்களை நல்லூர் பிரதேச செயலகம் கௌரவித்தமையும் இவரது நாட்டக் கூத்து நிகழ்வானது இலங்கை வானொலியில் ஒலி பரப்பு செய்யப்பெற்றவையும் குறிப்பிடத்தக்கன. இவை மட்டுமன்றி இன்றைய இளைஞர் யுவதிகளின் தலைமுறையில் தேசிய மட்டத்தில் திரு.பூ.கருணதாஸ் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ்ப்பாணப் பிராந்தியத்தினூடாக நடாத்தப்பெற்ற கலாசாரப் போட்டி நிகழ்வில் ஒகன் வாத்தியத்தில் முதலிடம் பெற்ற

மையும், 2011ம் ஆண்டு நல்லூர் பிரதேச செயல கத்தினால் நடாத்தப்பெற்ற கலாச்சாரப் போட்டியில் சத்தியவான் சாவித்திரி எனும் இசை நாடகம் எமது சனசமூக நிலையத்தினூடாக பங்கு பற்றி 2ம் இடத்தைப் பெற்றமையும், இவ் வற்றிற்கு மேலாக எழுத்தாளர்கள் பட்டிமன்ற பேச்சாளர்கள், சிறந்த பாடகர்கள் ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள், கவிஞர்கள் குதிரை யாட்டம், காவடியாட்டம், கும்மி, கரகம், கிராமியக் கலைப் படைப்பாளர்களை உள்வாங்கிய நிலையமாக எமது நிலையம் அமைந்துள்ளமை மேலும் பெருமை சேர்க்கின்றது.

எமது கிராமத்தின் சிரமதான பணி மூலம் எமது முன்னோர்கள் ஆரம்பகாலம் முதல் இன்று வரை எமது நிலையம் கோயில் பொதுத் தாபனங்களில் நிகழும் எந்த சிரமதானப் பணிகளிலும் பங்கேற்று வருகின்றது. எமது ஊரிலுள்ள 150 வெட்டுக் கிணறுகளுக்கு அதிகமாக எமது முன்னோர்களின் சிரமதான பணி மூலமே தான் வெட்டிக் கட்டப் பெற்றவையாகும். மற்றும் ஊரில் பல வீடுகள் கூட சிரமதானப் பணிகள் மூலமாகவே கட்டப்பெற்றவையாகும்.

2000ம் ஆண்டு ஸ்ரீ நாராயணா வீதி சிரமதான தானம் மூலம் செப்பனிடப்பட்டதும் சிரமதான பணியினை எடுத்துக் காட்டுகின்றது.

எமது நிலையத்தின் ஆத்மீகப் பணியில் எமது பாலர் பாடசாலையில் விஜயதசமி அன்று மாணவர்களுக்கு ஏடு தொடக்கப்பட்டு அவர்களின் கல்விப் பயணம் ஆரம்பிக்கப்படுகின்றது.

மேலும் ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான மஹோற்சவ காலம் எமது சனசமூக நிலையத்தினால் அன்னதான நிகழ்வு இடம்பெற்று இப்போது அன்னதான சபையாக பரிநாமம் பெற்றுள்ளது. என்றால் அது மிகையாகாது மேலும் வருடந் தோறும் எமது சனசமூக நிலையம் ஸ்ரீ வல்லீபுர நாதர் மஹோற்சவ காலங்களில் மண்டபப்படி அமைத்தும் எமது ஊரில் பல ஆன்மிகச் சொற்பொழிவாளர்களை உருவாக்கிய பெருமையையும் எமது சனசமூக நிலையம் பெற்றுக் கொள்கிறது.

எமது நிலையத்தின் பொருளாதாரப் பணியில் வசதி குறைந்த மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு திட்டங்களுக்கு கடன் வழங்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையும் யாழ் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் நெசவு உபகரணங்கள் வழங்கப்பட்டமையும், சாந்திகம் நிறுவனத்தின் மூலம் சுயதொழில் ஊக்குவிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டமையையும் குறிப்பிட முடியும்.

1968ம் ஆண்டு திரு.ப.சின்னத்துரை அவர்கள் கொக்குவில் கோண்டாவில் கிராம சபை 4ம் வட்டார அங்கத்தவராகவும், 1998ம் ஆண்டு திரு.துரை தவராசா அவர்கள் நல்லூர் பிரதேச சபை உபதலைவராகவும், 2011ம் ஆண்டு திரு.நா.சிவலோக நாதன் அவர்கள் நல்லூர் பிரதேச சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு எம் மக்களின் பிரதி நிதிகளாக தெரிவு செய்யப்பட்டன, எமது சமூகத்தினுடைய ஒற்றுமையின் பலத்தினை ஈண்டு குறிப்பிட முடியும்.

எமது நிலையத்தின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்த எமது மூதாதையினர்க்கும், எமது நிலையத்தின் சங்க அபிமானிகளுக்கும், பல கஸ்டங்கள் மத்தியிலும் தம் சுயநலன்கள் கருதாமல் கட்டிட நிர்மாணிப்பு பணியில் பங்குபற்றி நிறைவேற்றியவர்களுக்கும் எமது நிலை வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் உறு துணையாக நல்லூர் பிரதேச சபை உட்பட இருந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது நிலையத்தின் வரலாற்று பின்னணிகள், வளர்ச்சிப்படி நிலைகளை ஆராய்வதற்கு உதவிய 1977, 1994, 1995, 2002ஆம் ஆண்டு காலங்

களில் வெளியீடு செய்த அவ்வாண்டுகளின் நிலைய நிர்வாகிகள் உட்பட ஒத்தாசை புரிந்த அனைத்து பெரியோர்களுக்கும், பொது மக்களுக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறைவாக எமது நிலையத்தின் வைர விழாவாகிய (20.04.2012) இன்று வரை எமது நிலையத்தின் வரலாறு, வளர்ச்சி, மேம்பாடு போன்ற பல சிறப்புக்களையும் எமது நோக்கில் பார்வையிட்டதனூடாக மீண்டும் எனது மனப் பூர்வமான நன்றிகளை தெரிவித்து மகிழ்ச்சி யடைவதோடு இந்நிலையம் பல நூற்றாண்டுகள் சிறப்பாக வாழ வேண்டும் எனவும் இதன் சேவை

**செல்வன் A.T.கஜன்**
செயலாளர்
ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்

# பொருளாளரின் பார்வையில் ...

**அ. ரகீவன்**
பொருளாளர்,
ஸ்ரீ நா.ச.ச.நி
கோண்டாவில்.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலையத்தின் 60வது ஆண்டு (வைர விழா) பொருளாளராக சேவை கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் இந்த சனசமூக நிலையம் 60வது ஆண்டுகள் பல தலைவர்களையும் பல செயலாளர்களையும் பல பொருளாளர்களையும் கண்டு தனது சேவையை மக்களுக்கு செய்து இக்கிராம மக்கள் மனதிலும் அயல் கிராமத்தவர்களின் நினைவிலும் பெரிய இடத்தை கொண்டுள்ளது. முன்பு இருந்த பொருளாளர்களின் முயற்சியாலும் ஆக்க திறனாறும் இப்பெரிய மேல்மாடியைக் கண்டு பல லட்சம் பெறுமதியான பொருட்களையும் பல இலட்சம் ரூபாவை கையிருப்பிலும் கொண்டுள்ளது. இந்த வகையில் முன்பு இருந்த பொருளாளர்களை இந்த ஆண்டு பொருளாளர் என்ற வகையில் பாராட்டாமல் இருக்க முடியாது இவர்களின் நினைக்க முடியாத சேவையும் சீரான வரவு செலவு அறிக்கைகளும் இந்த சனசமூக நிலையத்தின் நேர்மையான கண்ணிய மான செயற்பாடுகள் புரிகின்றது. இத்தகைய சனசமூக நிலையத்தின் 60வது ஆண்டுவரை விழாவிற்கு பொருளாளராக என்னைத் தெரிவு செய்தவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்த வைரவிழாவிற்கு சகல வகையிலும் நிதி உதவி புரிந்த பெரியவர்க ளையும் அன்பார்ந்த எமது மக்களையும் பாராட்டுகின்றேன்.

# குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் மேலதிக உணவு ஆரம்பித்தல்......

இ. ஹேமபாலா
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) கருத்துப்படி, தாய்ப்பால் மட்டும் ஊட்ட வேண்டிய காலப்பகுதியானது பிள்ளை பிறந்த தில் இருந்து 180 நாட்களாகும். அத்துடன் ஆறாம் மாதம் முடிவில் (180 நாட்களின் பின்னர்) "மேலதிக உணவு" ஆரம்பிப்பதுடன் தாய்ப்பாலையும் இரண்டு வயது அல்லது அதற்கு மேலான வயது வரை கொடுக்கப்படல் வேண்டும் (WHO, 1995)

ஆறாம் மாதத்தின் பின்பு தாய்ப்பால் மட்டும் போதியளவு ஊட்டச்சத்தினை கொண்டிருப்பதில்லை. எனவேதான் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்தினை கொடுப்பதற்கு "மேலதிக உணவு" ஆரம்பிக்கப்படுகின்றது.

மேலதிக உணவு என்றால், தாய்ப் பாலுடன் குடும்பத்தில் உள்ள மற்றையவர்கள் உண்ணும் உணவுகளுக்கு குழந்தையை பழக்கப் படுத்திக்கொள்ளல் ஆகும். இத்தகைய உணவு ஆரம்பிப்பது பொதுவாக 6ம் மாதத்தின் முடிவி லிருந்து 18–24 மாதங்கள் வரை ஆகும். அத்து டன் இந்தக் காலப்பகுதியில்தான் உடல்நலத்தி ற்கு மிகவும் பாதிப்புக்கள் உருவாகக் கூடிய கால மும் ஆகும். ஏனெனில் இந்தக் காலப் பகுதியில் தான் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் போதியளவில் கிடைப்பதில்லை.

எனவே இம்மேலதிக உணவு கட்டாயமாக

1. குறிப்பிட்ட வயதுப்பகுதியில் ஆரம்பித்தல் வேண்டும்.

   ஏனெனில் தாய்ப்பால் மட்டும் போதியளவு ஊட்டச்சத்தினை 6ம் மாதத்தின் பின்னர் கொண்டிருப்பதில்லை

2. போதியளவு (quantity) உணவும் ஆரம்பிக் கப்படல் வேண்டும்.

   ஏனெனில் உணவில் உள்ள புரதச்சத்து குழந்தையின் வளர்ச்சிக்கு அத்தியாவசிய மானதாகும்.

மேலதிக உணவு ஆரம்பிக்கத் தொடங்கும் காலப்பகுதியில் குழந்தைகளுக்கு வயிற்றுளைவு, வாந்தி மற்றும் காய்ச்சல் போன்ற சில நோய்கள் உண்டாகக்கூடிய சந்தர்ப் பங்களும் உண்டு எனவே ஊட்டச்சத்துள்ள உணவுகளை சுகாதாரமுறையில் தயாரிப்பதன் மூலம் இந்நோய்களை குறைத்துக்கொள்ள முடியும்.

மேலதிக உணவை குறித்த வயதிற்கு முன்னர் ஆரம்பிக்கும் போது

1. குழந்தையின் சமிபாட்டுத்தொகுதி முழுமை யாக விருத்தியடையாமையினால் திண்ம உணவுகள் சமிபாடு அடைந்து அகத்துறிஞ்சு வது கடினமானதாகும்.
2. குழந்தையின் சுவை நரம்புகளும் முழுமை யாக விருத்தியடையாமையால் குழந்தையி னால் சுவையையும் அனுபவிக்க முடிவ தில்லை.
3. குழந்தைகளுக்கு சில வகை உணவிற்கு ஒவ்வாமைத் (Allergy) தன்மையும் ஏற்படலாம்.
4. மேலதிக உணவு தாய்ப்பாலைப் போல மிகச்

சுத்தமாகவும் இருக்க முடியாது. எனவே குழந்தைகளுக்கு வயிற்றோட்டமும் (3-13 மடங்கு) ஏற்படலாம்.

5. அத்துடன் இக்குழந்தைகளின் நோய் எதிர்ப்புத் தன்மையும் குறைவாக இருப்பதனால் நுண்ணங்கித் தொற்றுக்களும் அதிகம் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. எனவே உணவு தயாரிப்பில் சுகாதார முறைகளை கட்டாயமாக கையாளுதல் அவசியமாகும்.

6. போதியளவு தாய்ப்பாலையும் கூட குழந்தை குடிக்க முடிவதில்லை இதனால் தாய்ப்பாலில் உள்ள ஊட்டச்சத்து பிள்ளைக்கு குறைவாகவே கிடைக்கின்றது.

மேலதிக உணவை குறிப்பிட்ட வயதிற்கு பிந்தியதாக ஆரம்பிப்பதனால் குழந்தைகளுக்கு தேவையான மேலதிக ஊட்டச்சத்து கிடைப்பது குறைவடைகின்றது. இதனால் குழந்தையின் வளர்ச்சியும் பாதிப்படைகின்றது.

மேலதிக உணவை படிப்படியாக குழந்தையின் வயதிற்கு ஏற்றப்டி ஆரம்பித்தல் வேண்டும். இதனால் பிள்ளையின் சமிபாட்டுத் தொகுதி, நரம்புத் தொகுதி மற்றும் சிறுநீரகத் தொகுதியின் விருத்தியும் தொழிற்பாடும் படிப்படியாக அதிகரிக்கின்றது.

எனவே சாதாரண குடும்ப உணவை 12ம் மாதத்தின் பின்னர் ஆரம்பிப்பதனால் குழந்தையின் நலனுக்கு நன்மையைத் தரும்.

மேலதிக உணவு ஆரம்பிப்பதில் பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

1. கலாசாரம் மற்றும் சமய பழக்க வழக்கங்கள்
2. குடும்ப வருமானம்
3. சுகாதார வசதிகள்
4. தாய் தொடர்பான காரணிகள்
5. சிசு தொடர்பான காரணிகள்

இவற்றினுள் தாயினுடைய மேலதிக உணவு தொடர்பான அறிவே மிக முக்கிய பங்குவகிக்கிறது.

**சுயமதிப்பீடு**

**தாய்ப்பால் ஊட்டல் தொடர்பான அறிவு**

1. எது சரியான தாய்ப்பால் ஊட்டல் நிலை






2. எது சரியான உறிஞ்சுதல் முறை




3. தாய்ப்பால் மட்டும் ஊட்டப்பட வேண்டிய காலம்?
4. தாய்ப்பால் ஊட்டப்படவேண்டிய காலம்?
5. தாய்ப்பாலை சேமித்து வைத்திருக்க முடியுமா?

**மேலதிக உணவு தொடர்பான அறிவு**

1. மேலதிக உணவு என்றால் என்ன?
2. எது மேலதிக உணவின் சரியான பாகுத் தன்மை? (மேலதிக)

3. மேலதிக உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்தும் நீர்?

**விடைகள்**

**தாய்ப்பால் ஊட்டல் தொடர்பான அறிவு**

1. 1ம் விடை
2. 1ம் விடை
3. 6மாதங்கள் வரை 180 நாட்கள்
4. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயது வரை
5. ஆம். (சேமித்து வைத்திருக்கும் முறை பற்றி அறிந்திருத்தல் அவசியமானது)

**மேலதிக உணவு தொடர்பான அறிவு**

1. தாய்ப்பாலுடன் மேலதிகமாக கொடுக்கப் படும் உணவுகள்
2. 1ம் விடை
3. நன்கு கொதித்து ஆறவைத்த நீர்

**எனது ஆய்வில்** (Research)

85 சிசுக்கள் உள்ளடக்கப்பட்டார்கள் இவற்றுள் 51.7% ஆண் சிசுக்களும், 48.2% பெண் சிசுக்களும் ஆகும்.

இவற்றுள் 45.9% ஆன சிசுக்கள் மாத்தி ரமே 6ம் மாதத்தின் முடிவில் (180 நாட்கள் முடிவில்) மேலதிக உணவை ஆரம்பித்திருக் கின்றார்கள் மற்றவர்கள் 4-6ம் மாதத்திலும் 6-9ம் மாதத்திலும் ஆரம்பித்திருக் கின்றார்கள்.

6ம் மாதத்திற்கு முன்பு மேலதிக உணவு ஆரம்பிப்பதில் செல்வாக்கு செலுத்திய காரணி களில் பிரதானமானவை.

1. உறவினர்களின் தவறான அறிவூட்டல்
2. தாய்ப்பால் தொடர்பாகவும், மேலதிக உணவு தொடர்பாகவும் போதியளவு அறிவின்மை.
3. போதியளவு தாய்ப்பால் இன்மை
4. குழந்தை தாய்ப்பாலை சரியாக உறிஞ்சாமை
5. குழந்தையின் பிறப்பு நிறை குறைவாக இருத்தல்
6. வைத்தியர்களின் ஆலோசனை
7. தாய்மார் வேலைக்குச் செல்லுதல்
8. சமயம், கலாசாரம் மற்றும் குடும்ப வருமானம்.

இவற்றினுள் போதியளவு தாய்ப்பால் இல்லாமை, குழந்தையின் பிறப்பு நிறை குறைவு மற்றும் வைத்தியர்களின் ஆலோசனை ஏற்றுக் கொள்ளக்கூடியவை ஆகும். மற்றைய காரணி கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை,

ஏனெனில் தாய்மார்கள் கர்ப்பிணிகள் கிளினிக் (Clinic) இல் குடும்ப நல உத்தியோகத் தரின் அறிவூட்டல் நிகழ்ச்சிகளில் முழுமையாக பங்கு பற்றாமையாலும் அவற்றை பின்பற்றாமை யாலும் இத்தகைய தவறுகள் ஏற்படுகின்றன.

அத்துடன் 180 நாட்களின் பின்னர் மேலதிக உணவு ஆரம்பித்தவர்களில் நோய்த் தாக்கம் குறைவாகவும் மற்றும் 180 நாட்களுக்கு முன்னரும் 180 நாட்களுக்கு பின் பல நாட்கள் பின்னரும் ஆரம்பித்தவர்களில் நோய்த்தாக்கம் அதிகமாகவும் இருந்தது அவதானிக்கப்பட்டது.

ஆகவே பெற்றோர்களே! 180 நாட்கள் வரை தாய்ப்பால் மட்டும் ஊட்டுவதும் அதன் பின்னர் 18-24 மாதங்கள் வரை படிப்படியாக மேலதிக உணவை வழங்குவதும் அத்தியவசிய மாக அமைவதுடன், இவையே ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்குவதற்கான அத்திவார மாகவும் அமையும்.

"நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்"

# ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே .....?

நவராஜ்
உளவளத்துணையாளர்
பல்துறைசார் சிகிச்சைக்குழு
யாழ் போதனா வைத்தியசாலை

உலகம் பலவழிகளிலும் முன்னேற்றம் கண்டு வருவதாக நம்பப்படுகின்றது. எனினும் அதில் மாற்றமுடியாத தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருந்த வண்ணமே உள்ளன.

மனிதன் செவ்வாய்க்குச் சென்று ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம்.. அது அவனுக்குச் சாத்தியப்படலாம். ஆனால் தான் இருக்கும் இந்தப் பூமியைச் செம்மையாக வைத்திருப்பது அவனுக்குக் கடினமாகவே இருக்கிறது.

அண்டவெளியைப் பற்றித் தன் மண்டையைக் குடையும் மனிதன் தான் வாழும் பூமிக்கு அந்நியனாக மாறிவருகின்றான். தன்னைத், தனது வாழ்க்கையைத் திறம் படக் கொண்டு நடத்த அவனுக்குத் தெரியவில்லை.

இதனால் இங்கு பல பிரச்சினைகள் மேலெழுந்து பூதாகாரமாகி நிற்கின்றன. இவற்றைத் தீர்ப்பது பற்றியும் அதைச் சரிசெய்வது பற்றியும் சிந்திக்க அவனுக்கு நேரம் இருப்பதில்லை. எனவே ஒவ்வொரு பிரச்சினை பற்றியும் சிந்திப்பதற்கு அவன் வருடத்தில் ஒவ்வொரு நாளை ஒதுக்கி வைத்திருக்கின்றான். அந்த நாளில் அதுபற்றிச் சிந்தித்து வருகின்றான்.

இவ்வாறு சிந்திக்கப்படும் ஒரு பிரச்சினையாகத்தான் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பிரச்சினையும் காணப்படுகின்றது. இக்கட்டுரையில் இன்று இது பற்றிச் சிந்திப்போம். சிந்திப்பதால் மட்டும் இதனை நிறுத்திவிட முடியாது என்பது தெரிந்திருப்பினும் இது பற்றி ஒரு சிலருக்காவது விழிப்புணர்வை ஏற்படுத்தினோம் என்ற திருப்தியாவது எமக்குக் கிட்டும். என்பதால் இதனை எழுதுகின்றோம்.

சிறுவர்கள் தொடர்பான துஷ்பிரயோகம் என்பது உலகில் இருக்கும் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாகவே கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது ஏன் முக்கியமான பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பினால் மனிதனுடைய வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறுபராயம் அப்பராயத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் – சிக்கல்கள் மனிதனது எதிர்கால வாழ்க்கையைச் சூனியமாக்கிவிடும் என்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்படுகின்றது என்று மறுமொழி சொல்லலாம்.

எனவே இச்சிறுபராயத்தில் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டியது சமூகத்தினதும், பெற்றோர் ஆசிரியரினதும் கடமையாகும். இக்கடமையை எல்லோரும் சரிவரச் செய்தால்

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்.

என்ற கவிதை வரிக்கமையப் பிள்ளைகளை உருவாக்க முடியும். ஆனால் எல்லோரும் தங்கள் கடமைகளை ஒழுங்காச் செய்ய முடிவதில்லை. அவர்களது சூழல் வாழ்க்கை முறைகள் அதனைத் தீர்மானிக்கின்றன. பிள்ளைகளை வளர்க்கும் போது தமது கடமையில் இருந்து தாம் தவறுவதையோ அதனால் உண்டாகும் விளைவுகள் பற்றியோ பெற்றோரும் சமூகமும் உணரத் தவறிவிடுவதோடு பிள்ளைகள் சந்திக்கும் இடர்பாடுகளை இது இயற்கையானது

தான் வளரவளர எல்லாம் சரியாகிவிடும் எனக் காரணம் கூறித் தப்பித்து விடுகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் சிறுவர் துஷ் பிரயோகம் என்பது பற்றிய அறிவு நமக்கில்லாமையே ஆகும். ஆதலால் அதுபற்றி எமது அறிவை நாம் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

சிறுவர்களுக்கு இழைக்கப்படும் துஷ்பிர யோகங்கள் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் சிறுவர்கள் என்றால் யார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் யார் என்று வரையறுப்பதி லேயே சில முரணபாடுகள் இருக்கின்றன. சிலர் 18 வயதுக்குட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் சிலர் 12 வயதுக்குட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் கூறுகின்றனர். சட்டத்தில் 18 வயதுக்குட்டபட்டவர் களே சிறுவர்கள் எனவரையறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு மனிதனுக்கு 12-13 வயதில் தான் சுயசிந்தனை ஆரம்பிக்கின்றது என்று உளவியலாளர் கூறுகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு சுயசிந் தனை உருவாகாத பருவத்தில் இருப்பவர்கள் சிறுவர்கள் என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

இத்தகைய பருவத்தில் இருப்பவர்களுக்கு இழைக்கப்படுகின்ற தீங்குகளை நாம் துஷ்பிர யோகம் எனலாம். அதவாது சிறுவர்களை உடல், உளரீதியாகக் காயப்படுத்தும் செயற்பாடுகளைத் துஷ்பிரயோகம் எனநாம் கருதலாம். இது ஆங்கிலத் தில் Child abuse என்றும் Child maltreatment என்றும் அழைக்கப்படுகின்றது.

இத்துஷ்பிரயோகம் பல வகைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உதாரணமாக பெற்றோர் பிள்ளைகளைப் புறக்கணித்தல் - அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை வழங்கா மல் விடுதல், கடுமையான தண்டனைகள் - உடல் ரீதியாகக் காயப்படுத்துதல், பாலியல் துன்புறத்தல் கள், மது போதைப் பொருள்பாவனைக்கு தூண்டுதல் வேலைக்கு அமர்த்துதல்போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை போன்ற, சிறுவர்களை உடல் உளரீதியாகப் பாதிக்கின்ற எந்த செயற்பாடும் துஷ்பிரயோகம் எனக் கருதப்படத்தக்கதாகும்.

இங்கு குறிப்பிட்ட துஷ்பிரயோகங்களில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்ற பிரச்சினை இன்று உலகளாவியரீதியில் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது துஷ்பிரயோகமா? என்று பலர் கேள்வி எழுப்புகின் றனர். இது பிரச்சினை என்றால் எம் பிள்ளைகளைக் கொண்டு வீட்டு வேலைகளைச் செய்விக்க முடி யாதா? எனச் சில பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

ஆதலால் இக்கேள்விக்குரிய பதிலைச் சொல்லுகின்ற கடப்பாடு இது பற்றிப் பேசுபவர்களு க்கு இருக்கின்றது. எனவே முதலில் நாம் வேலைக்கு அமர்த்துதல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் அது எப்படித் துஷ்பிரயோகம் ஆகின்றது என்பதை அறிய வேண்டும்.

வேலைக்கு அமர்த்துதல் என்பது 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட விளைவாகக் கருதப்படுகின்றது. இதன் பின்னர் பெருமளவான சிறுவர்கள் தொழிற் சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டு குறைந்த ஊதியத்துடன் கூடிய மணித்தியாலங்களுக்கு உழைக்கத் தூண்டப்பட்டனர். இத்தகைய நிலை மையே சிறுவர் உழைப்பு என்ற துஷ்பிரயோகமாகக் கருதப்பட்டது. சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்து வதை எதிர்த்து முதல்முதலில் 1802ஆம் ஆண்டு பிரிட்டனில் சட்டம் உருவாக்கப்பட்டது. எத்த னையோ சட்டங்களும் பல்வேறு நிறுவனங்களும் இதனைக் குறைப்பதற்கு இன்றுவரை செயற்பட்ட வண்ணமே உள்ளன.

எனினும் சிறுவர் உழைப்பு என்ற துஷ் பிரயோகம் குறைந்தபாடில்லை 1997 ஆம் ஆண்டில் International labor organization இன் UN கிளை யின் அறிக்கைப்படி உலகரீதியாக 15 வயதுக்குட்பட்ட 250 மில்லியன் சிறுதொழிலாளர்கள் உள்ளனர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று இதன் தொகை இன்னும் அதிகரித்திருக்கலாம்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடு களில் இப்பிரச்சினையின் அளவு அதிகரித்துக் காணப்படுவது தவிர்க்கமுடியததாக இருக்கின்றது. எமது நாட்டை எடுத்துக் கொண்டால் அது அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்னும் வகைக்குள் இருப்பி னும் உள்ளநாட்டு யுத்தம் காரணமாக அது மிகவும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எனவே இங்கு வறுமை என்பது பொதுவான ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதால் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்து கின்ற தன்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிள்ளையை ஏன் இந்த வயதில் படிக்க அனுப்பாமல் வேலைக்கு அனுப்புகின்றீர்கள் என்று சில பெற்றோரைக் கேட்டால் அவன் எங்கள் வீட்டுக் கஷ்டத்தை உணர்ந்து விரும்பித்தான் உழைக் கப் போகின்றான் என்று பதில் சொல்லுகின்றனர். விரும்பித்தான் அவன் வேலைக்குப் போகின்றான் என்று சொல்லப்பட்டாலும் இது துஷ்பிரயோக மாகவே கருதப்படும். ஏனெனில் அவனது வயது அவன் சுயமாகச் சிந்திக்கும் நிலைக்கு வரவில்லை என்பதைக்காட்டுகின்றது. இதனால் அவன் எடுக்கும் முடிவை அவனது விருப்பம் எனக்கொள்ளமுடியாது. சிலவேளைகளில் அவனிடம் சென்று படிக்கப்போகி றாயா என்றால் அவன் ஆம் ஆனால் என் வீட்டு நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை என்பான். உதாரணத் திற்கு ஒரு உண்மைச் சம்பவம்.

அவனுக்குப் 10 வயது வீட்டில் கஷ்டம் படிப்பதற்கு வசதியில்லை தகப்பனார் இரண்டாவது திருமணம் முடித்துள்ளார். அவர் தனது இரண்டாவது மனைவியின் வீட்டில் வைத்துக் கசிப்பு விற்கின்றார். இவனது குடும்பத்திற்கு ஏதும் கொடுப்பதில்லை இவனைப் பலவந்தமாக அந்த விற்பனையில் ஈடு படுத்தினார். அதற்கு அவனுக்கு 500 ரூபா வழங்கப் பட்டது அவன் அதனைத் தாயிடம் கொடுப்பான். அவனைச் சந்தித்த போது தனக்குப் படிப்பதற்கு விருப்பம் என்றும் குடுப்பக்கஷ்டத்தால் இதனைச் செய்யவேண்டியிருக்கின்றது என்றும் செய்யாமல் நின்றால் அப்பா பேசுவார் என்றும் குறிப்பிட்டான். தாயாரைக் கேட்டபோது அவன் குடும்பத்தின் நிலைமை உணர்ந்து செயற்படுகின்றான் என்றார்.

இங்கே அவனது உரிமைகளான கல்வி கற்பது, அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வது போன்றன மறுக்கப்படுகின்றன. இவ் விடத்தில், பெற்றோரிடம் தங்களுக்குத் தேவையான தைப் பெற்றுக்கொள்ளுகின்ற உரிமை பிள்ளை களுக்கு உண்டு என்பதையும். அதேபோல பிள்ளை களுக்குத் தேவையானதை வழங்குகின்ற கடமை பெற்றோருக்குண்டு என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சுயசிந்தனை வளர்ச்சியுறாமல் மற்றவர் களின் வாழிகாட்டலை, முன்மாதிரிகளை நம்பியி ருக்கும் சிறார்கள், சிறுவர் உழைப்பு என்கின்ற துஷ்பிரயோகத்திற்கு உட்படும் போது உளரீதியாக அதிகளவில் பாதிப்பை எதிர்கொள்ளுகின்றனர். உதாரணமாக கடினமான வேலைகளை ஓய்வின்றி அதிகநேரம் செய்வதால் மனஅழுத்தங்களுக்கு உள்ளாகுதல், இதனால் மிகச்சிறுவயதிலேயே வாழ்கை என்பது மிகவும் துன்பமாயமானது, இதை விட இறந்து போகலாம் என்ற சிந்தனைகளைக் கொண்டிருத்தல் சில சந்தர்ப்பங்களில் தற்கொலை முயற்சியை மேற்கொள்ளுதல், தங்களை ஒத்த மற்றைய சிறுவர்கள் அனுபவிக்கின்ற சுதந்திர உணர்வைத் தன்னால் அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்க உணர்விற்கு உட்படுதல் இதனால் தனது இந்த நிலைக்குக் காரணமானவர்கள் மீது கோபத்தை அல்லது வெறுப்பைக் காட்டுதல் பிஞ்சிலே பழுத்தல்

என்ற நிலை உழைப்பினால் கிடைக்கும் ஊதியத்தி னால் இவர்கள் வளர்ந்தவர்கள் போல தங்களைக் காட்டிக் கொள்ளுதல் அதற்காக வளர்ந்தவர்களோடு கூட்டுச் சேருதல், தண்ணியடித்தல் புகைப்பிடித்தல் போன்ற நடத்தைகளில் ஈடுபடுதல் இப்படி பலவகை யான பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

இவற்றினால் இவர்களது ஆளுமை சிதைக் கப்படுகின்றது சிலவேளைகளில் சமூகவிரோதப் போக்குள்ளவர்களாகவும் இவர்கள் வாழத் தொடங்கி விடுகின்றனர்.

எமது வாழ்க்கை முறையைப் பொறுத்த வரையில் வீட்டில் பிள்ளை வேலை செய்வது என்பது காலங்காலமாக இருந்து வரும் ஒன்று, தொழிற் சாலைகளுக்கு அனுப்பிவேலை செய்விப் பதுதான் துஷ்பிரயோகம் என்பதால் இதனை நாம் ஏற்றுக் கொள்ளமுடியும். எனினும் வீட்டில் அவர்களது விருப்பத்திற்கு மாறாக வேலைகளைத் திணிப்பது, உடல் உளரீதியாகப் பாதிக்கும் வகையில் வேலை செய்விப்பது துஷ்பிரயோகமாகவே கருதப்படும். என்பதை நாம் கருத்தில் நிறுத்தியே ஆகவேண்டும். இவற்றைக் கருத்தில் நிறுத்தாது எமது பிள்ளைகளை நாம் என்னவும் செய்வோம் என்று நினைத்துத் தான் தோன்றித் தனமாகச் செயற்படும் சமூதாயம் பிள்ளை களின் எதிர்கால வாழ்க்கைக்குச் சாவுமணி அடிக்கின்றது என்றே குறிப்பிடலாம்.

நாடுகாக்கும் தலைவராய் நாளை விளங் கப்போகின்றார்கள், எதிர்காலத்தில் நல்ல தூண்க ளாக விளங்குவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்கப் பட்டவர்கள் இப்படி தங்களையே தொலைத்து விட்டு நிற்பதற்கு நாம் ஒரு காரணமாக இருக்கலாமா? சிந்தியுங்கள். சிந்தனை இல்லை என்றால் எமக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசமே இல்லை.

**அன்பு மயமாக நில், உன்/வாழ்வுக்காலம்**
**அன்பு வழியில் செல்லட்டும்.**
**அதுவே உன் வாழ்வில்**
**நீ பெறவேண்டிய வெற்றி."**

–ஓர் அறிஞர்

# காசநோயற்ற உலகை நோக்கிப் பயணிப்போம்

மருத்துவர் Dr.C.S.யமுனானந்தா
மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி,
யாழ்ப்பாணம்.

இலங்கையில் பொதுவாக எல்லோராலும் சயரோகம், கசம், ரீபி (T.B) என அழைக்கப்படும் காசநோயானது மைக்கோ பக்ரீரியம் ரீயூப குளோஸிஸ் (Mycobacterium Tuberculo 515) எனப்படும் நுண்கிருமியினால் உண்டாகும் ஒருநோயாகும். இது 1882ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி ரொபட் கொச் என்னும் ஜேர்மனிய டாக்டரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந் நோய்க் கிருமிகள் சுவாச மண்டல பாதை வழியாகவும் உணவு மண்டல பாதை மூலமாக வுந்தான் உடலில் புகும். பச்சிளம் குழந்தை முதல் பல்விழுந்த முதியோர்வரை யாரையும் இந் நோய் விட்டு வைப்பதில்லை இது நுண்கிருமி களால் உண்டாகும் நோயேயன்றி பரம்பரை நோயல்ல எனவே காசநோயாளி ஒருவரை நோயின் ஆரம்பக்கட்டத்திலேயே இணங்கண்டு உடனடியாக சிகிச்சை செய்வதனால் நோயின் மூலமாக நுரையீரலுக்கு உண்டாகக் கூடிய பாதிப்புக்களை குணப்படுத்துவதன் மூலம் நோய் பரவுவதையும் தடுக்கலாம்.

காச நோய்க்கிருமியானது உடலின் சகல பகுதிகளையும் தாக்கக்கூடியது. இக் கிருமியின் தாக்கம் நுரையீரலைப்பாதிக்கும் பட்சத்தில் அது நுரையீரல் காசநோயையும் ஏனைய பகுதிகளான அதாவது எலும்பு மூட்டுக் கள் குடல், சிறுநீரகம், இதயம், மூளை, கண், தோல், கருப்பை, நிணநீர்ச் சுரப்பிகள், காது, தொண்டை, மூக்கு போன்ற அனைத்து பாகங்க ளோடு காசநோய் அளவாவி மனித குலத்தை சீரழியச் செய்து விடும்.

கணிப்பீட்டின் படி நோக்குகையில் வருடமொன்றுக்கு உலகில் 08 மில்லியன் காச நோயாளிகளை இனங்காணலாம் இதில் நான்கு மில்லியன் மக்களின் சளியில் கிருமி காணப்படு கின்றது இதில் 35% ஆனவர்கள் ஆசியக் கண்டத்திலேயே உள்ளனர்.

1. ஒவ்வொரு செக்கனுக்கும் ஒருவர் காச நோய்க்கிருமியின் தொற்றுக்கு ஆளாகின்றார்.
2. ஒவ்வொரு 04 செக்கனுக்கும் உலகில் எங்காவது ஒருவர் காச நோயாளியாகிறார்.
3. ஒவ்வொரு 15 செக்கனுக்கும் உலகில் எங்கா வது ஒருவர் காச நோயினால் இறக்கின்றார்.
4. வருடத்துக்கு சுமார் 2-3 மில்லியன் பேர் காச நோயாளிகளாக இறக்கின்றனர்.
5. உலக சனத்தொகையில் 1/3 பகுதியினர் காசநோய் பக்ரீரியாக்களின் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.
6. வேறெந்த தொற்று நோய் இறப்பையும் விட காசநோயினால் இறக்கும் மனிதரின் எண்ணிக்கை அதிகமாகும்.

காசநோயாளிகளில் 80% மானோர் நுரையீரல் காச நோயினால் பாதிக்கப்பட்டவர்க ளாவர். உடலில் நிலை கொள்ளும் காசநோய்க் கிருமிகள் நோயாளியின் உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்திக் கலங்களுடன் போராடும் போது. அதனை யொட்டிய இழையங்கள் சேதமடைவ தோடு ஒருவேளை கிருமிகள் வெற்றி பெறின் அவை எண்ணிக்கையில் பல்கிப் பெருகி உடலில் நோயை உண்டாக்கும். அப்போது நோயின் அறிகுறி வெளியில் தொன்படும். உடலினுள் புகுந்த நோய்க்கிருமியானது ஆயுள் பூராகவும் அவரது உடம்பினுள்ளேயே வாசம் செய்து விடும் ஆனால் காசநோய்க்கிருமிகள்

உட்புகுந்த மாத்திரத்திலேயே நோய் ஏற்பட்டு விடுவதில்லை. நோய் தொற்று ஏற்பட்டவர்களில் 10% ஆனவர்கள் மாத்திரமே காச நோயாளி யாகின்றார்கள். காசநோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் ஆண்டிற்கு 10–15 பேருக்கு நோய் தொற்றலினை ஏற்படுத்துவார் இவர் உரிய சிகிச்சை பெறத்தவறின் 5 வருடங்களுக்குள் இறப்பை தழுவக் கூடிய வாய்ப்பு 50% மாக காணப்படும்.

நோயின் அறிகுறிகள் வெளிப்படும் போது நோயால் பீடிக்கப்பட்டுள்ளதை உணர்ந்து கொள்ளலாம். காசநோய் கிருமிகள் உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் இடங்களுக்கேற்ப நோயின் அறிகுறிகள் வேறுபடும். நுரையீரலினுள் காசநோய் உண்டானால் 3 வாரங்கள் தாண்டிய இருமல் பிரதான அறிகுறியாகும் நோய் கிருமி களுடனான சளி கொண்ட நோயாளிகளில் 95% இந்நோய் அறிகுறி உண்டாகும். ஆனால் இருமல் உள்ள அனைவரும் காச நோயாளிகள் என்பது அர்த்தமல்ல.

**காச நோயின் அறிகுறிகள் என குறிப்பிடும் போது**

1. தொடர்ச்சியாக 03 வாரங்களுக்கு மேலான இருமல்
2. மாலை நேரக் காய்ச்சல்
3. சளியுடன் இரத்தம் வெளியேறல்
4. நிறை குறைவடைதல்
5. உணவில் விருப்பமின்மை
6. இரவு நேரங்களில் வியர்த்தல்
7. களைப்பாகவும், பலவீனமாகவும் காணப்படல்
8. நெஞ்சுவலி அல்லது வேகமான நாடித்துடிப்பு காணப்படல்.
9. நிண நீர்க் கணுக்கள் வீங்கல்.
10. எதிலும் கவனம் செலுத்த முடியாத மனச் சோர்வு
11. உணர்ச்சிப் போராட்டங்கள்
12. தூக்கமின்மை மற்றும் மனநலம் குன்றி விட்டதோ என்ற எண்ணம்

மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் எதுவுமே காச நோய்க்கு மாத்திரமே உரித் தானவையல்ல எனவே இந்த நோய் அறிகுறிகள் உள்ள ஒருவர் மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்வதே சிறந்தது. ரிச்சர் மார்டன் எனும் இங்கிலாந்து மருத்துவர்தான் காச நோயின் அறிகுறிகளையும் அறிமுறை களையும் நுட்பமாய் ஆராய்ந்து உலகிற்கு எடுத்துரைத்தவர்.

நோயாளி இருமும் போது வெளிவரும் ஆயிரக்கணக்கான நோய்க்கிருமிகளைக் கொண்ட துணிக்கைகள் வளியில் பரவும் இது வளியில் பரவிப் பலமணிநேரம் இருக்கும். காற் றினால் ஐதாக்கப்படும் ஒருவரில் நோய்க்கிருமி கள் தொற்றுவது என்பது, எவ்வளவு நேரம் நோயாளி இருமும் போது உள்ள வளியை சுவாசிக்கின்றார் என்பதிலும் வளியிலுள்ள நோய்க்கிருமிகளின் செறிவிலும் தங்கியுள்ளது. குளிரூட்டப்பட்ட அறைகளில் அல்லது கடை களில் காற்றோட்டம் சிறப்பாக அமையாவிட் டால் நேரடி சூரிய வெளிச்சம் அறைகளுக்கு செல்லாவிடின் காசநோய் கிருமிகள் உயிர் வாழும் இக் காச நோயானது அதிகமாக பாதிப்பது எவரை என நோக்குவோமாயின்.

01. காசநோயாளி ஒருவர் தும்மினாலோ அல்லது இருமினாலோ அவர் தும்மலில் இருந்தோ அல்லது இருமலில் இருந்தோ வெளிப்படும் எச்சிலில் எண்ணற்ற காச நோய்க் கிருமிகள் இருக்கும் அவை அருகில் இருப்பவரிடம் உடலினுள் உட்புகுந்து அவரைத்தாக்கும்
02. வீட்டுத்தூசி, தெருத்தூசி, கலந்துவிட்ட காசநோய்க்கிருமிகளை சுவாசித்தாலும் தொற்றிக்கொள்ளும் வாய்ப்பு
03. உடல்தோலில் ஏற்பட்டுள்ள காயங்கள் வழியே கூட காசநோய்க் கிருமி உடலில் வாசம் செய்து காச நோயினை ஏற்படுத்தும்.
04. வீட்டில் கண்ட கண்ட இடத்தில் காசநோயாளி எச்சிலையோ அல்லது சளியையோ துப்புவ

தால் அவர் வீட்டிலிருப்பவர்களுக்கு காச நோய் ஏற்படும்.

05.நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கும் வயிற்றுப்புண் உள்ள நோயாளிகளுக்கம், குறை தைரொய்டு நிலை கொண்டவருக்கும் வெகுவிரைவில் தொற்றிவிடும்.

06.புரதச்சத்து குறைவால் ஏற்படும் ஊட்டச்சத்து குறைவுடையோரையும் சுத்தமில்லாத மிகவும் நெரிசல் நிறைந்த இடங்களில் வாழ்வோரையும் காச நோய் தாக்கும்.

07.HIV வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருப் போர், மதுபானம்ஷஷெ. போதைப்பொருள் மற்றும் புகைப்பிடித்தலுக்கு அடிமைப்பட் டோர் குறிப்பாக "ஸ்டிரோய்ட்" வகை மருந்து களை கட்டுப்பாடின்றி உட்கொள்வோரை யும் காச நோய் இலகுவில் தாக்கும்.

08.சமையலறையில் அதிகம் வேலை செய்வோர் ஆடைத்தொழிற் சாலைகளில் வேலை செய்வோர் தூசுகளில் வேலை செய்வோர் குறைந்த காற்றோட்டம் உள்ள இடங்களில் நெருக்கமாக வாழ்வோர், முதலானவர்களிலும் காச நோய் இலகுவில் தாக்கும்

இலங்கையில் வருடாந்தம் பத்தாயி ரத்திற்கும் மேற்பட்டவர்கள் காசநோயாளிக ளாக மாறிவருகின்றனர் 350 பேர் உயிரிழக் கின்றனர் 2011ம் ஆண்டில் 10095 பேர் இலங் கையில் காச நோயாளிகளாக இனங்காணப் பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது சூழல் காரணிகளான சனநெருக்கம், வறுமை, போதிய உணவின்மை, போன்றனவும் யுத்தத்தி னால் ஏற்பட்ட சமூக கட்டமைப்பு , உள நெருக் கீடு, போக்குவரத்து வசதிஇன்மை போன்றன காசநோய் ஏற்பட காரணிகளாக அமைந்திருக் கின்றன.

எம்மிடையே தொற்றிக் கொண்டு விட்ட மேற்கத்திய வாழ்வியலும் முற்று முழுதாக மேற்கத்திய வழிகளை நம்புவது தான் எமக்கு முதல் சவாலாக இருக்கின்றன தவிர காச நோயற்ற நபரின் கண்ணீர் வரிகள் போல் இன்னமும் நம் சமுதாயத்தினுள் இழையோடி யுள்ள காச நோயாளர்களின் மீதான இரக்கமற்ற வெறுப்பும், புறக்கணிப்பும் பிறிதொரு காரண மாகின்றது. காச நோயினைக் கண்டு யாரும் அஞ்சத்தேவையில்லை. தற்போது அதற்கான சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதனை ஆரம்பத்திலேயே கண்டறிதல் வேண்டும் அதாவது அறிகுறிகள் காணப்படு மிடத்து தங்கள் பகுதிகளிலுள்ள அரச வைத்திய சாலைகளிலே பண்ணையிலுள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்திலோ காட்டி பரீட்சித்து பார்க்க வேண்டும் நோய்க்கு சிகிச்சை அளித்தல் இரண்டு நோக்கங்களை உடையது.

01. நோயாளியை குணமடையச் செய்வது
02. மற்றயவர்களுக்கு தொற்று ஏற்படாது தடுப்பது.

இதற்குப் பிரதானமாக இரண்டு முறைக ளைக் கொண்டு பரீட்சித்துப் பார்க்க முடியும்.

01. சளிமாதிரியொன்றை நுணுக்குக் காட்டியின் கீழ் பரீட்சித்துப் பார்க்கும் சளிப்படல பரிசோதனை
02. எக்ஸ் கதிர் மற்றும் சளிப்படல படியவைப்பு

போன்ற முறைகளைக் கொண்டு கண்டறிய முடியும். இவற்றுள் சளிப்படல பரிசோதனை மிகவும் வெற்றிகரமானதும் இலகுவானதும் இலாபகரமானதுமான பரிசோதனையாகும். சளிப்படலத்தினுள் மைக்கோ பக்ரீரியம் ரியூ பகுளோஸிஸ் எனப்படும் காசநோய்க் கிரு மியை நுணுக்குக்காட்டி மூலமாக காசநோயின் தாக்கத்துக்கு உள்ளான குறித்த அவயங்களில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் இனங்காணப்படும். இது தவிர சில சந்தர்ப்பங்களில் குருதிப் பரிசோதனையும் மேற் கொள்ளப்படும்.

காசநோயினை சிகிச்சையின் மூலம் முழுமையாகக் குணப்படுத்தலாம் என்பது ஒரு

சிலருக்கு தெரிந்திருந்தாலும் அது அனைவரையும் சென்றடையவில்லை என்பது உண்மையே. காசநோய் கிருமிகளை அழிக்கக்கூடிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகின்றன சரியான மருந்து மாத்திரைகளை சரியான காலப்பகுதியில் சரியான முறையில் தொடர்ந்து பயன்படுத்தினால் நோயைப் பூரணமாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். காசநோய்க் கிருமிகள் ஏனைய நோய்க்கிருமிகளை விட தாக்குப்பிடிக்கும் திறன் கூடியவை என்பதால் அவற்றை அழிப்பதாயின் சுமார் 06 மாதங்கள் வரை தினமும் மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டும். மாத்திரைகளைப் பயன்படுத்த தொங்கிய சிறிது காலத்தில் முற்றாக மறைந்து விட்டபோதிலும் நோய்க் கிருமிகளை முழுமையாக உடலி லிருந்து அகற்றி பூரண குணம் பெற குறிப்பிட்ட காலம் மருந்துகளை தொடர்ச்சியாகப் பாவித்து வரவேண்டும். நோயாளியின் தன்மையைப் பொறுத்து அவர் சிகிச்சை பெற வேண்டிய கால எல்லையை வைத்தியர் தீர்மானிப்பார்.

உலக அளவிலான காச நோய் தடுப்புத் திட்டங்கள் ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிவதற்குரிய அனைத்து வசதிகளும், தொற்று எதிர் கூட்டு மருந்துகள் மற்றும் மிகச்சிறந்த மருத்துவர்களும் நவீன மருத்துவ மனைகளும் தற்போது காணப்படுகின்றன உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரனையுடன் காச நோயாளருக்கு நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சை தற்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. நோயாளிகள் சுகாதார சேவை உத்தியோகத்தினரின் நேரடிக் கண் காணிப்பில் முதல் இரண்டு மாதங்களும் 04 வகையான மருந்துகள் கொண்ட மாத்திரை வகையொன்றையும அதிலிருந்த எஞ்சிய 04 மாதங்களிற்காக 02 வகையான மருந்துகள் கொண்ட மாத்திரை வகையொன்றையும் உட் கொள்ள வேண்டும். இவற்றை சிரமாக உட் கொள்வதால் நோய் முற்றாக குணமடைந்துவிடும்.

தொற்று நோயான காசநோயைக் கட்டுப் படுத்துவதில் தொடர்பாடலானது முக்கிய பங்கினை வகிக்கின்றது. நோய் பற்றிய தொடர்பாற்றுக் கருமங்களில் சுகாதார சேவை செயற்குழுவினரும் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க ஒன் றாகும. இலங்கையில் காசநோயைக் கட்டுப் படுத்தும் முகமாக நிறுவப்பட்டுள்ள காசநோய்த் தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய செயற்திட்டத்தின் பிரதான நோக்களாவன,

01. நோயாளிகளை இனம் காணல்
02. சிகிச்சை வழங்கலுடன் தொடர் அவதானிப்பை மேற்கொள்ளல்
03. நோய் குணமடைய வழிகாட்டல்.

மேற்காணும் செயற்பாடுகள் முறையாக வழங்கப்பட

01. தலைமை அலுவலகம் (நாரஷேன் பிட்டிய)
02. மார்பு வைத்திய சாலைகள்
03. மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையங்கள்
04. மார்பு சிகிச்சை வார்ட்டுகள்
05. கிளினிக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

காசநோய் எனப்படும் ரீயூபர் குளோசிஸ் நவீன சிகிச்சை முறைகளுக்கேற்ப பெருமளவில் கட்டுப்படுத்தக்கூடியது எனக் கருதப்பட்டாலும் நோய் பற்றிய அறிவூட்டல் நோயைக் கட்டுப்படுத்துவதிலும் சிகிச்சைகளை ஒழுங்காகப் பெறுவதிலும் நோய்த்தாக்கம் ஏற்படாமல் முன் கூட்டியே நோய்த் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதிலும் அக்கறையும் அவதானமும் மக்களிடையே குறைவாக இருப்பதால் காச நோய் தொடர்ந்து கட்டுப்படுத்துவது என்பது மிகவும் சிரமமானதாக ஒன்றாகவே காணப்படு கின்றது.

எனவே நோய் பற்றிய எச்சரிக்கை உணர்வும் அவதானமும் எம்மிடையே காணப்

பட வேண்டும். அதாவது ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஒவ்வொரு சுவாச மூச்சுக் கணங்களையும் காச நோய்த் தடுப்பிற்காக அர்ப்பணிக்க வேண்டும் அத்தகைய பணியை முன்னெடுக்கும் நோக்குடன் காச நோய்த் தடுப்பும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்திட்டம் NPTC & CD செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத் தக்கது. எனவே காச நோயாளர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கவோ தள்ளி வைக்கவோ பழி வாங்கவோ தேவையில்லை. அவர்கள் உரிய மருத்துவ சிகிச்சை பெறுவதை உறுதிப்படுத்துவதும் நோய் மேலும் பரவாது தடுப்பதும் சமூகத்தின் பொறுப்பாகும். அன்மையில் கூட யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக காணப்பட்ட தென்னிலங்கையை சேர்ந்த நபர் ஒருவருக்கு காசநோய் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

காசநோய் ஏற்படாது தடுக்க நோயைப் பரப்புவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான சிகிச்சை பெறவைத்து தரப்படுத்தல் இன்றியமையாததாகும். நோயாளிக்குச் சரியான சிகிச்சையைப் பெற அவரது குடும்பத்திற்கு உதவ வேண்டும். அப்பகுதி சுகாதார சேவையாளர்களும் இதற்கு உதவவேண்டும் இதனால் முற்றாக காசநோயினை நிறுத்தலாம் யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் அரச வைத்திய சாலைகளிலோ பண்ணையிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்திலோ காட்டி சளிப் பரிசோதனை செய்து இலவசமாக சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு 06 மாதங்கள் சிகிச்சை வழங்கப்படுகின்றது. எனவே மருந்தை உடல் நன்றாக இருக்கின்றது என விட்டு விடாது தொடர்ந்து ஆறுமாதங்கள் உட்கொள்ள வேண்டும். அப்போது தான் தங்கள் குடும்பத்தினர் அயலவர்கள் நண்பர்களுக்கு நோய் தொற்றுவதை தவிர்த்துக் கொள்ள முடியும் நோய்கான சிகிச்சையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நான்கு மாதங்கள் இரண்டு மாதங்களுக்கும் இரண்டு மருந்துகள் நான்கு மாதங்களிற்கும் குறைந்தது கொடுக்கப் படும். வைத்தியசாலையில் தங்க விரும்பாதோர் தனிப்பட்ட முறையில் சிகிச்சை பெறலாம்.

இங்கு முக்கியமாக கூறப்பட வேண்டியது யாதெனின் காச நோயாளிகள் இடைநடுவில் மருந்துப்பாவனையை கைவிட்டு விடுவார். மருந்துப் பாவனையின் பின் நோய் அறிகுறிகள் அற்றவுடன் நோய் முற்றாக மாறிவிட்டது என்ற தப்பெண்ணமாகும். இவ்வாறு மருந்துகளை இடையிடையே ஒழுங்கின்றிப் பாவித்தால் கிருமிகள், நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு எதிர்புத் தன்மை உடையதாக உருவாகிவிடும். மேலும் தனித்தனியே ஒவ்வொரு மருந்துகளை உட்கொள்ளும் போதும் நோய் எதிர்ப்புச் சக்தியை பெற்றுவிடும் என்பதால் ஒரே தடவையில் நான்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இவை ஒவ்வொருவரின் உடல் நிறைக்குகேற்ப கொடுக்கப்படுகின்றன. மருந்துகளை சரிவரப் பாவிக்காதவர்கள் 50% மாணவர்கள் 05 வருடங்களிற்குள் இறந்து விடுகின்றனர். மேலும் இடைநடுவே சிகிச்சையினைக் கைவிடுபவர்களுக்கு மீளவும் சிகிச்சையினை ஆரம்பித்தல் பொருளாதார ரீதியிலும், உளவியல் ரீதியிலும் சுமையாக அமைந்துவிடும். இதனைத் தவிர்க்க முடியுமா என்ற கேள்விக்கு ஆம் என்ற பதிலைக் கூறவேண்டுமாயின் மக்களுக்கு விழிப்புணர்வும் சுகாதார அறிவும் நடத்தையில் மாற்றமும் அவசியம் வேண்டும். அதாவது

01. ஒவ்வொரு நோயாளியும் தனக்கு உண்டான காச நோய் உறவினர்க்கும் சுற்றத்தவருக்கும் பரவாது தடுக்க உறுதி கொள்ள வேண்டும்
02. காச நோயாளிகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் முற்றிலும் குணமாக்கக் கூடியது என்ற திட எண்ணத்தோடு இருத்தல் அவசியம்.
03. இந்நோயாளிகள் தமக்கு தொற்று நோய் ஏற்பட்டு விட்டது என்ற ஆழ்மனதில் ஒர் உணர்வு ஏற்படுவதைத் தவிர்த்தல் அவசியம்.
04. இந்நோயினை முழுமையாக நிர்ணயித்த

பின்பு, மருத்துவர்களின் ஆலோசனையினை ஏற்று மருத்துவர் சொல்லும் காலம் வரை விடாது தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டும்.

05. கடுமையான நோயிருப்பவர்கள் அதற்குரிய இடத்தில் தங்கி இருந்து சிகிச்சை பெறுதல் உகந்தது.

06. இந்நோய் இருப்பவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் கையில் கைக்குட்டை யினை வைத்துக்கொண்டு இருமுவது நல்லது. இதனால் மற்றவர்களுக்கு தொற்று ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

07. இந் நோயாளிகள் கண்ட கண்ட இடத்தில் எச்சிலையோ அல்லது சளியையோ துப்பக்கூடாது சளியைக் கவனமாகக் சேகரித்து ஆழமாக புதைத்து விட வேண்டும் அல்லது எரித்து விட வேண்டும்.

08. கர்ப்பமாய் இருக்கும் தாய்க்கு காசநோய் இருப்பின் பிரசவம் மருத்துவமனையயி லேயே நிகழுமாறு செய்யவேண்டும்.

09. கர்ப்பம் தரித்திருக்கும் காலப்பகுதியிலும் பாலூட்டும் காலப்பகுதியிலும் மற்றும் குழந்தையைப் பராமரிக்கும் காலப்பகுதி யிலும் விசேட TB எதிர்ப்பு சிகிச்சைகள் (Anti TB Treatment) வழங்கப்படவேண்டும். இந்த சிகிச்சைகள் மூலம் கர்ப்பத்தில் இருக்கும் சிசு தாய்ப்பால் பருகும் குழந்தை மற்றும் தாயால் பராமரிக்கப்படும் குழந்தை ஆகிய பருவங்களில் தாய் மூலம் காச நோய் தொற்று சிசுவுக்கோ அல்லது குழந்தைக்கோ ஏற்படாமல் பாதுகாக்கப்படுகின்றன.

10. பிறந்தவுடன் போடும் பி.சி.ஜி (B.C.G) தடுப்பு ஊசியில் மூளைக் காசம் போன்ற நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும் BCG தழும்பு பிள்ளைகளில் ஏற்படாவிடின் 06 மாதம் தொடக்கம் 05 வயது வரையான பிள்ளை களுக்கு மீளவும் BCG தடுப்பு மருந்து ஏற்றல் அவசியம்.

11. குடும்பத்தில் எவருக்கேனும் காச நோயிருப் பின் அக்குடும்பத்தில் இருக்கும் அனைவரும் பரிசோதித்துக்கொள்வது அவசியமாகும்.

12. சுத்தமான காற்றோட்டமுள்ளதும் சூரிய ஒளி படக்கூடியதுமான அறையொன்றில் நோயாளிகள் வசித்தல் வேண்டும்( சூரிய ஒளி காச நோய் கிருமிகளை அழித்துவிடும்)

13. 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள் காச நோய்த்தொற்று உடையவருடன் தொடர்பு இருந்தால் கட்டாயமாக ஒரு மருந்து ஆறு மாதங்களுக்கு அளிக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் சிபாரிசு செய்துள்ளமையை கவனிக்க வேண்டும்.

இவ்வாறாக காச நோய் ஒருவரிலும் இன்னொருவருக்கோ அல்லது சமூகத்திற்கோ பரவுவதை தவிர்த்து எமது எதிர்கால சந்ததியை காச நோயிலிருந்து பாதுகாக்க வேண்டியது எமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

மேலும் மாவட்ட ரீதியில் காச நோயி னைக் கட்டுப்படுத்த சுகாதார உத்தியோகத்தரும் சில நடவடிக்கைகளை மேற்கொள்வார். சமூகத்தில் வாழும் மக்களும் இவர்களுக்கு உறு துணையாக இருக்க வேண்டும். அதாவது சுகாதார உத்தியோகத்தரின் நடவடிக்கைகளாக.

01. காசநோய் உள்ளவரென ஐயுறுவோரை அடையாளம் காண வேண்டும்.

02. ஆய்வு கூட உதவியுடன் நோயாளிகளைக் கண்டறிதல்.

03. நோயாளிகளைப் பதிவு செய்தல்

04. சிகிச்சையினை அவதானித்தல்

05. பதிவு செய்தலும் அறிக்கை சமர்ப்பித்தலும்

06. ஒழுங்காக மருந்துகளை விநியோகித்தல்

07. மேற்பார்வை செய்தல்

08. சிகிச்சை பெறும் காசநோயாளருடன் நெருங்கிய தொடர்புடையவர்களைச் சளிச் சோதனைக்கு வழிகாட்டவேண்டும்

09. ஒவ்வொரு பொதுச் சுகாதார பரிசோதகர் களும் குடும்ப நல மாதுக்களும் தங்கள் பிரதேச வரைபடத்தில் காசநோயாளர் இனங்காணப்படின் சிவப்பு நிற அடையாள மிட்டு காச நோயினை முழுமையாக

கட்டுபடுத்திய பின் சிவப்பு நிறத்தை அகற்ற வேண்டும் அவ் அவ் பிரதேசச் செயற்பாட்டின் பின்னூட்டலாகக்கருதலாம்.

இவ்வாறாக ஒவ்வொரு மனிதரும் தமக்குரிய பணிகளை மேற்கொள்ளும் போது எமது எதிர்கால சந்ததியினர் காப்பாற்றிக் கொள்வது சுலபமாக்கப்படும்.

காசநோய் வைத்திய சாலையில் பணிபுரியும் அனைவரும் அளப்பரிய சேவையே செய்கின்றனர். காசநோய் பரவக்கூடியது. தும்மல், இருமல், மூலமும் துப்பல் மூலமும் பரவும். வாய் மூக்குப் பகுதிகளுக்குக் கவசம் அணிந்து நோயாளியை அணுகுவதால் தொற்றலைத் தவிர்க்கலாம் மருந்துகள் கொடுத்து ஒரு கிழமையில் நோய்த் தொற்றல் குறைந்து விடும் ஒவ்வொரு நோயாளியையும் எமது தந்தையாக, தாயாக, சகோதரராக நினைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். காசநோய் முற்றாக குணப்படுத்தக் கூடியது. சமூகத்தில் பரவுவது கட்டுப்படுத்தக்கூடியது ஒவ்வொரு 100 காச நோயாளருக்கும் சிகிச்சை அளிக்கும் போது 15 இறப்புக்கள் தவிர்க்கப்படு கின்றன.

**"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்**
**என்று அப்பால் நாற் கூற்றே மருந்து"**

என திருவள்ளுவர் கூறியமை சமுதாய நேரக் கண்காணிப்பிலான காசநோய் சிகிச்சைக்கு சாலப்பொருந்தும்.

காச நோய் தொற்றிவிடும் என்ற பயம் காரணமாக நோயாளிகளையும் காசநோய் வைத்தியசாலையையும் புறம் தள்ளும் மனப்பாங்கு எம் மக்களிடம் இருக்கின்றது. எனவே விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதாவது காசநோய் தினமான பங்குனி 24ம் திகதி மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கட்டுரைகள், ஓவியங்கள், நாடகங்கள், சுவ ரொட்டிகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தலாம் காசநோய் தொடர் பான இணைந்த வேலைத்திட்டத்தினை அமு லாக்கலும் சிறைகளில் உள்ளோர், மற்றும் அகதி கள்அதிகளவு நோய்வாய்ப்பட ஆபத்தாக உள்ள கிராமங்களில் அதிக கவனம் செலுத்தி பரிசோதனைக்கு உட்படுத்தலாம். பொதுவான சுகாதாரப் பழக்கங்களை மேம்படுத்தல், சமூகப்பங்களிப்பை அதிகரித்தல் நோய் பற்றிய அறியாமையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் காசநோய் பரவுவதை நிறுத்தி நோய்வாய்ப்படு வோரின் எண்ணிக்கையை 2015 ம் ஆண்டள வில் குறைந்து செல்ல வழிவகுக்க வேண்டும் எனவே காச நோய்க்கு எதிராக 2015ம் ஆண்டில் புதிய மருந்துகள் பாவனைக்கு கொண்டுவரப் பட்டு 2050 ம் ஆண்டில் புதிய மருத்துவ உதவியு டன் உலகிலிருந்து காச நோயினை அறவே அகற்றி எமது எதிர்கால சந்ததிக்கு காச நோயினை அளிக்க மாட்டோம் என ஒவ்வொரு மனிதரும் திடசங்கற்பம் பூணுவோமாக.

வைர விழா மலர் பார் போற்ற
வாழ்த்துகின்றோம்

# ஜெயானந்தஸ்வரி எலக்ரிக்கல்ஸ்


மின்சார இலத்திரனியல் உபகரணங்கள்
பைப்வகை விற்பனையாளர்




பலாலி வீதி,
கோண்டாவில் டிப்போ அருகாமை.
தொ. பே. இல: 021 4916586
077 9906004

வைர விழா மலர் பாரினில் வைரம் பதிக்க
வாழ்த்துகின்றோம்

# றோயல் தையலகம்
# Royal Tailors






ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.
தொ. பே. இல. 077 6513694


வைரவிழா மலர் சிறக்க எமது வாழ்த்துக்கள்

# Remo Cream House
# றிமோ கிறீம் கவுஸ்




சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
ஐஸ்கிறீம்
ஸ்பெஷல் ஐஸ்கிறீம்,
சொக்கிலேட் ஐஸ்கிறீம்,
நட்ஸ் ஐஸ்கீறீம்,
வெனிலா ஐஸ்கிறீம்,
புருட்சலட் ஐஸ்கிறீம்,
ஜெலி ஐஸ்கிறீம்,
ஸ்பெஷல் பீடா
அனைத்திற்கும் நீங்கள் நாட
வேண்டிய ஒரேயொரு இடம்
றிமோ கிறீம் கவுஸ்









வைர விழா மலர் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்

# ஆர். கே. என்ரபிறைஸஸ்

நீர் இறைக்கும் இயந்திரம்

இயந்திரம்

மின்சார உபகரணங்கள்

கட்டடப்பொருட்கள்

விவசாய உபகரணங்கள்

**PVC**பைப் வகைகள்

ஆகியவற்றின் ஏக விநோகத்தர்கள்



**இல. 150, 133, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Te: 021 222 4021
Tiles: 021 222 4688
Fax: 021 222 2052
E-mail: arkjaffna@sltnet.lk


புதுமை பல சேர்த்தே வைரவிழா மலர் வாழ்க

# செல்வா எலக்ரிக்கல்ஸ்

# *SELVAH ELECTRICAL*

**மின்சாரப் பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்**

Distridutors of Electricals Goods, P.V.C Pipes & Fitting etc.



**No. 21 Palaly Road, Thirunelvely**
**Tel: 021 3218617,**
**021 4590524**

**இல. 21 பலாலி வீதி, திருநெல்வேலி**
**தொ.பே.இல. 021 3218617,**
**021 4590524**

# குருதி (கேள்வி விடை)

Dr. Ms. தாரிணி குருபரன்
வைத்திய பொறுப்பதிகாரி
பிராந்திய இரத்த நிலையம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**1. குருதி என்றால் என்ன?**

குருதி என்பது திரவ வடிவிலான ஒரு தொடுப்பிழையமாகும். இது வெண்குருதிக்கலங்கள், செங்குருதிக்கலங்கள் மற்றும் குருதிச்சிறுதட்டு என்பவற்றைக் கொண்டிருக்கிறது. இதன்மூலம் ஒட்சிசனை உடல் இழையங்களுக்கு கொண்டு செல்லவும், காபனீரொட்சைட்டை உடல் இழையங் களில் இருந்து அகற்றவும் உதவி செய்கிறது.

**2. இது மனித உடலின் எப்பகுதியிலிருந்து உற்பத்தியாகின்றது?**

என்பு மச்சையில் இருந்து.

**3. மனிதனின் உடலில் சாதாரணமாக எவ்வளவு குருதி உள்ளது?**

50-60Kg சராசரி நிறையுடைய மனிதனில் 5 L வரையான குருதி காணப்படுகிறது.

**4. இரத்ததானம் என்றால் என்ன? இது ஏன் அவசியம்?**

சுகதேகியான ஒருவர், இன்னொரு உயிரைக் காப்பாற்றுவதற்காகச், சுயவிருப்புடன் எக் காலத்திலும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தன் இரத்தத்தின் ஒரு கூறை ஒருவிதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் கொடையாக வழங்குவது.

**5. இரத்த தானத்தின்போது எவ்வளவு குருதி வெளியேற்றப்படுகின்றது? இதனால் கொடுப்பவருக்கு பாதிப்பு இல்லையா?**

400 - 450ml பாதிப்பு இல்லை. ஏனெனில், சாதாரணமாக குருதியில் உள்ள கலங்களானது குறிப்பிட்ட ஆயுள்காலத்தை கொண்டுள்ளது. குறிப்பிட்ட காலத்தின்பின்னர் இக்கலங்கள் சாதாரணமாகவே அழிவடைகின்றது. அத்துடன் 1/10 பகுதியே தானமாக வழங்கப்படுகின்றது. இவ்விழப்பு உடற் செயற்பாட்டைப் பாதிக்காது. நான்கு மாதங்களுக்கு ஒருமுறை குருதி வழங்கு வதால் சுகதேகி ஒருவருக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படுவதில்லை.

**6. இரத்தம் யார் யாருக்கு தேவை?**

விபத்துக்களின்போது குருதியை இழந்தவர்களுக்கு சத்திர சிகிச்சையின்போது குருதி இழப்பு ஏற்பட்டவர்களுக்கு குருதிச்சோகை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குருதி உறையாமை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டெங்கு குருதிப்பெருக்கு நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு.

**7. இரத்த தானம் எங்கு, எப்படி செய்யலாம்?**

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள பிரதானவைத்தியசாலையில் உள்ள இரத்தவங்கியில் செய்யமுடியும். யாழ்ப்பாணத்தில் யாழ் போதனா வைத்தியசாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் இரத்ததானம் செய்ய முடியும். இரத்த வங்கி சமூகத்தினருமாக நடமாடும் இரத்ததான முகாமை உங்கள் பிரதேசத்தில் ஒழுங்கு செய்ய முடியும்.

**8. இரத்த தானம் செய்வதற்கு தேவையான அடிப்படை தகுதிகள் என்ன?**

18-60 வயதில் சுகதேகியான, 50Kg இற்குக் கூடுதலான உடல்நிறையை உடைய ஒருவர் இரத்ததானத்தை நான்கு மாதங்களுக்கு ஒருமுறை செய்ய முடியும். இரத்ததானம் செய்பவருக்கு, நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் மற்றும் குருதியின் மூலம் கடத்தப்படும் நோய்கள் இருத்தல் கூடாது அத்துடன் கடந்த ஒருவார காலத்தினுள் ஏதாவது மாத்திரை உட்கொண்டவர்களும், காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களும் குருதி வழங்க முடியாது.

**9. இரத்த தானம் செய்த பின்பு விசேடமாக சாப்பிடுதல் வேண்டுமா?**

சுகதேகியான ஒருவர் வழமைபோல உணவு எடுக்கலாம் இல்லை குருதிவழங்குவதால் ஏற்படும் நீரிழப்பை தடுப்பதற்கு தேவையான அளவு நீரை உள்ளெடுப்பதே போதுமானது.

**10. இரத்ததானம் செய்வதால் என்ன நன்மை?**

இரத்ததானம் செய்வதன்மூலம் இன்னொரு நோயாளியை காப்பாற்றிய ஆத்ம திருப்தி குருதிக் கொடையாளருக்கு கிடைக்கின்றது. அத்துடன் குருதியை வழங்குவதற்கு முன்னர் குருதிக் கொடையாளரின் உடற்தகுதி பரிசோதிக்கப்படுகிறது. இதன்மூலம் அவரது குருதி அமுக்கம், ஹீமோகுளோபின் அளவு என்பன பரிசோதிக்கப்படுகிறது. அத்துடன் பெறப்பட்ட குருதியில் குருதியின் மூலம் கடத்தப்படும் நோய்க்கிருமிகள் உள்ளதா என்பது பரிசோதிக்கப்படுகிறது. உதாரணமாக HIV, Hepatitis, Syphilis போன்றன இதனால் குறிப்பிட்ட குருதிக்கொடையாளர் மேற்குறிப்பிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவரா என அறிய முடியும்.

**11. இரத்ததானம் செய்தால் நிறை அதிகரிக்கும் எனக் கூறுகிறார்களே, அதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

இரத்ததானம் செய்து விட்டோமென விசேட உணவு உள்ளெடுப்பதனாலேயே இப்பிரச்சனை ஏற்படுகின்றது.

**12. இரத்ததானம் செய்த பின்பு என்ன நோய்களுக்காக இரத்தம் பரிசோதிக்கப்படுகின்றது?**

HIV, Hepatitis, B.C, Syphiles

**13. இரத்ததானத்தின்போது கொடுத்த குருதி எவ்வளவு காலத்திற்கு இருக்கும்?**

குருதியானது பல்வேறு கூறுகளாக பிரிக்கப்படுகிறது. செங்குருதிக்கலமானது சராசரியாக 35 நாட்களுக்கு வைத்திருக்க முடியும்.

**14. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சராசரி நாளொன்றிற்கு எத்தனை பைந்த் இரத்தம் தேவைப்படுகிறது? கிடைக்கின்ற இரத்தம் போதுமானதாக இருக்கின்றதா?**

40-50 பைந்த் யாழ் குடாநாட்டில் சேகரிக்கப்படுகின்ற குருதியானது இங்குள்ள நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானது அல்ல என்பதே உண்மையாகும். நல்ல ஆரோக்கிய மான குருதி வழங்கக் கூடிய தகுதி உடைய அனைவரிடமும் போதிய விழிப்புணர்வு இன்மையே காரணமாகும்.

**15. இரத்த தானத்தை ஊக்குவிக்க நீங்கள் என்னென்ன செயற்பாடுகளை செய்கின்றீர்கள்?**

40 வயதிற்கு மேற்பட்ட குருதிக் கொடையாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தல். 10 தடவைக்கு மேல் குருதி வழங்கியவர்களுக்கு தேசிய குருதி மாற்றுப்பிரயோக சேவை யினரின் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. வருடாந்தம் குருதிக் கொடையாற்ற கௌரவிப்பு விழா அவர்களுக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் தேவையான இரத்தமும் மருத்துவ உதவியும்.

# சமய வளர்ச்சியில் ராம்மோகன்ராயின் சமூகப்பார்வை

**சைவப்புலவர் சி.ரமணராசா**
உதவி விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்கின்ற வகையில் அந்த சமூகப் பிராணியான அவனை இயற்கைச் சூழல் என்ற பின்னணியில் வைத்து ஆராய்வது தவிர்க்க முடியாததாகின்றது. சமூகத் தளத்தில் நின்று ஒருவன் புரட்சிகர சிந்தனை யுடன் தோற்றம் பெறுகின்றானெனில் அதற்கு அவனது சமூகம் சார் பின்னணியும், அதனால் அவனில் எழுந்த சிந்தனைகளும், அவன் சார்ந்த சமூகத்திலுள்ள தீவிர பற்றுக்களுமே காரணங் களுமே காரணங்களாகின்றன. காரணமின்றி காரியம் இல்லை. ஒவ்வோர் காரியத்துக்கும் காரணம் உண்டு என்ற தத்துவநிலை அவதானித் துணரத்தக்கது. சமய வளர்ச்சிக்கு சமூக இருப்பு அவசியமாகின்றது. எனவே சமய வளர்ச்சி என்ற காரியத்துக்கு சமூகத்தின் இருப்பு என்ற காரணம் வலியுறுத்தப்படுவதாகின்றது.

சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களும் அதன் நிமித்தம் ஏற்படும் மாற்றங்களும் சமூகத் தளத்தினின்றும் பல சீர்திருத்த வாதிகளையும் இயக்கங்களையும் தோற்றுவிக்கின்றது. சமூகத்தை அளந்தறிய முயலுகின்ற எண்ணங் கொண்டவர் களின் நோக்குதல்கள் ஒரு திசை நோக்கிய பேச்சாகவும், எழுத்தாகவும், செயலாகவும் பரவி விரிந்து நிற்கின்றன. பின்னர் அவை ஒரு கருத்தி யல் நிலையில் உயர்ந்து செல்கின்றன. இத்தகு கருத்தியல் நிலையானது வாழ்கின்ற சமூகத்தில் மாற்றங்கள் வேண்டும் என்ற தன்னுணர்ச்சியை மக்களுக்கு ஊட்ட முற்படுகின்றது. சிந்தனை, பேச்சு, எழுத்து இவற்றால் மட்டும் இயக்கங்கள் உருவாகிவிடுவதில்லை. அவ்வக் காலங்களில் ஏற்படும் சமூக பொருளாதார தேவைகளின் அடிப்படையிலேயே மக்கள் திரள் புதிய சிந் தனைகளைப் பேச்சாக, பாட்டாக, எழுத்தாகப் பெற்றுக் கொள்கின்றனர். அதன் பின்னரே இயக்கங்கள் நிறுவனமாக வளர்ச்சி பெறுகின் றன. இயக்கங்கள் இயங்கு நிலையானது அது சார்ந்த சமூக, சமய இயக்கங்களுக்கு இயக்க சக்தியாக அமைகின்றன எனில் மறுப்பதற் கில்லை. அவ்வகையிலே தமிழக வரலாற்றில் நிறுவனமயமாக்கப்பட்ட முதல் இயக்கமாக பக்தி இயக்கத்தினை குறிப்பிடலாம்.

கீழைத்தேச நாடுகளுக்கு வணிக நோக்கில் வருகை தந்த ஐரோப்பியர்கள் நாளடைவில் இந்நாடுகளின் உள்ளக சூழலைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தை எட்ட முயன்ற னர். போர்த்துக்கேயர்கள், பிரான்சியர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோரது வருகையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் இந்து சமயம் மற்றும் சமூகத்தினை பல நிலைப்பட்ட மாறுதல் களுக்கு கொண்டு சென்றது. இதனால் பல நூறாண்டுகளாக நிலைபெற்று வேரூன்றிவிட்ட இந்து சமய சிந்தனைகளுக்கும் அந்நிய மத சிந்தனைகளுக்கும் கருத்துமோதல் ஏற்பட்டது. இத்தகைய கருத்துமோதல் சுதேசிய மக்களி டையே ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

இவ்வாறானதோர் சூழலில் இம் மண்ணின் பாரம்பரியத்தில் அசையாத நம்பிக்கை கொண்ட பெரும்பான்மையான மக்கள் மரபு ரீதியான உணர்வுகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் தொடர்ந்து பேணிக் கொள்வதே தமது கடமை எனக் கருதியதோடு அவற்றைக் கடைப்பிடித்தும் நின்றனர். ஆனால் அவர்களுள் கற்றோர் மத்தியில் இந்நிலையில்

மாற்றம் காணப்பட்டது. காலத்திற்கேற்ப மரபுகளில் மாற்றம், நெகிழ்ச்சித்தன்மை என்பன தேவை என பல அறிஞர்கள் உணரத் தலைப்பட்டனர். மேலே சுட்டியது போல வாழுகின்ற சமூகத்தில் மாற்றங்கள் தேவை என்றுணர முற்பட்டனர். இவ்வாறான சிந்தனைகள் செயல் வடிவம் பெற முற்பட்ட போது சில இயக்கங்கள் தோற்றம் பெற்றன. சுருங்கக் கூறின் கிறிஸ்தவ பிரசாரகர்களும் அவர்களது அமைப்புக்களும் இந்தியாவிற்கு வந்திருக்காவிட்டால் இயற்கை சமயவாதப் பிரிவுகள் இங்கு தோன்றியிருக்காது எனலாம். அவ்வகையிலே பிரமசமாஜயம் (1820) சூரிய சமாஜயம் (1875), பிரார்த்தனை சமாஜம் (1867), பிரமஞான சங்கம், சமரச சுத்த சன்மார்க்க சங்கம் (1865), இராமகிருஷ்ண மிஷன் (1897) முதலிய இயக்கங்கள் இத்தளத்தில் நின்றும் தோன்றின எனும் வகையில் குறிப்பிடத்தக்கனவாக விளங்கி நிற்கின்றன.

பழமையைக் கைக்கொள்வதா? விடுவதா? புதுமையைப் பின்பற்றுவதா? இல்லையா? அல்லது பழமைவாதக் கருத்துக்களுடன் புதுமையை ஏற்று பின்பற்றுவதா? என்ற போராட்ட சூழல் சீர்திருத்த வாதிகளிடையே காணப்பட்டதனால் அவர்கள் மத்தியில் ஒத்த கருத்து நிலவவில்லை எனலாம். அதாவது சீர்திருத்த இயக்கங்கள் யாவும் செயற்பாட்டு ரீதியாக வேறுபாடுகளைக் கொண்டிருந்தன.

இருப்பினும் சீர்திருத்த வாதிகளிடையே பின்வரும் பொதுக் கொள்கைகளும் காணப்பட்டன.

1. சமயம், சமூகம் என்பவற்றை சீர்திருத்தி நெறிப்படுத்தல்.
2. புறச்சமயங்களின் வளர்ச்சியை புறக்கணித்தல்
3. நவயுக இந்தியாவினை உருவாக்குவதற்காக முன்னின்று செயற்படல்
4. மக்களிடையே உள்ள அறியாமையைக் களைந்து ஆன்மீக வளர்ச்சியை மேற்கொள்ளல்.
5. சமயத்தின் வளர்ச்சிக்கு சமூகத்தின் இருப்பைத் தக்கவைத்தல்
6. பெண்ணியல் சார்ந்த சிந்தனைகள்

என்கின்ற வகையில் ஒன்றுபட்டு விளங்குவதும் அவதானிக்கத்தக்கது. இத்தகையதோர் சூழ்நிலையிலே இந்துக்கள் தமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இருந்து விலகாமலேயே நவீன காலத்திற்கு ஏற்றவகையில் தயார்படுத்திக் கொள்ள முடியும் என்பதனை சொற்களாலும், செயல்களாலும் செய்து காட்டியவர் தான் இராஜாராம் மோகன்ராய்.

இவர் பழமைப் பண்புகளுடன் புதுமையையும் ஏற்றுக் கொள்வதே சமய வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் உறுதுணைபுரிய வல்லது என்ற சிந்தனைப் போக்குடன் தோன்றிய ஓர் சீர்திருத்த வாதி. இவரே நவீன இந்து சமய சீர்திருத்த இயக்கங்களின் ஆரம்பப்புள்ளி எனும் நிலையில் போற்றப்படுபவராவார்.

ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த இந்திய நாட்டில் தேசிய உணர்ச்சியைத் தூண்டியவர் ராய் தான். அதனால் இந்திய தேசியப் பத்திரிகைகளின் தந்தை எனப் பாராட்டப்படுகின்றார். மேலைத்தேய நாட்டினரால் "இந்திய ஞானி" என்று மதிப்போடு அழைக்கப்பட்டவரும் இவரே. இந்தியாவின் புகழை வெளியுலகுக்கு வெளிப்படுத்திய பலருள் ராய் அவர்களும் முக்கியமானவர் ஆவார்.

ராம் மோன்ராய் வங்காள தேசத்தல் பார்த்துவான் மாவட்டத்தில் "ராதாநகரம்" எனும் ஊரில் 1772ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி பிறந்தவர். தந்தை இராமகாந்தர் இவருக்கு மூன்று மனைவிகள். அவர்களுள் தாரிணிதேவி இரண்டாவது மனைவி இராமகாந்தர், தாரிணி தேவி தம்பதிகளுக்கு இரு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். ஆண்பிள்ளைகளில் மூத்தவர் ஜக்மோகன் இளையவர் ராம்மோகன்

ராய் அந்தண குலத்தைச் சேர்ந்தவர்.

ஆதலால், குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரால் இவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. குழந்தையாக இருக்கும் போதே அவரது மனைவி இறந்து விட்டார். அதனால் ராய்க்கு மீண்டும் மறுமணம் செய்து வைக்கப் பட்டது.

படிப்பிலும் ஆன்ம நாட்டத்திலுமே இவரது இளமைக்காலம் கழிந்தது. வரலாறு, சமயம், மெய்ப்பொருளியல் சார்ந்த நூல்களை கற்றறிந்தார். இஸ்லாம், பௌத்தம், இந்துமெய்ப் பொருளியல் என்று மட்டுமில்லாமல் மேலைத் தேய தத்துவ நூல்கள், சமூகவியல் துறை சார்ந்த நூல்கள், கிறிஸ்தவ சமயச் சார்பான நூல்கள் முதலானவற்றைக் கற்று அவற்றில் ஆழமான அறிவினைப் பெற்றவராகவும் விளங்கினார். இவரது நுண்ணறிவு பற்றி ரோமெய்க் ரோலண்டு என்பவர்.

இவருக்கு இமய மலையின் பழைய கதையில் இருந்து

இக்கால ஐரோப்பிய அறிவியல் கலைகள் வரை தெரிந்திருந்தன என்று கூறுகின்றார் மேலும் அவர்,

"இந்தப் பெரு மாமனிதர் இந்திய மண்ணை சூடி உமுதார் சமஸ்கிருதம், வங்காளி, அரபி, பாரசீகம், ஆங்கிலம் என்னும் மொழி களில் வல்லுநர், வங்கமொழி உரைநடையின் தந்தை புகழ் பெற்ற பாடல்கள், செய்யுட்கள், சொற்பொழிவுகள், மெய்ப்பொருளியல், அரசி யல் நூல்கள் பல்வேறு வாத நூல்கள் ஆகிய வற்றின் ஆசிரியர் எண்ணங்களை வதைத்தார். புகளொளி பரப்பினார். வங்க நிலத்தில் நற் செயல்களையும் நல்லோரையும் அறுவடை செய்தார். தாகூர் குடும்பம் அவர் படைப்பே. எல்லாம் சொல்லியாகி விட்டது என்பதற்கு இஃதொன்றே போதும்" என கூறிச் செல்லு கையில் ராயினதும் பல்துறை சார்ந்த ஆளுமைப் பண்புகளும் செயற்றிறனும் எவ்வாறிருந்தது என்பதனை உணர முடிகின்றது.

இவர் சுதேச மொழிகளுடன் இலத்தீன், ஆங்கிலம், கிரேக்கம், அரபு போன்ற மொழி களிலும் புலமை பெற்றவராகு விளங்குகின்றார். பன்மொழி அறிவுடையாளனாக விளங்கியமை யினால் அத்தகைய மொழிகளிலே இருந்த அறிவியல் சார்ந்த கருத்துக்கள், சமவுடைமைச் சிந்தனைகள், பகுத்தறிவு வாதச் சிந்தனைகள் ஆகியவற்றை நன்கு கற்றறியக் கூடிய வாய்ப் பேற்பட்டது.

வாழ்வியலிலே போராட்டம் என்பது அவசியம். ஆனால் வாழ்க்கையே போராட்டமாகி விடக் கூடாது. ராயினது வாழ்க்கை முழுவதும் போராட்டமாக அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும். எல்லாத் தரப்பினர்களும் பகைவர் களாகவே இருந்தனர். ராயின் புரட்சிகரமான எண்ணங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் பெற் றோர்கள் மட்டுமன்றி மற்றோரும் சம்மதித்திலர். அவருக்கு நேர்விரோதமானவர்களாகவே இருந்தனர்.

ராம்மோகனது ஆயுதமற்ற, கருத்தியல் வாத போராட்டத்துக்கு குடும்பத்தவரது அனுமதி கிடைத்தில அதேவேளை காலங்காலமாக பழை மையில் இருந்து விடுபட்டு புதுமைக்கருத்துக் களை ஏற்றுச் செயற்படவோ முன்வந்திலர். இவர் பழைமையை விட்டுவிடும்படி கூறவில்லை. காலத்துக்குப் பொருந்தாத விடயங்களையே நீக்கிவிட்டு காலத்துக்கு ஏற்றவகையில் இந்தியர் தம்மை மாற்றினாலே அந்நியர்களுக்கு சமமாய் வாழலாம் என்று தான் ஆணித்தரமாக பேசியும் எழுதியும் வந்தார்.

பெற்றோரும் மற்றோரும் இவரை எதிர்த்தரெனினும் முற்று முழுதாக சமூகத்தில் இவருக்கு ஆதரவு இல்லாமலும் இருந்து

விடவில்லை. இறுதிக் காலம் வரை இவரது சீர்திருத்த சிந்தனைகளை பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக இராமகாந்தர் இறந்தபின்னரும் தாரிணிதேவி ராம்மோகனிடம் கொண்டிருந்த எதிர்ப்பினை மாற்றிக் கொண்டவரல்லர். தன் கணவரின் சிரார்த்தத்திற்கு ராம் மோகனாரை அழைக்காமலேயே கடமை உறவினர்களாலும் ஒதுக்கப்பட்டவராகவே காணப்பட்டார். இவ்வாறு ராம் மோனார் பிறரால் ஒதுக்கப்படுவதற்கு "கடவுள் கோட்பாடு" பற்றிய சிந்தனையே அதிமுக்கிய காரணமாயிற்று. உருவமில்லாக் கடவுள் வழிபாட்டை இவர் வலியுறுத்தி வந்தார். பழைமையில் ஊறிய மக்கள் ராயினுடைய கோட்பாட்டை ஏற்க மறுத்தனர். இக்கொள்கையே இவர்கள் மத்தியில் இருந்த வேற்றுமைக்கு காரணமாக அமைந்தது இது மட்டுமன்றி,

தம்மைப்போல அவன் (ராம்மோகன்) கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதில்லை

ராய் தான் சொல்கின்ற கருத்துக்களே சரியானவை என்று வாதாடியமை

பிராமணராக இருந்து கொண்டு சமூகத்தில் பிராமணர்களுக்கு உயர்வளிக்கக் கூடாதென்று கூறி வந்தமை

பூர்வீகமாக ஆஸ்திகர்களாக விளங்கும் எமத்தியில் இவரை நாஸ்திகனாக போய்விடுவானோ என்ற தந்தையின் ஏக்கம்.

குடும்பத்தாரின் சொற்கேளாமை

உருவ வழிபாட்டை ஏற்க மறுத்து அருவ வழியிலான கடவுள் வழிபாட்டை வலியுறுத்தியமை.

பல்லிறைக் கோட்பாட்டை மறுத்தராய் ஓரிறைக் கோட்பாட்டாளனாக விளங்கியமை

போன்ற பலகாரணங்கள் இவரை பெற்றோர்களிடமிருந்து விலக்கி வைத்ததெனலாம்.

ஆனாலும், ராய் இவற்றிற்காக வருந்தியவரும் அல்ல; தனது சீர்திருத்த நோக்கங்களையோ அல்லது சிந்திக்கும் ஆற்றலையோ கைவிட்டு தூர ஒதுக்கியவரும் அல்ல மாறாக இந்து மதத்தின் பழமையான கோட்பாடுகளையும், சம்பிரதாயங்களையும் எதிர்த்து வந்தார். எவையெல்லாம் சமய, சமூக வளர்ச்சியில் தடைகளாக திகழ்கின்றனவோ, அவற்றையெல்லாம் நீக்குகின்ற முயற்சியில் தீவிரமாக நாட்டங் கொண்டார். குறிப்பாக இந்து மதத்தவர்களின் குருட்டு நம்பிக்கையை எதிர்த்துக் குரல் எழுப்பினார். கடவுள் ஒருவரே, அவரே யாவற்றையும் கடந்த சர்வ சொரூபி, அவருக்கு உருவம் இல்லை. எனவே உருவம் இல்லாத இறைவனுக்கு ஓர் உருவத்தைக் கொடுத்து வழிபடுவது மூட நம்பிக்கையே, என்று பல வழிகளிலும் சாடி வந்துள்ளார்.

கடவுளின் பெயரால் வழங்கப்படுகின்ற சமயத்தை, "ஓரிறைக் கொள்கை" என்ற கண்ணோட்டத்தோடு உற்று நோக்கினார் ராய். இதனால் குடும்பத்தவர்களாலும், பிறராலும் "நாஸ்திகன்" என்ற நிலையில் அவதானிக்கப்பட்டார் ராய் சமயத்தையோ அல்லது சமய நம்பிக்கைகளையோ வெறுத்தவர் அல்லர். கடவுளின் பெயரைக் கூறிக் கொண்டு, உயர்வு தாழ்வு பேணி வருபவர்களின் அறியாமையை எடுத்துரைத்து, அவ்வகைச் செயற்பாடுகளை மிகவும் வன்மையான உணர்வோடு கண்டித்து வந்தார். அத்துடன் இந்த உலகம் முழுவதையும் ஆள்பவர் "ஒரே கடவுள்" தான் எனும் உண்மையையும் விளக்கியிருந்தார்.

ராய், ஆங்கில மேலாதிக்கத்தை விரும்பியவரல்ல. அதனை அடியோடு எதிர்த்தவரே அவர். ஆங்கிலேயர்களிற்கு முன்னால் கைகட்டி நிற்பதனை சற்றேனும் விரும்பவில்லை. இருப்பினும் ஆங்கிலேய நண்பர்கள் பலரும் ராயின் முற்போக்குவாத சிந்தனைகளால் கவரப்பட்ட

நிலையில், உற்ற நண்பர்களாகவும் இருந்துள்ள னர் என்பது கவனிக்கத்தக்கது. ஆங்கிலம் என்பது அந்நிய மொழி, அதுவே எம்மை அடக்கி ஆள்கின்ற ஆட்சி மொழி என்பதும் ராய்க்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஆனால் இந்தியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் நவீன கல்வி முறையில் or அறிவியல் சார் விடயங்களில் மேலும் அறிவினைப் பெற்று உயர்ந்து செல்வதற்கு ஆங்கில மொழி அவசியம் என்பதனையும் நண் குணர்ந்தவராகவே காணப்பட்டார். இவ்விதம், முதன் முதலில் பள்ளிகளில் ஆங்கிலப் பாடம் போதனையை ஆதரித்து விதிட்டவர் ராம் மோகனே எனலாம்.

ராம் மோகன் ராயினது நூலறிவும், சமூகத்தளத்தில் நின்று யாவற்றையும் நோக்கிய முறைமையுமே, அவரை பகுத்தறிவு வாதச் சிந்தனையாளனாக்கியிருந்தது. இதன் நிமித்தமாக, உண்மையைத் தேடிக் கண்டுணர்வதற்கான வழி களாக நூலறிவு, பகுத்தறிவு, தெய்வீக நம்பிக்கை என்பவற்றைக் கொண்டிருந்தார். நவீன வங் காளி மொழியின் உரைநடைக்கு முன்னோடி யாகத் திகழ்ந்தவரும் இவரே, அந்தளவிற்கு மிக வும் சிறப்பான முறையில் உரைநடை நூல்களை எழுதியிருந்தார். "ஒருவனே தேவன்" என்பது இவரது கொள்கை. இக்கொள்கையை வலியுறு த்தி பிரார்த்தனைப்பாடங்களையும் அவர் இயற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாம் மோகன்ராய் பல்சமய ஆய்வாள ராகவும், பகுத்தறிவு வாதத்தின் முன்னோடியா கவும் விளங்கியவர். இவர் பகுத்தறிவு வாத சிந்தனையாளராக விளங்கியிருந்தாலும் கூட, மரபுவழி இந்து நெறியையே பேணியவர் ஆவார். அறிவியல் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகளின் வளர்ச்சியில் பலமாக நின்று ழைத்ததோடு, சமூக மேம்பாட்டிற்குரிய வழி சமூக சமத்துவமே என்பதைப் போதனைகளாலும் தமது இயக்கச்சாதனைகளாலும் செய்து காட்டி யிருந்தார்.

தனிமனிதன் தனது சிந்தனைகளை செயல்வடிவம் பெறச் செய்வதற்கு நிறுவன ரீதியான செயற்பாடு அவசியமாகின்றது. இவ் வகையில் தனியொரு மனிதனாக நின்று சமயம் மற்றும் சமூகத்தில் சீர்திருத்தப் பணிகளை முன்னின்று செயற்படுத்திய ராய், நிறுவன ரீதியாக அப்பணிகளை மேலும் விரிவுபடுத்த முயற்சித்தார் எனலாம். இதனாலேயே "பிரமச மாஜம்" என்ற இயற்கை சமயவாத இயக்கம் ஒன்றினை 1828 இல் அவரால் தோற்றுவிக்க முடிந்தது. "சமாஜம்" என்பது "சங்கம்" எனவும், "பிரமம்" என்பது "பரம்பொருள்" எனவும் கொண்டு பொருள் காணுமிடத்து "பிரமசமாஜம்" என்பது "பரம்பொருள்" வழிபாட்டுச்சங்கம் எனப் பொருள்பட்டு நிற்கக்காணலாம். வேதங்களைக் காட்டிலும் உபநிடத நூல்களில் பற்றுக் கொண்ட வரான இவர் உபநிடதங்கள் கூறுகின்ற பரம் பொருள் பரமத்தை தனது சமாஜத்தின் பெயராக கொண்டார். இது தொடர்பாக ஆய்வறிஞர் பெ.சு.மணி அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

"பிரமசமாஜம்' என்ற சொற்றொடர் பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம் என்ற பொருளினைத்தருவதாகும். உபநிடதங்களிலே மிக்க ஈடுபாடு கொண்ட ராம் மோகனார், அவை களிலே பரம்பொருளைக் குறிக்கும் பிரமம் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தார்" எனக் குறிப்பிடுகின்றார். இவ்வகையில் மோகன்ராய் 'பிரமசமாஜம்' என்ற இயக்க நிறுவனம் ஒன்றினை நிறுவுவதற்கு அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட தனிப்பட்ட காரணங்களும் அவர் சார்ந்த சூழலமைவுகளும், சமகால இந்தியாவின் ஆட்சி முறைமைகளால் ஏற்பட்ட விளைவுகளுமே பின்னணிகளாக அமைந்தன எனலாம்.

"THE BRAHMANICAL MAGAZINE" என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் அவர் வெளியிட்ட இதழ்களும், "பிரம்ம சமாஜம்" என்ற தலைப்பிலமைந்த அவரது இயக்கமும், பிரம தத்துவத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த

ஈடுபாட்டின் வெளிப்பாடுகளேயாகும்.

பகுத்தறிவுப் பார்வையும், மனித நேய அணுகுமுறையும், சமூக உணர்வும் சார்ந்த சிந்தனைகள் செயற்பாடுகள் என்பவற்றை "பிரம்ம சபா" என்ற நிறுவன ரீதியாக செயற்பட முனைந்ததன் விளைவே பிரம்ம சமாஜமாக மாறியதென்பது பொதுவான கருத்து. ராம் மோகனாரின் இத்தகு பணிகளின் விளைவாக அக்காலப்பகுதியில் உருவான உணர்வு நிலைகள் பற்றி கலாநிதி சுப்பிரமணியன் அவர்கள் தனது இந்தியச்சிந்தனை மரபு என்ற நூலில் பின்வருமாறு சுட்டியுணர்த்தியுள்ளார்.

1. இந்தியப் பண்பாடானது உலகின் எந்தப் பண்பாட்டுக்கும் தரத்தில் தாழ்ந்ததல்ல. அது அனைத்துப் பண்பாட்டையும் மதிக்கவும் விமர்சிக்கவும் வல்ல சிந்தனைப் பலம் கொண்டதும் கூட என்ற வகையிலான பெருமித உணர்வ.
2. இந்தியச் சமூகம் தனது பாரம்பரியப் பண்பாட்டுத் தளத்தில் நின்று கொண்டே புதிய காலப் பகுதிக்கு ஏற்றவகையில் தன்னை மாற்றியமைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை.
3. ஐரோப்பிய நாகரிகம், கிறிஸ்தவ மதம் என்பவற்றுக்கு அடிபணிய வேண்டியதில்லை என்ற தன்மான உணர்வு.

மேற்படி உணர்வு நிலைகளே இந்திய தேசிய விடுதலை உணர்வெழுச்சிக்கான பண்பாட்டு நிலைசார்ந்த ஆரம்ப நிலை அடையாளங்களாக அமைந்தன. இதனை நோக்கும்போது ராம்மோகனாரும் பிரம்ம சமாசமும் மேற்கொண்ட செயற்பாடுகள் இந்திய தேச விடுதலைக்கான முதல் முனைப்புக்களாக வரலாற்று முக்கியத்துவம் பெறுவதனை உணர்ந்துகொள்ள முடியும்.

மேலும் "ராஜாராம் மோகன்ராய் காலத்தில் தேசிய வாழ்க்கை இரசாயன மாறுதல்களுக்கு ஒப்பான வளர்ச்சி அம்சங்களை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தது. ராஜாராம் மோகன் ராய் ஒருவகையில் புதிய இந்தியாவின் தந்தையாகவும், இந்திய தேசியத்தின் தீர்க்க தரிசியாகவும் திகழ்ந்தார்".

என டாக்டர் பட்டாபி சீதாராமையாவின் கருத்தினை சுப்பிரமணியன் அவர்கள் சுட்டிக் காட்டிச் செல்வது ராயின் செயற்பாட்டினை வரலாற்றாய் வறிஞர்கள் சரியாகவே புரிந்து வைத்துள்ளனர் என்பதனை உறுதி செய்வதாக அமைகின்றது.

ராம் மோகனார் இளவயது முதற்கொண்டே உபநிடத சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர். உபநிடதப் பற்றுக்களே அவருக்கு அருவ நிலைப்பட்ட கடவுள் வழிபாட்டுக்கும் ஓரிறைக் கோட்பாட்டிற்கும் முதன்மை கொடுப்பதற்கு காரணங்களாயின. உபநிடதங்களை மையப்படுத்திய தான வேதாந்த சூத்திரம், பகவத்கீதை மற்றும் இவற்றுக்கு வேதாந்திகளால் எழுதப்பட்ட விளக்க உரைகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார் அவ்விலக்கியக் கருத்துக்களையே தனது இயக்கத்தின் ஆன்மீகச் செயற்பாடுகளுக்கு எடுத்துக் காட்டுகளாகவும் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

"விக்கிரக ஆராதனை மறுப்பு" என்ற நூலில் உருவ வழிபாட்டுக்கு எதிரான கருத்துக்களையும் அதன் நிமித்தம் கைக்கொள்ளப்படுகின்ற தேவையற்ற கிரியைகள், சடங்குகள், பலியிடுதல் என்பவற்றையும் கண்டித்து கருத்துக்களை வெளிப்படுத்தலானார். பூர்வஜென்ம நம்பிக்கை, கன்மம் மறுபிறப்புக் கொள்கை என்பவற்றையும் நிராகரித்தார்.

"நான் மேற்கொண்ட கருத்து மாறுபாடுகளில் இந்து சமயத்தை எதிர்க்கவில்லை. உண்மைக்கு மாறாக நெறிக்குப் புறம்பாகக்

காட்ட எழுந்த முயற்சிகளையே எதிர்த்தேன்"

என்று தனது "சற்சரிதம்" என்ற நூலில் கூறுவதனூடாக அவர் இந்து சமய விரோதி அல்ல என்பதனையும், சமய விரோத செயற் பாடுகளைக் களைய முற்பட்டவர் என்பதனை யும் அறிந்துணர முடிகின்றது.

ராய் அனைத்துலகச் சமய உணர்வாள னாக காணப்பட்டார். உலகிலுள்ள அனைத்துச் சமயங்களையும் "ஒன்று" என்ற கொள்கைக் குள் அடக்கி அவற்றை பொதுச்சமயம் என்ற ஓர் எல்லைக்குள் வகுக்க முற்பட்டார். இந்து மதத்தில் அனைத்துலகச் சமய உணர்வுக்கான அடித்தளம் உண்டு என்பது ராயின் திடமான நம்பிக்கை. இதனை வலுச்சேர்ப்பதாகவே.

"இந்த பூமியில் வாழும் மனிதர்களில் இந்துக்களைப் போன்று சகிப்புத் தன்மை உடையவர்கள் யாரும் இல்லை என்பது உலகம் அறிந்த உண்மையாகும். தெய்வத்தின் அருளு க்கு அனைவரும் பாத்திரமானவர்கள் என்று இந்துமதம் போதிக்கின்றது. ஒவ்வொரு மதப் பிரிவிலும் உள்ள நல்லனவற்றையெல்லாம் மதிக்கிறது இந்துமதம்"

என்கின்ற அவரது இந்த இந்துமத நிலைப் பாடு பிரமசமாஜத்திலும் அவரால் செயற்படுத் தப்பட்டிருந்தது.

ரூாம் மோகனாரின் சமய, சமுதாய சீர் திருத்தப்பணிகளுக்கு பிரசாரம், கண்டனங்கள், தர்க

ராம் மோகனாரின் சமய, சமுதாய சீர் திருத்தப்பணிகளுக்கு பிரசாரம், கண்டனங்கள், தர்க்கங்கள் என்பன தக்க வழிகளாக அமைந் திருந்தன. பல்சமய ஆய்வாளராக ராய் விளங்கி யமையால் பிறசமயக் கருத்துக்களை நன்கறிந்து இந்து சமயம் பற்றிய உண்மைக் கருத்துக்களை எடுத்துரைத்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தன்னுணர்ச்சி பெறச்செய்தார். அகச்சமயக் கண் டனம், புறச்சமயக் கண்டனம் எனும் வகையில் இவரது, இவரது சமாஜத்தினதும் கண்டனச் செயற்பாடுகள் இனங்காணப்படுகின்றன.

ராம் மோகன் தனது கல்வியறிவினூடாக சமுதாயத்தில் காணப்பட்ட அறியாமையை நீக்கி முற்பட்டவர் அறிவுடைமையும், சிந்தனை ஆற்றலும் உடையோராய் இந்து சமயத்தைச் சார்ந்த மக்கள் விளங்கினால் பிறசமயத்தவரின் கருத்துக்களை ஏற்று பின்பற்ற, பின்நிற்பர் என்பதனை உணர்ந்தவராகையினால் இந்திய சமுதாயத்தில் தொடர்ச்சியாக நிலைபெற்றிருந்த மூட நம்பிக்கைகள், சீரற்ற தன்மைகள் அர்த்த மற்ற சடங்குகள், கிரியைகள் என்பனவற்றை மக்களிடமிருந்து முழுமையாக அகற்ற முன்வந் தார். இதனை பொருத்தமான கல்வி முறைமை அமுல்படுத்தப்பட வேண்டும் எனும் கொள்கை களை வெளிப்படுத்தி இருந்ததோடு அதனை பிரமசமாஜத்தினூடாக வலியுறுத்தியுமிருந்தார். இது தொடர்பில் மோகன் அம்ஸ்கேற் பிரபுவுக்கு எழுதிய அறிக்கையில்,

"இந்திய மாணவர்களுக்கு கணிதம், தத்துவம் அங்காதிபாதம், இரசாயனம் முதலான பாடங்களை ஐரோப்பிய ஆசிரியர்களே கற்பிக்க வேண்டும்" எனும் பிரேரணையை முன்வைத் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்துறை சார்ந்த விற்பன்னராகவும், பல்சமய ஆய்வாளராகவும் விளங்கிவந்துள்ள மையினால் பலமொழிகள் சார்ந்த வகையில் இலக்கியங்கள் பலவற்றை ராயினால் எழுத முடிந்தது இவை தவிர பத்திரிகைகளில் தமது கருத்துக்களை வெளியிட்டார். அகப் புறச் சமயக் கருத்துக்களை கண்டனங்கள் வாயிலாகவும் எதிர்த்தார். ஆதலால் ராம்மோகனார் இலக்கியத் துறையிலும் நாட்டங்கொண்டு தமது சீர்திருத்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு அவற்றையும்

வழிவகையாகக் கொண்டார் எனில் இத்தகைய நிலைப்பாடுகள் வாயிலாக அவர் பன்முக ஆளுமையாளர் என்பது புலனாகின்றது.

இவ்வகையில் ராம்மோகனரின் "வேதாந்த சாரம்" "ஜான்டிக்பா" என்பவரால் பிரித்தானியா வில் ஆங்கில மொழி பெயர்ப்பாக வெளியிடப் பட்டது. அதன் வங்காள மொழி பெயர்ப்பு 1815ல் வெளியிடப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிரித் தானியா போன்ற நாடுகளில் அவரது நூல்கள் அதிகளவில் விற்பனையாயின. இந்தியாவில் அவை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

இந்து சமயத்தின் மூல இலக்கியங்களான வேதங்களும் உபநிடதங்களும் சமஸ்கிருத மொழியிலேயே இருந்தன. இவை வடமொழி வல்லுனர்களான பிராமணர்களால் மட்டுமே அறிந்து கொள்ளக்கூடிய வகையில் மூடு மந்தி ரங்களாகவே இருந்தன. இவற்றைச் சாதாரண மக்களும் படித்துப் புரிந்து கொள்ள வேண்டு மெனும் நோக்கிலே அவற்றை ஆங்கிலத்திலும், வங்காளியிலும் மொழிபெயர்த்தார். இச்செய லானது பிராமணர்களிடமிருந்து எதிர்ப்பைக் கொண்டு வந்தது. இதனால் ராம் மோகன்ராய் இந்து மதத்தின் விரோதி என்று பிராமணர்கள் வன்மையாக தாக்கிப்பேசி வந்தனர். இத்தகைய தொரு சூழ்நிலையில் பிராமணர்களுக்கு தக்க பதிலைக் கொடுத்த ராம் மோகன்ராயின் இந்து சமயப்பற்று வியக்கத்தக்கதே. குறிப்பாக,

"பழமையில் ஊறிப்போனவர்கள் சமயம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி வருகின் றார்கள். நான் மக்களுக்கு உண்மையை விளக் கிக் கூறி இந்து சமயத்தின் பெருமையை உயர்த் தப்பாடுபடுகின்றேன்"

என்று கூறி துணிந்து போராடியவராகக் காணப்பட்டாரெனில் அஞ்சாமை அவரது பணிக்கு உந்துசக்தியாக அமைந்திருந்தமை புலனாகின்றது.

ராய் விக்கிரக வழிபாட்டை ஏற்றவரல்லர். அவ்வழிபாட்டை நிராகரித்து வெளியிட்ட கருத்துக்களை பெற்றோருட்பட மற்றோரும் ஏற்க மறுத்தனர். இக்கருத்துக்களை எதிர்த்து சங்கர சாஸ்திரி எனும் பண்டிதர் ஒரு நூலை எழுதினார். ராம் மோகனார் இந்நூலுக்கு பதில் கூறும் வகையில் "இந்து தெய்வக் கொள்கையின் பாதுகாப்பு" என்ற நூலை வெளியிட்டார்.

இந்து சமயத்தின் இருப்புக்காக கிறிஸ்தவ பாதிரிமார்களுடன் தர்க்கங்களிலும் ஈடுபட்டவ ராக ராம் மோகனார் விளங்கினார். பாதிரி மார்கள் இந்து சமுதாயத்திலுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும், சீர்கேடுகளையும் சீர்திருத்தி நெறிப்படுத்தியவர்களல்லர். அவற்றைக் கண் டும் காணாததும் போலிருந்தனர். ஏனெனில் இத்தகு குறைபாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தாம் சார்ந்த பண்பாடு, மொழி, சமயம் என்பவற்றை வளர்க்கும் நோக்கில் மும் முரமாக ஈடுபட்டனர். ராம் மோகனார் சிறந்த பல்சமய ஆய்வாளராகையால் இந்து மதத்தி லுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பிறமதத்திலுள்ள குறைபாடுகளையும் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் கூறுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இந்துக்கள் கிறிஸ்தவர்களாவதை வெறுத்தார். பைபிளில் இருந்து மேற்கொள்களைக் காட்டி மேடைகளில் பேசி இதனை வலியுறுத்தினார்.

வில்லியம் கேசரி, ஜோஷிவா மார்ஷ்மன் ஆகிய இரு பாதிரிமார்களும் ராயின் உற்ற நண்பர்களாக விளங்கியவர்கள். இவர்கள் ராம் மோகனாரை மதம் மாற்றினால் இந்துக்களில் பெரும்பாலானோரை மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் அவரை மதம் மாற்ற முயற்சித் தனர். ஆனால் ராம் மோகனாரோ,

"நான் எல்லா மதங்களைப் பற்றியும் ஆராய்ந்திருக்கின்றேன். எல்லாவற்றிலும் நல்லது கெட்டது கலந்தே இருக்கின்றன. என்னு

டைய இந்து மதம் பலவீனமானது என்பதனை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் அதிலிருந்து உங்களுடைய பலவீனமான மதத்துக்கு நான் ஏன் மாற வேண்டும்" என்று பாதிரிமார்களின் எண்ணத்தை வன்மையாக கண்டித்தார் அதற்கு பாதிரியார்களும் ராம் மோகனாரை சுடுசொற்களால் பேசினர். மார்ஷமன் என்பவர் "இந்தியாவின் நண்பன்" என்ற ஒரு கடிதத்தை எழுதிப் பிரசுரித்தார். இவ்வகையில் ராயுக்கும் பாதிரிகளுக்குமிடையிலான மோதல் நீண்டு கொண்டே சென்றது. இதற்காகவே "THE BRAHMANICAL MAGAZINE" என்ற பத்திரிகையை ஆரம்பித்து அவர்களின் பிரசாரத்துக்கு தகுந்த பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தார்.

ராயின் சீர்திருத்தப் பணிகளில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது, சமூகம் சார்ந்த சீர்திருத்தப்பணிகளே ஆகும். அவ்வகையில் இந்தியச் சமுதாயத்தில் மேலெழுந்து காணப்பட்ட பல சீர்திருத்தக் கொள்கைகளைக் களையமுற்பட்டார்.

குறிப்பாக,

- ஒருவன் பல பெண்களை மணந்து கொள்ளுகின்ற பலதாரமண முறைமை
- ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டால் அப்பெண் உயிர் வாழக் கூடாது. உடன் கட்டை ஏறுதல் வேண்டும். சதியென்று வழங்கிவந்த இத்தகைய உடன்கட்டை ஏறும் முறைமை.
- பாலிய வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்ற பால்ய விவாக முறைமை.
- விதவைப் பெண்களின் மறுமண மறுப்பு
- ஆண்களுக்கு அடிமைகளாக பெண்கள் இருந்துவந்தமை.
- சொத்துக்களில் பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டமை
- பெண் சிசுக் கொலை
- கல்வி நிலையில் பெண்களுக்கான உரிமைகள் புறக் கணிக்கப்பட்டமை.
- சமூகத்தில் மேலோங்கியிருந்த பிராமண ராதிக்கம்
- சமய வளர்ச்சிக்கு தடையாக இருந்து சமூக சமத்துவமின்மை

என்றவாறாக சமூகத்தில் காணப்பட்ட இந்து சமய வளர்ச்சிக்குப் பொருந்தாத சீர்கேடுகளை இனங்கண்டு சீர்திருத்தம் செய்வதில் வெற்றியும் கண்டார். சான்றாக அப்போதைய ஆங்கில அரசின் ராஜப் பிரதிநிதியாக இருந்த லார்ட் வில்லியம் பென்டிங் பிரபுவின் உதவியுடன் 1829ம் ஆண்டு உடன் கட்டை ஏறுவதனைச் சட்டம் மூலம் கொண்டு வந்தமை இவரது சீர்திருத்தப் பாதையின் மைல்கல் என்றே கூறலாம்.

இவ்வாறாக ஆங்கில ஏகாதிபத்தியச் சூழலமைவினை பின்னணியாகக் கொண்டு வாழ்ந்த ராம் மோகன், ஒரு சீர்திருத்தவாதியாக, சிந்தனையாளராக சமுதாயத்தைச் செப்பனிட்டுச் செதுக்கும் சிற்பியாக, சமூக விமர்சகராக, பெண்ணிய வாதியாக, பத்திரிகையாளராக மேடைப் பேச்சாளராக, பன்மொழி விற்பன்னராக, பல் அடிய ஆய்வறிஞராக, சமயப் பற்றுறுதியாளராக, இலக்கிய வாதியாக, உரை நடை ஆசிரியராக, மொழிபெயர்ப்பாளராக நிறுவன ஸ்தாபகராக எனப் பலநிலைகளில் தனது பன்முக ஆளுமையினை வெளிப்படுத்தியவர் இத்தகைய ஒருவரின் இறுதிக் காலம் அந்நிய மண்ணிலேயே முடிவுற்றமை காணத்தக்கது. 1833ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் தேதி இங்கிலாந்தில் காலமானார். ராம்மோகனாரின் இறப்புக்குப் பின் அவரால் தோற்றுவிக்கப்பட்ட பிரம்ம சமாஜமானது.

1. ஆதிப்பிரம்ம சமாஜம்
2. இந்தியப் பிரம்மசமாஜம்
3. ராம் மோகன்ராயின் பணிகளுக்கு உயிரோட்டம் கொடுத்து வருவதானது அவரின், இந்து சமூகம் பற்றிய தீர்க்க தரிசனத்தை வலியுறுத்தத் தவறவில்லை எனும் ஜதார்த்தத்தையே உணர்த்தி நிற்கிறது.

# தலைமைத்துவம் (LEADERSHIP)

S.K.N.தவராஜா
உதவிப் பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்

"மனிதனின் சகல அசைவுகளிலும் தலைவன் செல்வாக்குச் செலுத்துகின்றான்" என்பது புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் தோமஸ் கார்லைல் (Thomas Carlyle) அவர்களின் கூற்றாகும். தலைமைத்துவம் என்பது தேசங்களை மாத்திரமல்லாது சமூகங்களையும், நிறுவனங்களையும், குடும்பங்களையும் கட்டியெழுப்பிப் பாதுகாத்து வழிநடாத்தும் பண்புடையது. அரசியல் மட்டுமல்லாது, சமயம், மருத்துவம், விஞ்ஞானம், விளையாட்டு, இசை, கலை, இலக்கியம் முதலான எல்லாத்துறைகளிலுமே தலைவர்கள் அவசியமாக இருக்கின்றனர்.

தலைமைத்துவம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவதற்கு தனிநபரின் பண்புக்கூறுகள், நடத்தை, பிறர்மீதான செல்வாக்கு இடையினை உறவுநிலை, நிர்வாகம் முதலான பல்வேறு அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆயினும் தலைமைத்துவம் என்னும் எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளுதல் என்பது ஒரு மாயமான வேட்டையாகும். அதாவது அது சிக்கல் தன்மையும் வழுவழுப்புங்கொண்டது. ஒவ்வொரு முறையும் அது புதிய புதிய தோற்றங்களை எமக்குக் காட்டுகின்றது. சாதாரண வார்த்தையில் கூறினர் "சமூக ஒழுங்கு நிலையான பங்களிப்புக்களைச் செய்வது தலைமைத்துவம் ஆகும் என்று கூறலாம்.

**தலைமைத்துவத்தின் வகிபங்கு**

ஓர் தலைமைத்துவம் பத்து வகிபங்குகளைக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

**01) ஆளிடை வகிபங்கு** (Impersonal Role)

**அ] தலைமை உரு** (Figure Head)

ஓர் சனசமூக நிலையத்தின் தலைவர் அதன் தலைமை உருவாகத் திகழ்கிறார். நிறுவனத்திற்கு வரும் பொதுமக்களை வரவேற்பது அங்கு இடம்பெறும் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குவது சமூக நிகழ்வுகளிலும் தனிப்பட்ட நிகழ்வுகளிலும், சனசமூக நிலையம் சார்பாகக் கலந்து கொள்ளல் ஆகும், இவற்றை நிராகரித்தால் அவரின் அந்தஸ்துப் பாதிக்கப்படும்.

**ஆ] தலைவர்** (Leader)

தலைவரானவர் நிறுவன உறுப்பினர்களையும், பொதுமக்களையும், நிறுவனம் சாராத மக்களையும் தன் தரிசன நோக்கினை அடையும்வகையில் ஊக்குவித்து இலக்கினை அடைதல்.

**இ] தொடர்பாளர்** (Liason)

தலைவர் – உறுப்பினர்கள், உறுப்பினர் – பொதுமக்கள், தலைவர் – பொதுமக்கள் என்ற தொடர்புகளை தன்தொடர்பாடல் மூலம் வலுப்படுத்தல்.

**2) தகவல்சார் வகிபங்கு** (Informational role)

**அ] கண்காணிப்பாளர்** (Monitor)

தலைவர் தனது செயற்றிட்டங்களை தனது நியமிக்கப்பட்ட உதவியாளர்களைக் கொண்டு கண்காணிப்பதும் அவற்றைப் பொதுமக்களுக்கும் சமூகம்சார் அரச நிறுவனங்களுக்கும் தெளிவுபடுத்தலும் ஆகும்.

**ஆ] தகவல் பரப்புபவர்** (Disseminator)

நிறுவனத்தின் செயற்பாடுகள் இலாப நட்டாங்கள் நன்மை தீமைகளை எடுத்துக்கூறுதல்

**இ] பேச்சாளர்** (Spokesperson)

நிறுவனம்சார் செயற்றிட்டங்களைப் பொது மக்கள் சார்பாக அரச நிறுவனங்களுக்குக் கோரிக்கை கொடுத்தல்

**3) தீர்மானம் மேற்கொள்ளுதல்**

(Entreprenur)

அ) தான் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப் படையில் சமூக அபிவிருத்தி கருதி பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், பத்திரிகைகள் போடுதல், கணினிகளை வசதிப்படுத்தல், நூலகத்தை விருத்தி செய்தல், ஆங்கில அறிவை வளம் படுத்த முயலுதல், இலவச கல்வித்திட்டங்களை உருவாக்குதல், நவீன விளையாட்டுக் களை அறிமுகப்படுத்துதல், பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான கல்வி விளை யாட்டு சார்பான நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஊக்குவித்தல்.

ஆ) பிரச்சினைகளைக் கையாளுதல்

(Disturbance Handler)

சமூகத்தில் ஏற்படும் குழுக்கள்சார் பிரச்சி னைகளைத் தீர்த்து சுமுகமான உறவு நிலை பேண முயலுதல்.

இ) வளங்களைப் பகிர்பவர் (Resource Allocator)

உதவிசார் நிறுவனங்களிலிருந்து மக்களுக் கான உதவிகள் கொடுப்பனவுகள் கிடைக்கு மிடத்து அவற்றை மக்களுக்குப் பகிர்ந்து வழங்குதல் அவசியமானதாகும்.

ஈ) பேரம்பேசுபவர் (Negotiator)

மக்களுக்குத் தேவையான உதவிகளை நிறுவனங்களிலிருந்து பேரம்பேசிப் பெற் றுக் கொண்டு அதை மக்களுக்கு வழங்கும் திறன் உடையவராதல் வேண்டும்.

ஆதலால் மேற்கூறிய 10 வகிபங்குகளை ஒரு தலைவன் இயற்கையாகக் கொண்டிருந்தால் அவன் ஓர் உயர்ந்த தலைவனாகிறான். உலகில் கோடானகோடி மக்கள் இருந்தபோதும் அவர்களை வழிநடாத்தும் தலைமைத்துவத் தேர்ச்சிகள் கொண்ட மனிதர்கள் வரையறுக்கப் பட்ட எண்ணிக்கையினராகவே உள்ளனர். ஆயினும் சிலர் மாத்திரம் எவ்வாறு தலைவர்கள் ஆகிவிடுகிறார்கள்? ஏன் எல்லோராலும் தலை வர்களாகிவிட முடியாது? தலைவர்களாக வெற்றிபெற என்னசெய்ய வேண்டும்? இதன் அடிப்படையிலேயே மேற்கூறிய வகிபங்குகளை அதிகளவு கொண்டிருக்க முயலுதல் வேண்டும்.

ஓர் தலைவன் மக்களை எப்படி வழி நடாத்துகின்றான் என்பதைப் பொறுத்தே அவன் செல்வாக்குக் கணிப்பிடப்படுகின்றது. பின்பற்று வோர் இல்லாமல் தலைமைத்துவம் இயங்கமுடி யாது. தலைவரின் தோற்றம், சிந்தனை, ஆளுமை, நடத்தை முதலியனவே அவர் மற்றவர்களை வழிநடத்த வைப்பனவாக அமையும்.

**பெண்தலைமைத்துவம் ()**

உலகளாவிய ரீதியில் இன்று பெண் களின் தலைமைத்துவம் கணிசமான அளவு அதிகரித்துச் செல்கின்றது. முதன்முதலில் 1924இல் டென்மார்க் அமைச்சரவையில் நினா பாங்க் (Nina Bang) என்பவர் அமைச்சராக நியமிக்கப்பட்டார். சுவிஸ் நாட்டில் 1999இல் 11 பெண்கள் அமைச்சர்களாக இருந்தனர். ஆனால் 1960இல் உலகின் முதல் பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். உலகின் முதல் பெண் ஜனாதிபதியாக 1974இல் ஆர்ஜென் டீனாவில் இஸ்பெல் பெரோன் (Isabel peron) என்பவர் பதவி ஏற்றார். அதைத்தொடர்ந்து இன்று பெண்கள் உயர்பதவி வகிக்கின்ற நிலை வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது.

## 02)தலைமைத்துவமும் முகாமைத்துவமும் (Leadership and Management)

ஒரு நிறுவனத்தை முகாமை செய்ப வரே முகாமையாளர் ஆவர். அவர் அந்நிறுவனத் தின் உயரிய இலக்கை அடைய திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல் பணியாளரை நியமித்தல், வழிப்படுத்தல் இணைப்பாக்கம் செய்தல், கட்டுப் படுத்தல் என்பவற்றை மேற்கொள்பவர். ஆனால் தலைவர் என்பவர் நிறுவனத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தி சூழலுடன் பொருத்தப் பாடுகொண்டு நிறுவனம் முன்னோக்கி நகர்வதற் கான செயற்பாடுகளை ஆழ்ந்த தரிசன நோக்கு டன் செய்பவர் ஆவர்.

ஓர் நிறுவனம் விளைதிறனுடன் இயங்க வேண்டுமெனில் தலைமைத்துவமும் முகாமைத்து வமும் இணைந்து இயங்க வேண்டும். நிறுவனத் தில் மாற்றங்களை ஏற்படுத்துபவர் தலைவர் அதன் ஒழுங்குமுறையைப் பேணுபவர் முகாமை யாளர். ஆதலால் இரண்டும் இணைய வேண்டும், ஓர் முகாமையாளர் நிர்வாகம் செய்பவராகவும் நிறுவனத்தைப் பேணுபவராகவும், கட்டமைப்பில் கவனம் செலுத்துபவராகவும் குறுங்கால நோக்கி னைக் கொண்டவராகவும் விடயங்களைச் சரி யாகச் செய்பவராகவும் இருப்பார். ஆனால் தலை வரானவர் புதுமை புகுத்துபவர், தனித்துவமான வர், அபிவிருத்தி செய்பவர் மக்களில் கவனம் செலுத்துபவர், நம்பிக்கையை வளர்த்தெடுப்பவர் என்ன? ஏன்? எதற்கு? எனக் கேட்பவர் எதற்கும் சவால் விடுபவர் சுயமான இயக்கம் கொண்டு சரியாகச் செய்பவர் என தலைவரின் பண்புகள அதிகப்படுகின்றன.

முடிவாக நாம் பார்க்குமிடத்து புராதன வாழ்க்கையிலிருந்து இன்றைய சமகால வாழ்க்கை முறைமை ஈறாக தலைமைப்பண்பு இயல்பாக வெளிப்பட்டுள்ளது. ஏனைய ஜீவராசி களிலிருந்து மனிதரை வேறுபடுத்திக் காட்டும் தனித்துவப் பண்புகளில் ஒன்றாகவும் தலை மைத்துவம் விளங்குகிறது. இத்தகைய தலை மைத்துவம் அதுசார் தலைவர்களை அந்தந்தத் துறையில் உயர்ச்சி அடையச் செய்கின்ற தேச விடுதலைக்கான தலைமை சாம்பிராஜ்ய தலைமை, ஆன்மீகத் தலைமை, தேசமீள் நிர்மாணத் தலைமை, ஆகிய துறைகளில் தலைமைத்துவச் சிறப்பு அடைந்துள்ளனர். அத்தகைய தலைவர் கள் மேற்கூறப்பட்ட பத்து வகிபங்குகளில் சிறப் பம்சம் பெற்றுக் காணப்பட்டனர். இந்நிலையில் ஓர் சமூகம்சார் தலைவர் அச்சமூகம்சார் மக்களு க்கு அவர்களின் காலத்திற்கேற்ற தேவைகளை அறிந்து அவற்றை பெற்றுக் கொடுத்து வழிகாட்டு வதில் திறமையுள்ளவராக இருத்தல் வேண்டும் என இங்கு கூறமுடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. Burns w. (1998) Leadership, Harper and Row publishers, New York
2. Griffin R.W. (1994) Management AI.T.B.S Publisher's New Delhi.
3. Fiedler.F.E (1967) A Theory of Leadership effectiveness, Mc Graw - Hill, New York.


**உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளைவிடச் சிறந்தது**

– அன்னை திரேசா

சித்திரைப் புத்தாண்டில் சிறப்புற வரும் வைரவிழா மலர் வாழ்க

# ரவி மெக்கானிக்



சகல விதமான
மோட்டார் சைக்கிள்களும்
திருத்திக் கொடுக்கப்படும்



உரிமையாளர்
ரவி



வைரவிழா மலர் சிறப்படைய இன்முகத்துடன்
வாழ்த்துகின்றோம்

# அன்னம்ஸ்
# Annams

**Whole Sale and Retail Dealers in**

T.V. Deck, Radios Musical Instruments.




118, Kasthuriyar Road,
T.P. No: 021 222 7115
Mobile: 077 3151378




நவீன உலகில் வைரவிழா மலர் காலமும்
நிலைத்திட வாழ்த்துகின்றோம்

# ஆதி பராசக்தி பந்தல் சேவை

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கும்
திருமணத்திற்கான தலைச்சோடினை, நாக சடை
சகலவிதமான பாத்திரங்களுடன்
நாட வேண்டிய இடம்






உரிமையாளர்
க. கனகசிங்கம்

சென் செபஸ்த்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு

வைர விழா மலர் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்

# செல்வம் மர அரிவு ஆலையும் தச்சுத் தொழிலகமும்

வீட்டு வேலைகள், தளபாடங்கள், கோயில் வேலைகள் என்பவற்றை
சிறந்த முறையில் குறித்த தவணையில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்



உரிமையாளர் கணேசலிங்கம் கதீஸ்
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

தொ. பே. இல. 077 9239372
0214904080

வைரவிழாவில் உதிக்கும் வைரவிழா மலர்
தூவி வாழ்த்துகின்றோம்.

# குட்டி சுட்டி கல்வி நிறுவனம்



தரம் 1 முதல் A/L வரை
மாணவர்களுக்கு சிறந்த முறையில்
கல்வி கற்பிக்கப்படும்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

வைரவிழா மலர் புதுப்பொலிவு பெற
வாழ்த்துகின்றேன்.

# பத்மஸ்ரீ சவுண்ஸ் சேவிஸ்



திருமண விழா
பூப்புனித நீராட்டு விழா
புதுமனைப் புகு விழா
பிறந்தநாள் விழா
எதுவாக இருந்தாலும்
சிறந்த முறையில்
மின்பிறப்பாக்கி மூலம் ஒளி அமைத்திடவும்,
நவீனமுறையில் ஒலி அமைப்பு செய்திடவும்
நாட வேண்டிய ஸ்தாபனம்



உரிமையாளர்
க. பத்மநாதன்
ப. நகுலஸ்ரீ
ப. கேமஸ்ரீ
*T.P No: 021 490 2304*
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

# மின்னஞ்சலை மீட்டுவோம் E-mail

உடுவிலூர் உதயன்

இன்று உலகை ஒன்றிணைக்கும் தொடர்புகளின் உச்ச வளர்ச்சியில் மின் அஞ்சல் வேகநடை போடுகிறது. முன்பு நாம் ஒருவருடன் தொடர்புகொள்ள தொலைபேசியையும் கடிதத்தையும் பயன்படுத்தினோம். அதே போல் ஒரு Computer இன்னொரு Computer க்கு கடிதம் அனுப்புவதுதான் இ.மெயில் (Electronic Mail) என இதற்கு விலாசமுண்டு. இவ்விலாசத்தைப் பற்றி தெரிவித்து கொள்வதற்கு முன் Computer வாயிலாக கடிதத்தை அனுப்புவதும் பெற்றுக்கொள்வதும் மனிதர்கள் (?) என்ற உண்மையைப் புரிந்து கொண்டால் போதும்!

கடிதம் போலவே ஈ–மெயிலிலும் அனுப்புவர் மற்றும் பெறுபவரின் விலாசத்தைக் கொடுப்போம் இதைத் தவிர சுருக்கமாக எதைப்பற்றி (Subject) என்று கொடுத்து கடிதத்தை வடிவமைக்கலாம் பின்பு Send பட்டனைத் தட்டினால் கடிதம் உடனே சென்று விடும் தபால் தலை ஒட்ட வேண்டிய அவசியமில்லை. கடிதத்தில் விலாசம் வந்துவிடும் தவறாகக் கொடுத்தால் எமக்கே திரும்பிவிடும் அதை போல ஈ மெயில் விலாசமும் தவறாக இருந்தால் நமக்கே திரும்பி வந்துவிடும்.

E-Mail பயன்படுத்துவதன் அனுகூலங்கள்

1. விரைவில் சென்றடைதல் – Speed
2. ஒரே கடிதத்தை ஒருவரிற்கு மேல் ஒரே சமயத்தில் அனுப்பலாம். ஒரே கடிதத்தை வடிவமைத்து தேவையான ஈ–மெயில் விலாசத்தையும் குறிப்பிட்டால் அவரவருக்கு சென்றடையும்.
3. அயல் நாடுகளுக்கு ஈ மெயில் அனுப்புவதால் வேகம் மட்டுமன்றி செலவு மிச்சம் – Speed & Reduced Cost
4. ஈ மெயில் மூலம் கடிதங்கள் மட்டுமன்றி ஒலி, ஒளி பதிவுகளை அனுப்புவதுடன் Software களையும் அனுப்ப முடியும்.

Email பயன்படுத்துவது எப்படி?
uthayan uduvil@ Gmail.com

இந்த ஈ–மெயில் விலாசத்திற்கு ளு க்கு இடது பக்கமுள்ளது பயன்படுத்துவோர் பெயர் (Users Name) @ க்கு வலது பக்கமுள்ளது டொமைன் பெயர் (Domain) hotline இந்த விலாசத்தை இலவசமாக வழங்கிய சர்வர் (Server) Yahoo, Rocket mail போன்ற சர்வர்களும் இலவசமாக ஈமெயில் விலாசங்களை விளங்குகின்றன ஈ–மெயில் மூலம் நபருடன் மட்டுமல்லாமல் மற்றுமொரு கம்பியூட்டருடனோ அல்லது சர்வருடனோ அல்லது தகவலுடனோ தொடர்பு கொள்ளலாம்.

விலாசங்களில் காணப்படும் டாப் டொமைன் பெயர்கள்.

Comes to top level domain

| | |
|---|---|
| com | - Commercial |
| net | - Networking |
| gov | - Government |
| int | - International |
| edu | - Education |
| org | - Organization |
| mil | - Military |

இன்டர்நெட்டைப் பயன்படுத்த அதிகள விலாக கிளையண்ட் ப்ரோக்கிராம்கள் Client Programs உள்ளன இதில் மிகவும் பிரபல்ய மானவை Microsoft Internet Explorer மற்றும் Netcafe Navigator client server அடிப்படையில் இயங்கும் பயன்படுத்துபவர் கம்பியூட்டரிற்கு விடும் கோரிக்கைகளைக் கிளையண்ட் ப்ரோக் கிராம் பெற்றுக் கொண்டு அதை சர்வரிற்கு அனுப்பும் சர்வர் கோரிக்கைகளைப் புரிந்து கொண்டு தேவையானதை அனுப்பும் கிளை யண்ட் ப்ரோக்கிராம் அதைப்பெற்று பயன் படுத்துபவரின் கணணித் திரையில் வெளிப் படுத்தும். அதாவது பயன்படுத்துபவருக்கும் சர் வருக்கும் இடையில் ஒரு பாலமாக இருப்பது தான் கிளையண்ட் ப்ரோக்கிராமின் வேலை

இன்டர்நெட்டில் ஈ–மெயில், வெப்பில் தேடல், அரட்டை அரங்கம், செய்தி மற்றும் கருத்துப் பரிமாறுதல் போன்ற பல சேவைகளும் இடம்பெற அடிப்படையாக அமைவது கிளை யண்ட் சர்வர் இணைப்பாகும் ஒவ்வொரு சேவைக்கும் ஒன்றிற்கு மேற்பட்ட கிளையண்ட் ப்ரோக்கிராம்கள் உள்ள இவற்றில் ஏதேனு மொன்றை இயக்கி எம் தேவைகளை பூர்த்தி செய்யலாம்.

User Client Server

Internet Explorer ல் உள்ள Outlook express ஐகானை 2 முறை Click செய்து Tool bar லிலுள்ள Compose Massage பட்டனை Click செய்த பின் கடிதத்தை அனுப்புவரின் E-Mail விலாசத்தை From க்கு எதிரிலும் பெறுநரின் விலாசத்தை To க்கு எதிரிலும் ரைப் செய்ய வேண்டும். "Subject" எதிரில் கடிதத்தைப் பற்றி ஒரு சின்ன குறிப்புக் கொடுக்கலாம் Subject Type செய்யாவிடினும் Computer கோபித்துக் கொள்ளாது.

ஒரே கடிதத்தை ஒன்றிற்கு மேற்பட்ட வரிற்கு அனுப்பலாம் விலாசத்தை TO க்கு எதிரிலும் ரைப் செய்தபின் ஒரு கலா Comma கொடுத்து பின் அடுத்த விலாசத்தையும் ரைப் செய்யலாம் விரும்பினால் மற்றய விலாசங் களை CC - Carbon Copy, BCC - Blilld Carbon Copy என்பவற்றின் எதிரில் கொடுக்கலாம். இவை கடிதத்தில் நகல்கள் போன்றவை Subject Type செய்தபின் (Send) பட்டனை Click செய்ய வேண்டும்.

## வாழ்க்கையில் வெற்றிபெற மூன்று வழிகள் உள்ளன.

1. பிறரைக் காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்ள முயலுங்கள்
2. பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்
3. பிறரைக் காட்டிலும் குறைவாக பிறரிடமிருந்து பெற முயலுங்கள்

– வில்லியம் ஷேக்ஸ்பியர்

# குறள் ஒன்று குரல் நூறு

வரகவி, கவிஜோதி செந்தமிழ்நாவலர் ஆசிரியமணி, சைவப்புலவர்
மயில்வாகனம் சிவலிங்கம் B.A
Dip.in.Edu சமாதான நீதிபதி, ஆசிரியர்
யா/உருமபிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

**பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து**
**திறந்தோறுஞ் சேரச் - சுருங்கிய**
**சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்**
**வல்லார் ஆர் வள்ளுவர் அல்லால்**

என்று திருவள்ளுவமாலையில் சங்கப்புலவர் அரிசில் கிழார் குறிப்பிடுவது போல் பொய்யாப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய உலகப் பொதுமறையாம் திருக்குறளின் பெருமை தனை இக்கட்டுரை தருகின்றது. திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்துத் தருகின்ற முதற் திருக்குறள் பற்றியே இவ் ஆய்வு வளர் கின்றது.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

உலக இலக்கியங்களில் இருநூறு மொழிகளுக்கு மேல் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நூலாகத் திருக்குறள் அமைகிறது அண்மையில் சீனமொழியிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகில் அதிக மக்களால் கற்கப்படு கின்ற நூல்களின் வரிசையில் பைபிள் முதலாம் இடத்திலும், பகவத்கீதை இரண்டாம் இடத்திலும், திருக்குறள் மூன்றாம் இடத்திலும் காணப்படு கின்றது. பைபிள் கிறிஸ்தவ சமய நூல், பகவத் கீதை இந்துக்களின் சமய நூல் ஆனால் திருக் குறள் ஒரு சமயத்தவர்களுக்கோ ஒருமொழி யைச் சேர்ந்தவர்களுக்கோ, ஒரு நாடடைச் சார்ந்தவர்களுக்கோ என்று கொள்ளாமல் உலகில் வாழும் அத்தனை நாட்டினரும், அத்தனை சமயத்தினரும், அத்தனை மொழி யினரும் போற்றிப் பேணிப் பின்பற்றுகின்ற அறிவியல் நூலாகத் திகழ்கின்றமை அதன் பெருமையாகும்.

திருக்குறளைத் தமிழராகிய திருவள்ளுவர் தமிழ்மொழியிலே எழுதித் தமிழ் நாட்டிலே. தமிழ்ச் சங்கப் புலவர் முன்னிலே அரங்கேற்றியமை வரலாறு. அதனால் தமிழின் பெருமையும், தமிழின் தொன்மையும், தமிழின் இனிமையும் திருக்குறளாலே நிலை நாட்டப் பட்டுள்ளது. அது போன்றே திருக்குறளின் வளர்ச்சியும், திருக்குறளின் பெருமையும், திருக்குறளின் பொருள் ஆழமும் தமிழ் மொழியினாலே வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் தமிழும், திருக்குறளும் மனித வரலாற்றின் மூலங்களைக் கொண்டிருப்பது மிகவும் சிறப்புக்கு உரியது.

திருவள்ளுவர் திருக்குறளை எழுதும் போது முதலில் கடவுள் வாழ்த்து இயற்றியுள் ளார் அதன்மூலமே உலகின் அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதிலே வெற்றி கண்டுள்ளார். எல்லா மக்களுக்கும் பொதுவாக வும் ஆக்கியுள்ளார்.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

என்பதே முதற்குறள், இது கடவுள் வாழ்த்தின் முதற்குறள், திருவள்ளுவர் கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுக் காலப்பகுதியில் வாழ்ந்ததாகச் சில அறிஞர்கள் செப்புவர்

அவர்களின் கூற்றுக்களுக்கு அதிகமான சான்று களையும் அவர்கள் தந்துள்ளனர். அக்காலத்தில் திருக்குறள் விநாயகருக்கு முதல் வணக்கம் செய்துகொண்டு ஆரம்பித்ததே மிகச் சிறப்பான விடயமாகும்.

எழுத்தாணிக் கூர் கையிற் கொண்டு ஏரம்பனாக எழுந்தருளி இவ் உலகிற்கு எழுத்தை முதன் முதல் அறிமுகம் செய்த ஓம் என்னும் எழுத்தின் உருவமாக அமைந்த விநாயகப் பெருமானை முதலில் வணங்கித் திருக்குறள் ஆரம்பிக்கப்படுகின்றது. அகர முதல எழுத்து என்பது விநாயகரைக் குறிக்கின்றது. விநாயகன் ஓம் என்னும் மந்திரத்தின் வடிவமாக உள்ளவர். அகர (ம்) உ(தல) என்பது அகரம், ம்கரம் (மகரம்) உகரம் ஆகும். அகரம், மகரம், உகரம் இணைந்ததே ஓம் என்னும் பிரணவம் ஆகும். பிரணவம் விநாயகர் ஆகும்.

எனவே அகர முதல எழுத்தெலாம் ஆதி யாகக் கொண்ட இறைவனாகிய விநாயகருக்கு உலகிலே முதன்மை என்பதாகும். விநாயகர் இந்த உலகங்கள் யாவற்றுக்கும் முதலானவர் என்பது திருக்குறள் தருகின்ற செய்தியாகும். அதனால் விநாயகர் வணக்கத்தை மேற்கொள் வோர் திருக்குறளைத் தமது உயரிய நூலாகக் கருதுகின்றனர். விநாயகருக்கு முதல் வணக்கம் கூறி வழிபாடு செய்கின்றனர் திருவள்ளுவரும் விநாயகரை முதலில் வணங்கி நூல் ஆரம்பித் திருக்கின்றார். அதனால் திருக்குறளுக்குப் பெருமையும், மதிப்பும் பெருகின்றது. ஆய்வும் உரைகளும் பெருகுகின்றன. விநாயகர் அடியார்கள் திருக்குறளைத் தமது நூல் என்பர்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளா கக் கொண்டு வழிபடும் சைவ சமய மக்கள் திருக்குறள் தமது நூல் என்று போற்றுகின்றனர். அதாவது மும்மூர்த்திகளில் சிவபெருமான் முதன்மையானவர் அழித்தல் தொழில் புரிபவர், உருத்திரனாக இருப்பவர், அவரே பிரணவத்தில் அகரமாக இருப்பவர் அதனால் அகர முதல ஆகிறார்.

எழுத்தெலாம் ஆதி என்பது சிவனார் உபதேசம் செய்த வேதம் எனும் கல்வி ஆதியானது, பகவன் (குரு) முதற்றே உலகு என்பது குருவாக இருந்து உலகிற்கு முதலிலே உபதேசித்தருளினார் என்பது பொருளாகின்றது.

அதாவது முழுமுதலாகிய சிவபெரு மான் குருவாக அமர்ந்து வேதத்தை உலகுக்கு முதன்முதலில் உபதேசம் செய்தருளினார் என்னும் பொருள் திருக்குறளில் மிகவும் சிறப்புடையதாக இருக்கின்றது. அதனால் சைவ மக்கள் திருக்குறளை ஏத்திப் போற்றுகின்றனர். சிவனின் தட்சணாமூர்த்தி வடிவமும் குறிப்பிடப் படுகின்றது. திருக்குறளானது சிவனின் பெருமையை இறைவன் குருவாகவும் உள்ளார் எனவும் எடுத்துக் கூறுகின்றது. சிவனடியார்கள் திருக்குறளைத் தமது நூல் என்று போற்றுகின் றனர்.

உலகிலே சக்தியை முழுமுதற் கடவு ளாகக் கொண்டு வழிபடுபவர்கள் சாக்தர்கள் ஆவர். அவர்கள் திருக்குறளைத் தமது நூலாக மதிக்கின்றனர், அதாவது ஆதி என்பது ஆதிபரா சக்தி, ஆதிபகவன் முதற்றே உலகு என்பது ஆதிபராசக்தியான தாய்க்கடவுள் உலக இயக்கத்தின் மூல காரணம் அவளே உலகின் உயிர்களின் தலை எழுத்தை விதியை விதிக்கின் றான், அவரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்ததே உலகில் அகர முதல எழுத்தெலாம் இயங்குகின் றன என்று குறிப்பிடக்கூடியதாக இருக்கின்றது, திருக்குறள் பராசக்தியைப் பெருமைப்படுத்திக் கூறுகின்றது எனலாம். தாய்த் தெய்வ வணக் கத்தை முதன்மைப்படுத்துகின்றது அதனால் பெண்தெய்வ வழிபாட்டாளர்களும் திருக்குற ளைத் தமது நூல் என்பர்.

உலகில் விஷ்ணுவை முழுமுதற் கடவு

ளாகக் கொண்டு வழிபாடு செய்பவர்கள் வைஷ்ணவர் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் விஷ்ணு என்பவர் உலகில் எங்கும் பரந்தும், விரிந்தும், மறைந்தும் தோன்றுபவர் என்று குறிப்பிடுகின்றனர். அகர முதல எழுத்தொம் என்பது எல்லா எழுத்துக்களிலும் அமுதலான உயிரெழுத்துக்கள் எங்கும் பரந்து விரிந்து, மறைந்து தோன்றுவது போல ஆதியான கடவுள் விஷ்ணு மூர்த்தி (திருமால்) உலகிலே விரிந்தும், பரந்தும், நிறைந்தும் காணப்படுகின்றார் என்று கொள்ள முடிகின்றது. அதனால் வைணவர் திருக்குறளைத் தமக்கு உரிய நூலாகப் போற்றுகின்றனர். திருக்குறளும், வைஷ்ணவத் தெய்வம் திருமாலைச் சிறப்பித்துப் போற்றுகின்றது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

பிரமதேவர் உலகத்தைப் படைப்பதற்கு வேதத்தை அடிப்படையாகக் கொண்டுள் ளார், அகர முதல எழுத்தெலாம் என்பது உயிர் களின் மூலமான விதி ஆகும். அதுவே வேதமும் ஆகும். அகரம் (உயிர்) வேதத்தை ஆதி பகவனா கிய ஆதிப்பிரமதேவன், முதற்றே உலகு என்பது உலகத்தின் தோற்றத்திற்கு மூலகாரணியாகக் கொண்டுள்ளார் என்கிறது திருக்குறள். அதனால் திருக்குறள் பிரமதேவனுக்கு முக்கியமான இடத்தினை வழங்கி முதன்மைப்படுத்துவதைக் கண்டு இன்புறலாம். அதாவது பிரமன் வேதத்தைக் கொண்டு உலகினைப் படைத்தார் என்பது குறளில் கூறப்படுகிறது. (பகவன் – பிரமன்) அதனால் பிரமதேவன் பற்றிய குறிப்பு திருக்குறளில் அமைந்துள்ளமை நோக்கலாம்.

சூரியனை வழிபாடு செய்து அவரை முழுமுதல் கடவுள் என்று பூசிக்கும் மாந்தர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஆதிபகவன் என்பது சூரியனே என்று கொள்ளலாம், அதாவது சூரியக் கடவுள் ஆகும் சூரியனுக்கு ஆதி என்ற பெயரும் உண்டு அகரம் எனப்படும் உயிர்களும் எழுத்து எனப்படும் வாழ்வியல் முறைகளும் அவை வாழும் உலகும் சூரியனில் இருந்து தோற்றம் பெற்றுள்ளன என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். சூரியனில் இருந்தே பூமி முதலான கோள்கள் வெடித்துத் தோற்றம் பெற்றன என்ற விஞ்ஞானக் கருதுகோளுக்கு ஆதாரமாக இக்குறள் அமைவது சுட்டிக் காட்டப்படுகின்றது. அதனால் சூரிய வழிபாடு உடையவர்கள் திருக்குறளைத் தமது நூல் என்று கொண்டாடுகின்றனர்.

முருகன் அடியார்களும் இக்குறளின் மூலம் திருப்தி அடைகின்றனர். முருகன் தமிழ்க் கடவுள் என்று போற்றப்படுபவர், தமிழை வளம் படுத்த முருகன் அவ்வப்போது காட்சி கொடுத்துள்ளார். அகர முதல எழுத்தெலாம் என்பது தமிழ் மொழியின் முதல் எழுத்து அ ஆகும். எனவே அ என்பதை முதலாகக் கொண்ட தமிழ் எழுத்தெல்லாம் ஆதியிலே முருகக் கடவுளாலே உலகில் நிலை நிறுத்தப்பட்டுள்ளமை புராண வரலாற்றாகும். இதனையே இக்குறள் கூறுகின்றது. அதனால் முருகக்கடவுளும் தமிழும் கொண்டுள்ள இணைப்பும் புலனாகின்றது. தமிழ் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் முருகனின் பன்னிரண்டு கைகளாகவும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆறுமுகனின் பதினெட்டுக் கண்களாகவும் ஆய்த எழுத்து ஒன்று முருகனின் வேலாயுதம் ஒன்றாகவும், உயிர்மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறும் ஆறுமுகனின் முப்பத்தாறு தத்துவங்களின் ஆறின் மடங்காகவும் அமைந்ததை முருகனடியார் கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறிப்புகழ்ந்தமை இங்கு உணரத்தக்கது அதனால் முருகனடியார்கள் திருக்குறளைத் தமது நூலாக மதித்துப் போற்றுகின்றனர்.

இந்துக்கள், இறைவன் எட்டுக்கரங்கள் உடையவர் எனப் போற்றுகின்றனர். நான்முகனாகிய பிரமனுக்கு எட்டுக்கைகள் என்பர். சிவபெருமானை எண்தோள் வீசி நின்றாடும் பிரான் என்பர். தமிழிலே எண்முறைகளைக்

(குறியீடு) குறிப்பிடுவதற்கு தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தினர். அவற்றுள்ளே அ என்பது எட்டு என்னும் எண்ணைக் குறிப்பதாகும். அதனால் அகர என்பது எட்டுக்கைகளுள்ள என்ற கருத்துத் தருகின்றது. முதல என்பது தலைவன் (கடவுள்) எழுத்தெலாம் என்பது எழுதப்பட்ட விதி எழுத்துக்கள் யாவும் ஆதித்தொடக்கமானவையும் அவையே உலகத்திற்கு கடவுள் முதன்மையானவர் என்பதைச் சுட்டி நிற்கின்றார் வள்ளுவர் அதாவது எட்டுக்கரங்கள் கொண்டு இறைவன் முன்னமே வரைந்த விதிமுடிவுகளினாலேதான் இன்றும் இறைவன் உலகிற்கு முதன்மையானவர் என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது எனும் கருத்தைத் திருக்குறள் தருகின்றது. தலையெழுத்தை மாற்ற முடியாது என்று குறிப்பிடுவது அதனால்தான் என்பது புரியும்.

திருவள்ளுவரின் தாயார் ஆதி என்றும் தந்தையார் பகவன் என்றும் குறிப்பிடுகிறது வரலாறு அதனால் திருவள்ளுவர் தனது தாயையும், தந்தையையும் முதற்குறளிலே வணங்கியுள்ளார் என்பது புலனாகிறது. அதாவது அகர முதல எழுத்தெலாம் கொண்டமைந்த திருக்குறளை ஆதிபகவன் ஆகிய தாய் தந்தையரை வணங்கி உலகின் முன் வைக்கிறேன் என்பதாகும். இதன் மூலம் உலகில் தாய்தந்தையரே கண்கண்ட தெய்வம் என்றும் அவர்களுக்கு முதல் வணக்கம் தெரிவிக்கிறேன் என்ற விளக்கத்தையும் முதற் குறளின் ஊடாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அகரமுதல எழுத்தெலாம் என்பதில் அகரம் எல்லா எழுத்துக்களுக்கும் முதலாக அமைந்துள்ளது போல் ஆதிபகவன் முதற்றே உலகு என்பது ஆதியான இறைவன் உலகில் வாழ் உயிர்களுக்கும் முதன்மையானவர் என்றும் வள்ளுவர் கூறுகின்றார் திருக்குறள் மிகப்பெரும் சமுத்திரம் என்று கூறுவர் அதனில் ஒரு துளிதான் ஒரு குறளின் உரை ஒரு குறளுக்குப் பொருள்தேட முயன்றதன் பயனாக இந்த அய்வுக்கட்டுரை எழுத நேர்ந்தது. எனவே வாசகர்கள் மனங்கொள்ளுமாறு கேட்டு நிறைவு செய்கிறேன் விரிவாக நூல் ஒன்றில் இடம்பெறும்.

பொருள் விளக்கம்

அகரம் : உயிர், உயிரெழுத்து, எட்டுக்கரம், அ எனும் எழுத்து, சிவன்

ஆதி : தொடக்கம், காரணம், சூரியக்கடவுள், நாராயணன், சக்தி, சிவன்

ஆதி பகவன்: கடவுள்

உகரம் : விஷ்ணு, சிவன், சிவசக்தி

உலகு : பூமி, நிலம், உயர்ந்தவர், கடவுள், வாழ்க்கை, மக்கள்

எலாம் : எல்லாம், முழுதும்

எழுத்து : கல்வி, வேதம், விதி எழுத்து, தலைவிதி, தமிழ் எழுத்துக்கள்

கரம் : கை

முதல : தலைவன், முதலான

பகவன் : கடவுள், குரு, பிரமன், சூரியன், திருமால், சிவன்.

வைர விழா மலர் புதுப் பொலிவுபெற
வாழ்த்துகிறோம்

# ERIC GANESH
## OPTICLANS



Prop: V. Ganeshalingam

564, 566, Hospital Road,
Jaffna
T.P / Fax: 021 222 2486
Mobile: 0777 156604



அவனியில் அனைத்துச் சிறப்புக்கள்
பெற்று வைரவிழா மலர் மலர வாழ்த்துகின்றோம்

# KARAN
## WATCH & RADIO

TV
Deck
Radio
Wall Clock
Wrist Watch
Gift Items



No. 91, Kasthuriyar Road,
Jaffna,
Tel: 021 222 6807




வைர விழா மலருக்கு
உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள்

# ஜோய் நகைமாளிகை



உறுதியும், உத்தரவாதமும் உள்ள தங்க வைரநகைகளை பெற்றுக்கொள்ள,
22 கரட் தங்க நகைகளை ஓடருக்கு குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்



பலாலி வீதி, கோண்டாவில் சந்தி

வைரவிழா மலர் பூத்து திக்கெட்டும் மணம் பரப்ப நல்வாழ்த்துக்கள்




பல்வகை ஆக்கங்கள் சுமந்து வரும்
வைரவிழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஷீலா நகையகம்
SHEELA NAGAI YAGAM




நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க
நகைகளை செய்து பெற்றுக்கொள்ள
வேண்டிய ஸ்தாபனம்

177E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 4451

எத்திசை எங்கும் வைரவிழா மலர் எழில்
மணம் பரப்ப வாழ்த்துகின்றோம்.

விஷ்ணு
பந்தல் சேவை

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கும்
திருமணத்திற்கான பந்தல்,
தலைச்சோடினை, நாக சடை
சகலவிதமான பாத்திரங்களுடன்
நாட வேண்டிய இடம்





உரிமையாளர்
திரு. ஆ. செல்வநாயகம்

நாராயணன் வீதி,
கோண்டாவில்.

# வருமானத் திட்டமிடலும் பங்கு முதலீடும்

தூ. கவாஸ்கர்
ஹற்றன் நஷனல் வங்கி

மனிதனின் தேவைகள் அதிகரித்துச் செல்லும் இன்றைய உலகில் அவனின் செலவும் அதிகரித்துச் செல்கின்றது, குறிப்பாக இலங்கையில் மனிதனின் வாழ்க்கைச் செலவு திடீரென உயர்ந்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. நாட்டில் ஏற்படும் பணவீக்கத்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலை சாதாரண, நடுத்தர வர்க்கத்தினரால் ஈடுகொடுக்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக இலங்கையிலே யாழ்ப்பாணம் வாழ்க்கைச் செலவு அதிகமான நகரமாக தெரிவு செய்யப்பட்டு உள்ளது.

இதனால் தனிநபர் வருமானம் அதிகரிக்காவிட்டால் மத்தியதர வருமானம் உடையோர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோரின் நிலை மிகவும் கவனக்கிடமாகவே உள்ளது. இதனால் பல்வேறு வருமான வழிகளைத் தேட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர்.

முன்னைய காலங்களில் மனிதர்கள் தாம் பெறும் வருமானத்தில் சிறிய பகுதியினை சேமிக்கும் பழக்கம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். எமது நாட்டுப் பணப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வங்கிகள் தற்போது குறைந்தவட்டி வீதங்களினையே வழங்குகின்றன. இதனால் சேமிக்கும் பழக்கம் குறைந்தது மட்டுமல்லாமல் வங்கியில் வைப்பிலிடுவது ஒரு சிறந்த வழிமுறையாகவும் காணப்படாது இருக்கின்றது.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை நீண்டகால நோக்கம் கொண்ட சிறிய, நடுத்தர கைத்தொழில்களையும் பாரிய கைத்தொழில்களையும் உருவாக்கலாகும். இதனால் தற்போது வங்கிகள் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குகின்றன. தனி நபர்கள் எதிர்காலத்தில் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் பங்கு முதலீட்டில் ஈடுபடுவது புத்திசாதுரியமானது.

**பங்கு முதலீடு**

பங்கு முதலீட்டினை ஆராய்வதற்கு முன் பங்கு என்றால் என்ன? (What are shares) என்பதனை பார்த்தல் வேண்டும். பங்கு எனப்படுவது "ஒரு தொழில் முயற்சியின் பகுதியளவிலான உரிமையே பங்கு" எனப்படும் இது ஒரு முயற்சியில் எம்மை இணைத்துக் கொள்வதற்கான உரிமையினைக் கொடுக்கின்றது. நாம் கொண்டுள்ள பங்குகளின் அளவிற்கு ஏற்ப உரிமைத்துவம் தீர்மானிக்கப்படுகின்றது.

ஒரு முயற்சியானது தனக்குத் தேவையான மேலதிக நிதி முதலினை பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலம் திரட்டிக் கொள்ள முடியும். இது ஆரம்பப்பங்கு வழங்கல் (Going public) எனப்படும் ஒரு சிறந்த முதலீடு ஆனது பின்வரும் மூன்று அடிப்படைக் குறிக்கோள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முதலுக்கான வருமானம் Income objective
முதலுக்கான பாதுகாப்பு Capital preservation
முதல் பெருக்கம் Capital Appreciation

**பன்முகப்படுத்தல்** (Diversification)

நடைமுறையில் எந்தவொரு காரணியின் விலையும் தொடர்ச்சியாக அதிகரிக்கவோ / குறையவோ மாட்டாது. இதன் விலைகள் தளம்பலானவை எனவே முதலீட்டாளராகிய நாம் ஒருவனைச் சொத்தில் மாத்திரம் முதலீடு செய்யாது வேறுபட்ட வகையான சொத்துக்களையும் இணைத்து முதலீடு செய்தல் வேண்டும்.

பங்கு முதலீடு இரண்டு வகைப்படும்

1. நேரடி முதலீடு (Direct Investment)
2. மறைமுக முதலீடு (Indirect Investment)

நேரடி முதலீடு என்பது கணனியின் உதவியுடன் கம்பனிகளின் பங்கு பெறுமதி சந்தை விலையை இனம்கண்டு பங்குகளை கொள்வனவு செய்தல் ஆகும். இணையத்தளம் www.csc.lk

மறைமுக முதலீடு என்பது பங்குதரகர் நிறுவனங்கள் மூலம் பங்குகளைக் கொள்வனவு செய்தல் கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தல் என்பன ஆகும்.

மூலதன இலாபம் (Capital Gain) பங்குலாபம் Dividend

பொதுவாக ஒரு பொருளை வாங்கி விற்கும் போது (இலாபநோக்குடன்) எம்மால் மூலதன இலாபத்தினை உழைக்க முடியும். இங்கு விற்றவிலை வாங்கிய விலையிலும் கூடவாயின் இலாபம், விற்றவிலை வாங்கிய விலையைவிட குறைவாயின் நட்டம் ஏற்படும்.

நிறுவனங்களினால் உழைக்கப்பட்ட இலாபத்திலிருந்து செலவீனங்கள் தவிர்ந்த எஞ்சியபகுதி தேறிய இலாபமாகும். இத்தேறிய இலாபத்தினை அதன் உரிமையாளர்களான பங்குதாரங்கள் தம்மிடையே பகிர்ந்து கொள்ளல் பங்குலாபபகிர்வு எனப்படும்.

**குறிப்பு:** பங்குமுதலீடுகள் மூலமாக உழைக்கப்பட்ட மூலதன இலாபங்களுக்கு வரி செலுத்தத் தேவையில்லை.

நாம் ஒரு பங்கு முதலீட்டாளராக வரவிரும்புமிடத்து நாம் பின்வருவனவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

1. எமது இலக்கு என்ன?
2. எவ்வளவு பணத்தை முதலீடு செய்ய வேண்டும்?
3. எப்படி முதலீடு செய்ய வேண்டும்?
4. முதலீட்டின் நம்பகத்தன்மை உள்ளதா?

இப்படியான தகவல்களை இணையத்தினூடாக உடனுக்குடன் பெற்றுக்கொள்ளல் வேண்டும். முதலீடு செய்யும் போது நேரடியாகவோ (Direct investment) மறைமுகமானதாகவோ (Indirect Investment) முதலீடு செய்யலாம்.

**பங்குமுதலீட்டினை எப்போது ஆரம்பிக்க வேண்டும்?**

When should I start the share market

எம்மில் பலர் எமது கடமைகளை முதலில் முடிக்கவேண்டும், பட்டம் பெறல், திருமணம் செய்தல், சிறந்த பாடசாலை அனுமதிகளை பிள்ளைகளுக்கு எடுத்தல் போன்றவற்றை முடித்த பின்னர் முதலிட வேண்டும் என்கின்ற தவறான எண்ணத்தினை கொண்டிருக்கின்றனர் பங்குச்சந்தை முதலீட்டில் ஈடுபடுவதுதான் முக்கியம்.

முதலீட்டில் நீண்டகால முயற்சியாக நோக்குமிடத்து பங்குகளை கொள்வனவு செய்யும் போது பங்குச்சந்தையின் போக்கு அல்லது நிலைமை பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ள தேவையில்லை. சிறந்த பெறுபேறு

களை வெளிப்படுத்தியுள்ள பங்குகளை கொள்வனவு செய்தல் போதுமானது. இது Passive investment strategies எனப்படும் இவற்றை குறித்த காலம் வைத்திருந்து பின்பு விற்பனை செய்யலாம்.

முதலீடுகளை குறுங்கால அடிப்படையில் நோக்குமிடத்து காலத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர். இங்கு பங்குகளின் விலைகளில் ஏற்படும் அணுவானது மீள் முதலீட்டு வாய்ப்புக்களாக அமைந்துவிடும் இவ் அணுகுமுறை Active Investment Strategies எனப்படும்.

பங்குச்சந்தையில் வேறுபட்ட பங்குத் தொகுதியிலிருந்து குறித்த பங்குகளைக் கொள்வனவு செய்ய தீர்மானிக்கின்றபோது பின்வரும் காரணிகள் எழுத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**மிலங்கா கம்பனிப் பங்குகள்** (Milanka Companies)

இக்கம்பனிகள் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடியவை ஆகும். இவற்றில் தயக்கமின்றி முதலீடுகளை மேற்கொள்ளமுடியும். இவை ஒழுங்காக பங்குலாபத்தினை பெற்றுத் தரக்கூடியதாக இருப்பதுடன் உயர்ந்த திரவத் தன்மையையும் கொண்டிருக்கும்.

**வளர்ச்சிப் பங்குகள்** (Growth Shares)

சில கம்பனிகள் அதிவேகமான வளர்ச்சி வீதத்தினை கொண்டவை ஆகும். இவை பங்கு இலாபத்தினை தராது அல்லது குறைந்த அளவில் வழங்கும். ஆனால் இவை இலாபம் முழுவதனையும் மீள்முதலீட்டிற்கு பயன்படுத்தும். இதனால் கம்பனி அபிவிருத்தி அடையும் நீண்டகாலத்தில் மிகப்பெரிய ஒரு மூலதன இலாபத்தினை வழங்கும்.

**சுழற்சிப் பங்குகள்** (Cyclical Shares)

நாட்டின் பொருளாதாரப் போக்கிற்கு ஏற்ப மாற்றமடையும் பங்குகள் சுழற்சிப் பங்குகள் எனலாம். பொருளாதார வளர்ச்சியின் போது பங்கின் விலைகள் கூடுதலாகவும் பொருளாதார வளர்ச்சி குறையும் போது பங்கின் விலை குறைவதாகவும் காணப்படும்.

**பாதுகாப்பு பங்குகள்** (Defensive shares)

அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனிகளின் பங்குகள் ஆகும். உதாரணமாக மதுபாவனை, உணவு, காப்புறுதி போன்றன பொருளாதார மந்த நிலையிலும் கூட சரிவினை சந்திப்பது இல்லை.

**வருமானப் பங்குகள்** ()

சில கம்பனிகள் தொடர்ச்சியாக பெரிய தொரு தொகையினை பங்குலாபமாக பெற்றுக் கொடுக்கின்றது. இதில் வங்கித்துறை சார்ந்த கம்பனிகள் வெளிநாட்டு கம்பனிகளின் பங்குகள் வருமானப் பங்குகளாக அமையும்.

இவ்வாறு பங்குகளை வகைப்படுத்தினாலும் பங்கு முதலீட்டில் ஈடுபடும்போது கம்பனிகளின் ஆண்டறிக்கை, நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக இணையத்தினூடாக தகவல்களை பெற்று உடனுக்குடன் உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

**பங்குகளை எப்போது விற்பனை செய்தல்**

பங்குகளை விற்பனை செய்யும்போது பின்வரும் காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. முதலீடு எதிர்பார்த்த வருமானத்தை உழைத்தது (Expected Return)
2. முதலீட்டு நோக்கத்தில் உள்ள பங்குகள் நிர்ணயித்த குறிக்கோளிலிருந்து விலகிச் செல்லுதல் (No long suit our investment goal)
3. முதலீட்டு தேக்கத்தில் பங்குகளின் தெரிவு அல்லது நிறையிடல்களில் மாற்றங்களை

ஏற்படுத்த வேண்டியிருத்தல் (Need to rebalance our portfolio)

4. மீள் முதலீட்டு வாய்ப்புக்கள் (Reinvestment opportunities)

பங்குதரகர் மூலம் பங்குவிற்பனையை மேற்கொள்வது சிறந்ததாகும். இவர்கள் பங்கு கொள்வனவு, விற்பனை செய்வோரிடம் தரகர்களாக செயற்பட்டு பரிமாற்றம் நிறைவடைவதனை உறுதிப்படுத்தி சேவைக்கட்டணத்தை பெற்றுக் கொள்வார்கள். பங்கு சந்தையில் ஈடுபடுவோர் சிறந்த பங்கு தரகர்களைக் கண்டு கொள்ளுதல் வேண்டும். இதன்மூலம் சிறப்பாக பங்குமுதலீட்டினை மேற்கொள்ளலாம். பங்கு தரகு நிறுவனங்கள் CSE நிறுவனம் சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

எனவே எமது வருமானத்தை ஈட்டிக் கொள்ளுவதில் பங்குச் சந்தை ஒரு சிறந்த தெரிவாகக் காணப்படுகின்றது. வங்கியில் ஒரு குறித்த தொகையினை (Saving A/C) நிச்சயமாக நிலுவையாக பேணுபவராக இருந்தும் அத் தொகையில் ஒரு பகுதியினை (10%) எமக்கு நன்கு தெரிந்த கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்து 3 அல்லது 4 மாத இடைவெளியில் அவற்றிலிருந்தான வருமானத்தை அவதானித்து பார்ப்போமானால் நிச்சயமாக சேமிப்பைக் காட்டும் பங்கு முதலீடுகளிலிருந்தான வருமானம் அதிகமாக இருப்பதனை அவதானிக்கலாம். எனவே பங்கு முதலீட்டிலிருந்து கூடியளவான இலாபம் பெறப்படும்.

நாம் அனைவரும் பங்கு முதலீட்டினை மேற்கொண்டு வாழ்வை வளமாக்குவோம்.

நன்றி.

Reference

Colombo stock Exchange Internet. Www.cse.lk

**கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது.**

**தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும்**

**ஆன்மா விழித்துக்கொள்கிறது.**

**கைக்கோ, வாளுக்கோ ஆற்றல் ஏது?**

**ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது.**

– விவேகானந்தர்.

வைர விழா மலர் வையகத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்




No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, Sri Lanka.

Tel: 021-2224566
Fax: 021-2224566

e-mail: midea21@gmail.com

வைர விழா மலர் பூத்து புகழ்மணம்
பரப்ப பூரித்த வாழ்த்துக்கள்

யதி
வீடியோ

YATHI
Video



No. 323, Veerapaththirar Lane,
Kondavil North,
Kondavil,
Jaffna.

பல தசாப்தங்கள் பாரினில் வைரவிழா மலர்
பூரிப்புடன் விளங்க வாழ்த்துகின்றோம்

மதன் ஆட்ஸ்

ஆலய வர்ண வேலைகள், ஆலய திரைச்சீலைகள்,
விளம்பரப் பலகைகள், நம்பர் பிளேற் வேலைகள்,
பந்தல் அலங்கார வேலைகள், சிற்ப வேலைகள்
யாவும் சிறந்த முறையில் குறைந்த செலவில்
செய்து கொடுக்கப்படும்.

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தொ. பே. இல. 0777 1387206,
021 3735234



வைர விழா மலர் சிறப்பாக வெளிவர
வாழ்த்துகின்றோம்

## விஜய் சில்க்



123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
021 222 6162

---

பல செய்திகள் ஏந்தி வரும் வைரவிழா
மலர் பல ஆண்டுகள் காலப்பதிக்க
வாழ்த்துகின்றோம்

## Saranka Jewellery
## சாரங்கா நகைமாடம்



**157/1, Kasthuriyar Road,**
**Jaffna.**
**Tel: 021 222 6972**

---

புதுமை பல சேர்த்தே வைரவிழா மலர் வாழ்க

நவீன அழகிய தங்க நகைகள் என்றதும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



## சீனா ஜுவெலறி
## SEENA JEWELLERY



ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்



இல. 105, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

# அன்றாட வாழ்வில் மின்சாரம்

**கனகசிங்கம் சுரேஸ்நேசன்**
H.N.Dip.in.Accounting
யஉதவிக் கணக்காளர், இலங்கை மின்சாரசபை,
யாழ்ப்பாணம்.

மின்சாரத்தை பாவிக்காதோர் இவ்வுலகில் அரிது எனலாம். அந்த அளவுக்கு மின்சாரத்தின் பயன்பாடு இன்றியமையாததும் அவசியமானதும். ஆனால் அதை தகுந்த வகையில் உபயோகிக்கவேண்டும்.

"Electricity is a good servant but bad master" என்பது ஒரு ஆங்கில முதுமொழி, அதில் குறிப்பிட்டது போல் மின்சாரத்தை நாம் பயன்படுத்தி வேலை செய்தால் மட்டுமே அது எமக்கு மிகவும் பயனுள்ளதாய் அமையும். ஆனால் மின்சாரத்தை அதனது போக்கில் விட்டால் மிகவும் ஆபத்தானது. எனவே மின்சாரத்தை கவனமாக பாவித்தல் மிக முக்கியமானது.

**மின்சார சிக்கனதன்மை**

உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் அளவு வரையறுக்கப்பட்டது. அத்துடன் உற்பத்திக்கான செலவும் கணிசமானது. எனவே மின்சாரத்தை தேவைக்கேற்ற வகையில் சிக்கனமாக பாவித்தல் விரும்பத்தகுந்தது. தற்போது உலகளாவியரீதியில் சக்திபற்றாகுறை தலைதூக்கத் துவங்கியுள்ளது. இதற்கான தீர்வை கண்டறிய "மாற்று சக்தி முதல்கள்" தொடர்பான ஆராய்ச்சிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன. எனவே எமக்கு கிடைக்கக் கூடிய மின்சக்தியை தேவைக்கேற்ற வகையில் தகுந்த முறைகளில் பாவித்து நாமும் பயன்பெறுவதுடன் எமது நாட்டையும் பயன்பெறும் வகையில் சக்தி பாவனையை அமைத்துக்கொள்வது இன்றியமையாதது. மின்சக்தியை சிக்கனமாக பயன்படுத்த பின் வரும் முறைகளை பின்பற்றலாம்

**01. மின்குமிழ்** (Bulb)

சாதாரணமாக பாவிக்கும் இளை மின்குமிழ் (Filament Bulb) க்கு பதிலாக CFL (Compact fluorescent Lamp) பாவிக்கப்படலாம் இது கிட்டத்தட்ட 06 மடங்கு இலாபகரமானது. ஆனால் உடைந்த CFL Bulb வெளியேற்றுவதில் கவனமெடுக்க வேண்டும். Toilet மின்குமிழ் போட்ட பின் நிப்பாட்டுவதற்கு மறந்து விடுதல். இதற்கு Timer Circuit ஐ பொருத்தி பாவிக்கலாம்.

**02. மின் அழுத்தி** (Iron Box)

தனித்தனி உடுப்புகளுக்கு வேறு வேறு தடவையாக Iron பண்ணாமல் எல்லா உடுப்புகளையும் ஒரே நேரத்தில் Iron பண்ணுதல் மின் விரயத்தை குறைக்கும். Iron பண்ணி முடிந்தவுடன் அதனது Plug Top I Plug Base இலிருந்து கழற்றி விடவும் (தவறுதலாக போடப்படுவதிலிருந்து மீள்வதற்கு)

**03. குளிர்சாதனப் பெட்டி** (Refrigerator)

குளிர்சாதனப்பெட்டியை (Power Guard) ஒன்றை பொருத்தி பாவித்தல் நன்று. குளிர்சாதன பெட்டியை வாங்கும்போது Double Door உள்ளதாக வாங்குதல் ஆரம்ப செலவை அதிகரித்தாலும் மின்விரயத்தை குறைக்கும். குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து மூடுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். குளிர்சாதனப் பெட்டிக்குள் வெற்று பிளாஸ்ரிக் போத்தலுக்குள் 90% (கனவளவு வீதம்) நீரை நிரப்பி வைப்பதன் மூலம் மின்தடைகளின் போது குளிர்சாதனப் பெட்டியின் சீரான, தேவையான வெப்பநிலையை பேணுவதற்கு உதவும் (மூடாத பிளாஸ்ரிக் போத்தல்) குளிர்சாதனப் பெட்டியினுள் சூடான

பொருட்களை வைத்தல் ஆகாது. குளிர்சாதனப் பெட்டியினுள் பெருமளவு பொருட்களை ஒரே நேரத்தில் வைப்பதை முடிந்தளவு குறைத்தல் வேண்டும். குளிர்சாதனப் பெட்டியை நிறுவும் போது போதியளவு இடைவெளி இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். குளிர்சாதனப் பெட்டியை ஒரு இடத்திலிருந்து வேறு ஓர் இடத் திற்கு கொண்டு சென்றால், கொண்டு சென்ற வுடன் அதனை இயங்க வைக்க கூடாது. குறைந் தது 24 மணித்தியாலங்கள் அதனை தகுந்த முறையில் நிறுத்திவைத்தபின் தான் இயங்க வைக்க வேண்டும் (சரிக்காது நகர்த்தப்பட்டால் 4 மணித்தியாலங்கள் போதும்.

**04. மைக்குரோ வேன் அவன்**

(Micro wave Oven)

சக்தி மிகுந்த மைக்குரோ அலைகளை உணவுப்பாத்திரத்தினுள் ஊடுருவ விடுவதன் மூலம் வெப்பம் பிறப்பிக்கப்படுகிறது (மீடிறன்– (2450 MHZ). குளிர்சாதனப் பெட்டியில் உள்ள உணவு வகைகளை குறைந்த நேரத்தில் எல்லா பகுதிகளையும் ஒரு சீரான வெப்ப நிலையை அடைய செய்ய இது பெரிதும் உதவும். ஆரம்ப செலவு அதிகமானாலும் ஒப்பீட்டளவில் இலாப கரமானது. இதற்கென உருவாக்கப்பட்ட பாத்தி ரத்தினை மட்டும் பயன்படுத்தவும். (உலோக பாத்திரம் கூடாது) இதில் உணவு சமைக்கும் போது போசனை பதார்த்தங்கள் பாதிப்படை யாது. காட்போட்டில் அடைக்கப்பட்ட பதார்த்தங் களை அவ்வாறு வைத்தபடியே வெப்பமாக்கலாம்.

**07. மின் விசிறி** (Fan)

மின் விசிறி குறைவான வேகத்தில் சுற்றும்போது குறைந்தளவு மின் சக்தியை நுகரும். கூடிய வேகத்தில் சுற்றும் போது கூடி யளவு மின்சக்தியை நுகரும், எனவே தேவை யான வேகத்தில் பாவித்தல் வினைத்திறன் மிக்கது. மின்விசிறியில் சிறகுகளில் சேரும் தூசு துணிக்கைகளை அகற்றுதல் மின் வீண்விரய த்தை குறைக்கும்.

**08. கணனி** (Computer)

கணணியை Off செய்யும்போது மொனிற்றர், ஸ்பீக்கர் என்பவற்றை Off செய்யும் போது வெளியேற்ற வேண்டும்." ஒரு இரவு முழு வதும் மொனிற்றர் வேலை செய்யும் சக்தியை பயன்படுத்தி 800 A4 Print Out எடுக்க முடியும்." தேவையற்ற வேளைகளில் மொனிற்றரை Off செய்து விடலாம். (Audio Work) பண்ணும் போது 66% சக்தி (CR) மொனிற்றராலேயே நுகரப்படு கிறது.

**மின்சேமிப்பு**

மின் விரயமாதல் தொடர்பான பொது விடயங்கள்

01. தேவையற்ற வகையில் மின்குமிழ்களை ஒளிரவிடல் மின்விசிறிகளை இயங்க விடல் போன்றவை தவிர்க்கபடல் வேண்டும்.
02. இரவு வேளைகளில் தொடர்ச்சியாக எரிய விடுதல் – திருடர் பயமெனின் உணரி ஆழி (Sensor Switch) பொருத்தி பயன்படுத்த லாம்.
03. Hot Plate Heater Electric Water Pump போன்றவற்றின் இணைப்பு வயரை முடிந் தளவு குறைத்தல்
04. நீரை கொதிக்க வைக்கும் போது Hot Plate இல் வைக்காமல், அமிழ்த்தி வெப்பமாக்கி Immercon Heater, இல் வைப்பது மின் விரயத்தை குறைக்கும்.
05. ஒரே நேரத்தில் Hot Placel Heater, Electric Water Pump போன்றவை பாவிப்பதை முடிந்தளவு குறைத்தல்.
06. வீடு கட்டும்போது போதிய சூரிய ஒளி வரக்கூடிய வகையில் அமைத்தல்.
07. சில பழைய உபகரணங்கள் மின் விரயத்தை ஏற்படுத்த கூடியன, இவை மாற்றப்படுதல் வேண்டும்
08. சில Power Pack (Phone, புற்றறி சாச்சர்) Plug செய்தபடியே பாவிக்கப்படாமல் இருக்கும். இவையும் கருதத்தக்களவு மின் விரயத்தை ஏற்படுத்துவதுடன் Power Pack

இன் ஆயுள் காலத்தையும் குறைக்கும். எனவே தேவை முடிந்தவுடன் Un Plug செய்வது சிறந்தது.

09. ஒரு உபகரணத்தை நாம் பாவிக்க ஆயத்த மாகிய பின்தான் On செய்ய வேண்டும்.

உ+ ம்: அலுவலகங்களில் அவர்கள் தங்களது மேசைக்கு வந்ததுமே PC ஐ on செய்து விடுவார்கள். ஆனால் அவர்கள் பாவிக்க தொடங்குவது Lunch க்கு பின்னாக இருக்கலாம்.

**திருட்டு மின்சாரம்**

"களவை மறப்போம் நல்வழியில் நடப்போம்"

திருட்டு மின்சாரம் பெறுபவர்கள் தமது வசதியின்மையை காரணம் காட்டுவது ஏற்க கூடியதன்று சட்டபூர்வமாக மின்சாரத்தை பெற்றுச் சிக்கனமாகப் பாவிப்பது இதற்குச் சிறந்த வழி.

திருட்டு மின்சார இணைப்பு சிறு குழந்தை உட்படப்பவரின் உயிர்களை காவு கொண்டுள்ளது. இவ் ஈனத்தனமான திருட்டுச் செயலில் போதிய வருமான வசதியுடையவர்கள் படித்தவர்கள் கூட ஈடுபடுகிறார்கள். இவர்கள் தமது வீட்டிற்கு திருட்டு மின்சாரம் எடுக்க முயன்று மின் கம்பியினுள் சிக்குண்டு உயிரிழந்த சம்பவங்கள் அறிந்ததே. மேலும் சில பெற்றோர்கள் தமது சிறார்களை கொண்டு இத் திருட்டுச்செயலை செய்வதால் தமது சிறார்களை கூட இழந்துள்ளார்கள்.

முன்னைய காலங்களில் இத்திருட்டு விவகாரத்தில் ஈடுபடுபவர்களை எச்சரித்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தற்போது திருட்டு மின்சார பாவணையாளருக்கு நீதிமன்றத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய அளவுக்கு எல்லைமீறிவிட்டது. எனவே சட்ட பூர்வமாக மின்சாரத்தை பெற்றுச் சிக்கனமாகப் பாவிப்பது இதற்குச் சிறந்த வழி.

மின்சாரத்தை பெற்றுக்கொள்ள நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டியவை

01. உள்ளக கம்பியிடுதல் வேலையை முதலில் பூர்த்தி செய்தல் வேண்டும்

02. அண்மையில் மின் அத்தியட்சகர் காரியால யத்திற்கு சென்று மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய படிவத்தை பெற்று பூர்த்தி செய்தல் வேண்டும். அதில் பின்வரும் விடயங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

I. காணியின் இருப்பிடத்தன்மை கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு காணி உறுதியின் புகைப்படப்பிரதி சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

II. மின்சாரம் தற்காலிக தேவைக்காக அல்லது சொந்த தொடர்ச்சியான தேவைக்கா அல்லது வாடகை பயன்பாட்டுக்கா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்

III. வீட்டுக்கு வருகின்ற மாதிரி வரைபடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொண்ட மின் அத்தியட்சகர் தனது ஊழியரை அனுப்பி மின்சார சபையின் விதிமுறைகளுக்கமைய உள்ளக கம்பிறிடுதல் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுவதுடன் மின்கம்பத்துக்கும் வீட்டுக்குமிடையிலான தூரம் அளக்கப்பட்டு மதிப்பீட்டு தொகை தெரியப்படுத்தப்படும்.

04. குறித்த நபர் மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்கு சென்று பாவனையாளர் சேவை நிலையத்தால் கொடுப்பனவு சான்று சீட்டில் (PIV) எழுதிக்கொடுக்கப்படுகின்ற கட்டணதொகையை அண்மையில் உள்ள மக்கள் வங்கி கிளைகளிலோ அல்லது மின்சார சேகரிப்பு நிலையற்களிலோ கட்டணத்தை செலுத்தி மூலப் பிரதியையும் மின்பாவனையாளர் சேவை நிலைய பிரதியையும் கட்டணத்தை செலுத்திய வங்கியிலோ அல்லது மின்சார சேகரிப்பு நிலையங்களிலோ பெற்று மின்அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இதுன்பின்னர் சேவை இணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுவார்.

06. மின் அத்தியட்சகர் குறித்த நபருடைய மின் சார உடன்படிக்கை படிவத்தையும் கட்டணம் செலுத்திய கொடுப்பனவு சான்று சீட்டையும் (PIV) மின்சார பொறியியலாளர் காரியாலயத்திற்கு அனுப்பிவைப்பார்.

07. மின்சார பொறியியலாளர் காரியாலயம் குறித்த பாவனையாளருக்குரிய கணக்கு இலக்கத்தை வழங்குவதுடன் மாதாந்த மின்பட்டியலை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்.

**மின்சார பட்டியலுக்கான கட்டண முறையும் கணிப்பீட்டு முறையும்**

மின்சார பாவனையாளர்களை சாதாரண பாவனையாளர்கள் (Ordinary Suppliers) தொகை பாவனையாளர்கள் (Bulk Suppliers) என வகைப்படுத்தலாம். சாதாரண பாவனையாளர்களுக்கான மின் கட்டணமானது வீட்டு பாவனையாளருக்கான கட்டணம் (Domestic) சமய நிறுவனங்களுக்கான கட்டணம் (Religious) பொது நோக்கங்களுக்கான கட்டணம் (General Purpose) கைத்தொழிற்சாலைக்கான கட்டணம் (Industrial) ஹொட்டலுக்கான கட்டணம் (Hotel) என வகைப்படுத்தி கட்டணத்தை அறவிடுகின்றது. இவை ஒவ்வொன்றுக்கான கட்டண விகிதம் – வேறுபட்டவையாகும். இவற்றில் வீட்டு பாவனையாளருக்கான கட்டணம் (Domestic) சமய நிறுவனங்களுக்கான கட்டணம் (Religious) பொது நோக்கங்களுக்கான கட்டணம் (General Purpose) கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள எரிபொருட் சீராக்கல் கட்டண வீதமும் குறிப்பிடப்பட்டுள்ளது தொகை பாவனையாளர்களை பற்றிய கட்டண விபரம் குறிப்பிடப்படவில்லை. யாழ் குடாநாட்டில் 50ற்கும் குறைவான தொகை பாவனையாளர்களே உள்ளனர். தொகை பாவனையாளர்கள் என்பது ஒப்பந்த கேள்வி (Contract Demand) 42 KVA யை விட கூடுதலாக உள்ள பாவனையாளர்களே தொகை பாவனையாளராக கருதப்படுகிறார்கள். (உதாரணம் – யாழ் போதனா வைத்தியசாலை யாழ் பல்கலைக்கழகம்) போன்றவற்றை குறிப்பிடலாம். யாழ் குடாநாட்டில் சாதாரண பாவனையாளர்களின் எண்ணிக்கை கிட்டதட்ட 125,000. இங்கு பொது நோக்கங்களுக்கான கட்டணத்துக்குள் வியாபார நிறுவனங்கள் (கடைகள்) நூல் நிலையங்கள் பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள் பல்கலைக்கழகங்கள் போன்றவை உள்ளடங்குகின்றன.

நவநாகரிக உலகிற்கு அடிப்படையானது நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவும் மின்சாரத்தை சட்டபூர்வமாக பெற்றுச் சிக்கனமாகப் பாவித்து உரிய காலத்தில் மின் கட்டணத்தை செலுத்தி எமது நாட்டிற்கு பயன் பெறும் வகையில் மின்சக்தி பாவனையை அமைத்துக் கொள்வது இன்றியமையாதது.

**இளைஞனே, வலிமை, அளவற்ற வலிமை – இதுவே இப்போது தேவை**

# கலையின் வடிவம் நாட்டியம்

பரதகலாவித்தகர் செல்வி விஷாந்தினி கனகராசா
B.F.A (Hons)
உதவி விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

கலை என்பது ஆற்றல் திறன் வழியாக மனித ஆற்றல் மனிதத்திறன் வழியாக படைக்கப் படுவது. இயற்கைக்கு நேர் எதிரிடையானது "கல்" என்ற வினையடியில் இருந்து தோன்றிய பல சொற்களுள் "கலை" என்ற சொல்லும் ஒன் றாகும். கலை என்பதைக் குறிக்கும் Art என்ற ஆங்கிலச் சொல்லும் Tecnic என்ற கிரேக்கச் சொல்லும் திறன் என்ற ஒரே பொருளையே தருகின்றன. ஆகவே திறன் வழியாகவே கலை கள் உருவாகின்றன. கலை பற்றி ஆராய்ந்த தற்கால மெய்யியலாளர்களில் "பியேட்ஸ்லி" "நெல்சன் குட்மன்" ஆகிய இருவரும் குறிப்பிடத் தக்கவர்கள். நெல்சன் குட்மன் கலையை புலக் காட்சிப் பொருளாக விவரிப்பது சரியல்ல என்றும் கலையை ஒரு குறியீடாகவே புரிந்து கொள்ள வேண்டும் என கூறுகிறார். இவ்வாறாக அமைந்த கலைகளுள் பரத நாட்டியமும் ஒன்றாகும். நாட்டியம் என்பது அங்க அசைவுகள் மூலம் ஏற்படும் ஆடல் வடிவத்தை கண் வழியே காண்பதன் மூலம் மனதுக்கு இன்பத்தையும் சாந்தியையும் அளிக்கும் ஓர் உன்னதமான அழகுக் கோலம் ஆகும். நாட்டியம் மற்றைய கலைகளின் தாய் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறாக விளங்குகின்ற பரத நாட்டிய எண்ணக்கருக்கள் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்களை பலர் முன்வைத்துள்ளனர். அவற்றை நோக்குவோமானால்

"வாழ்வே ஒரு நாட்டிய கலைதான். மனதின் உணர்ச்சிதான் மூளையில் அறிவாகவும், நாவில் பேச்சாகவும், வாக்கில் கவியாகவும், குரலில் பாட்டாகவும், விரலில் கருவியிசை யாகவும் நடம் புரிகிறது. உணர்ச்சிகள் முக பாவனைகளாலும் தலை, மார்பு, கைகள், இடுப்பு, கால்கள் அங்கங்களாலும் அபிநயமும் கலந்தே வருகிறது. நமது நாட்டின் நடனக்கலை ஜீவாத்மா பரமாத்மாவை கண்டு கலக்கச் செய்யும் ஓர் பக்தி யோகமாகும்" என யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டியம் என்றால் குமாரி, குமாரி என்றால் நாட்டியம் என்று சொன்னார். விசேஷ கலாபவன நிரந்தர பிரஸிடன்ட்"

"பரதக்கலை இந்திய கலாசாரத்தின் ஒரு முக்கிய அங்கம் உள்ளத்தில் எழும் உணர்வுகளை உடலசைவாலும் வாக்கினாலும் வெளிப்படுத்தும் ஸாத்விகாபிநயம் மூலம் சமூக பிரக்ஞை மிக்க கருத்துக்களை கொண்டு செல்லும் என "திருமதி ஹேமா ராஜ கோபாலன்" சித்தரித்துள்ளார்."

"சினிமாவில் பரதநாட்டியம் பயன்படுத் தப்பட்டாலும் பரத நாட்டியத்தை அடிப்படை யாகக் கொண்ட கதாபாத்திரங்களை உருவாக்கி னாலும் பரத நாட்டியகலை அதன் நாட்டிய வடிவங்கள் சினிமாவில் சாஸ்திரி ரீதியாக அமைந்துள்ளன என்று சொல்ல முடியாது என்று திருமதி. சாந்தினிசிவனேசன் குறிப்பிட்டுள்ளார்."

"பரதநாட்டியம் இந்தியாவின் தலை சிறந்த நடனம் மட்டுமன்றி நீண்டகாலச் சாஸ்திர சிறப்பு வாய்ந்ததாகும் இந்திய நடனங்களிலே பெருமிதமுடையது பரதநாட்டியமே என (Bharatha Natya is the pride of Indian Dance)

வேபியன் பவேர்ஸ் (மேலநாட்டு கலாவிமர்சகர்) தெளிவுபடுத்தியுள்ளார்"

"கலை என்பது இதயத்துக்கும் மூளைக்கும் வழங்கப்படவேண்டிய விருந்தாக அமைய வேண்டும். கலையின் மூலம் ரசிகர்களின் மனங்கள் அமைதியடைய வேண்டும். அதுவே ஒரு கலைஞர் வழங்கும் சிறந்த படைப்பாகும். அந்த வகையில் பரத நாட்டியம் அந்த படைப்பினை வழங்குகின்றது என பரதநாட்டிய தாரகை ரங்கனா நவோதினி ஆரியதாச என்பவர் கூறியுள்ளார்."

"பரதத்தின் வெளிப்பாட்டினால் ஏற்படும் கவர்ச்சியினால் ரஸிகனின் உள்ளம் மகிழ்வடையும்போது தான் உண்மையான கலையழகு ஏற்படும் என "அலங்கார ரகெவன்" மெய்ச்சியுள்ளார்.

பரத நாட்டியம் ஒரு கிளாசிக்கல் நடனமாக உள்ளது. தெய்வீக அழகு சாந்தம் மற்றும் சொர்க்கத்தில் உள்ளன என்று குறியீடுகள் என்று முயற்சிக்கின்றன என "ஸ்வர்ண மால்யா" செப்பியுள்ளார்.

இவ்வாறாக பரதநாட்டிய கலையின் எண்ணக்கருக்களை தமது சிந்தனைக்கு எட்டியவாறு குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கலாம்.

## மனித உறவுகளை மேம்படுத்தும் வழிகள்

1. பரஸ்பரம் மரியாதை கொடுத்தல்
2. உண்மையாகவும் நேர்மையாகவும் நடத்தல் 33
3. உறுதியான வெளிப்பாடு காட்டுதல்
4. அக அமைதியுடன் தளர்வாக இருத்தல்
5. விமர்சனங்களை கையாளத் தெரிந்திருத்தல்
6. மற்றவர்களைத் தீர்ப்பிடாமல் ஏற்றுக்கொள்ளல்
7. விடயங்களைப் பொதுமைப்படுத்தாதிருத்தல்

வைர விழா மலர் புதுப்பொலிவுடன் மிளிர எம் நல்வாழ்த்துக்கள்

# SINGER Plus





யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

01, Stanly Road, Jaffna.
T.P. No: 021 222 5408

எத்திசை எங்கும் வைரவிழா மலர் எழில் மணம் பரப்ப வாழ்த்துகின்றோம்

# Aashaa Merchant

## Sunny
## Hi-Build Lagoquer
## Pearl / Metallie




A.R. Ananthasiri
T.P. No: 0779499992
No. 137, Palaly Road,
Post Box Junction,
Thirunelvely.

# பூகோள இடநிர்ணயமுறை (GPS)

செல்வி அம்பிகை பஞ்சலிங்கம்
2011 கலைப்பிரிவு
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

புவியின் ஓர் இடத்தினை துல்லியமாக வானில் இருந்து அறியும் கருவியும் அதற்குரிய திட்ட அமைப்பு முறைமையினையும் கொண்ட ஒரு கலையே பூகோள இட நிர்ணய முறை எனப்படும்.

செய்மதிகளை அடிப்படைக் கருவி யாகக் கொண்டு நகர்ச்சிக்கான தொகுதிகளுக்கு பயன்படும் ஓர் தொழில்நுட்ப முறையும் கலையும் பூகோள இட நிர்ணயம் எனப்படுகிறது.

இந்தக் கலையின் வளர்ச்சியை எடுத்து நோக்குவோமாயின் ஆரம்பகாலங்களில் புவியில் ஓர் இடத்தின் நிலையத்தை அறிந்து கொள்ள பாரம்பரிய மரபுரீதியான முறையே பின்பற்றப்பட்டது. ஆரம்பகாலத்தில் போக்கு வரத்து நகர்ச்சியை அறிய கூற்றியல் நிலை அறிமுறைகளையும் நிலையான பொது மைப்படுத்தப்பட்ட நிலையத்திலிருந்து குறித்த இடத்தின் நிலையம் அமைந்துள்ள தூரம், திசை என்பவற்றை அறிய நிலைய இட நிர்ணய முறை யும் வானியல் மூலக் கூறுகளின் அமைவிடத்தை அறிய வான் இட நிர்ணய முறையும் பயன்படுத் தப்பட்டது.

இதற்குப் பின்னர் 2வது பரிணாமத்தில் தியோடலைற், திசையறிகருவி என்பவற்றை பயன்படுத்தியும், புவியியல் ஆள்கூற்று முறைக ளைப் பயன்படுத்தியும் புவியின் இட நிர்ணய முறையை அறிந்துகொண்டனர்.

1960ம் ஆண்டு முதல் அமெரிக்க கடற்படையினர் செய்மதிகளைப் பயன்படுத்தி யதைத் தொடர்ந்து 1972ம் ஆண்டளவில் USAஐ சேர்ந்த மத்திய வான்படை எதிர்ப்பு சார் வழிநடத்தலுக்கும் செய்மதிகளை பயன்படுத்த ஆர்வம் காட்டினர். 1973ல் இதன் ஆய்வு தொடர் பான உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்தக் கால கட்டத்தில்தான் 1978ம் ஆண்டு முதல் சோதனை முயற்சியாக பிளாக்-1 விண்கலம் ஏவப்பட்டது. 1983ம் ஆண்டு ரஸ்யாவின் "பொலிஸ் ரக விமானம்" "கால் 007" எனும் விமானத்தை அமெரிக்கா GPS இன் உதவியுடன் சுட்டு வீழ்த்தியது.

1985ம் ஆண்டு பத்துக்கும் மேற்பட்ட சோதனை முயற்சியாக GPS செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டன. 1995ல் முழுமையாக இயங்கும் தன்மையுடன் கூடிய "நவாஸ்ரர் செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டது. 1996ல் இதன் முக்கியத்துவம் இராணுவத்திடம் மட்டு மல்லாது பொதுமக்களிடையேயும் உச்சக்கட்டம் பெற்றது. இதற்கான கொள்கைகளை அமெரிக் காவின் அப்போதைய ஜனாதிபதி பில்கிளின்ரன் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

GPS இன் முக்கிய உறுப்புக்களாக "விண்வெளிப்பகுதி" "கட்டுப்பாட்டுப்பகுதி", "பயனாளர் பகுதி" என்பன காணப்படுகின்றன. விண்வெளிப்பகுதி என்பது செய்மதிகளின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் பகுதி ஆகும். புவிக்கு மேல் செலுத்தப்பட்ட செய்மதிகள் குறிப்பிட்ட அலைகளை சரியான நேரத்தில் நிலை நிறுத்துகின்றன. கட்டுப்பாட்டுப் பகுதி என்பது செயற்கைக் கோள் வானில் பறக்கும் பாதை, அவற்றின் செயற்பாடு என்பவற்றை

நிலத்திலிருந்து கவனித்து சீர் செய்யும் அமைப் பாக விளங்குகிறது. இது பின்வரும் கூறுகளைக் கொண்டது.

1. செயற்கைக் கோள்களை கண்காணிப்பு செய்யும் பகுதி
2. பிரதான செயற்கைக் கோள் கட்டுப்பாட்டுப் பகுதி
3. நில வானிலை வங்கி

என்பனவாகும்.

GPS செயற்பாட்டில் ஏற்படக்கூடிய வழுக்களாக செய்மதி சுற்றுப்பாதைவழு, செய் மதியின் நேரத்தை கணிப்பிடுதல் வழு, செய்மதி செறிவு வழு, செய்மதியின் உணர்திறன் வழு, முகில்கள் போன்ற வான்தடைகள், புவிமேற் பரப்புத்தடைகள் போன்றன காணப்படுகின்றன.

GPS இன் உணர்வு திறன்களானவை பல்வேறு வகைப்பட்டவையாகும்.

போக்குவரத்து நகர்ச்சியின்போது பயன்படுத்தப்படும் GPS முறையானது குறைந்த ரக திருத்தத்தன்மையும் படமாக்கல் முறையில் பயன்படுத்தப்படுவது நடுநிலை அளவான திருத்தத்தன்மை கொண்டனவாகவும் நில அளவையில் பயன்படுத்தப்படுபவை உயர் நிலை திருத்தத்தன்மையும் கொண்டவை.

GPS இன் நன்மைகளை எடுத்து நோக்கினால் வானிலும் நீரிலும் நிலத்திலும் ஒரு குறிப்பிட்ட இடம் எங்கே இருக்கிறது என்பதை இனங்கண்டுகொள்ள பயன்படுகிறது. அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் இந்தியாவி லும் வீதி விபத்துக்களோ அல்லது அசம்பாவிதங் களோ ஏற்படுகின்றபோது GPS இன் மூலம் குறித்த விடயம் கண்காணிக்கப்பட்டு மருத்துவ ஊர்திகள், தீயணைப்பு ஊர்திகள், காவல்துறை யினர் ஆகியோருக்கு தகவல் அனுப்பப்படுகிறது. இது பல உயிரிழப்புக்களையும், அழிவுகளையும் தடுக்கிறது.

மேலும் நாடுகள் நகரங்களின் பல வகைப்பட்ட வரைபடங்களை துல்லியமாக கணிப்பிட GPS பெரும்பங்கு வகிக்கிறது. GPS துல்லியமாக நேரத்தை கணிப்பதில் பங்களிப்புச் செய்கிறது. மேலும் நாடுகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் போர்க்காலங்களில் எதிர் நாட்டு படைவீரர்கள் மற்றும் படைக்கல இருப்பி டங்களை அறிவதற்கும் தொலைதூரம் சென்று தாக்கவும், ஏவுகணைகள் இலக்கை சரியாக கண்டறிந்து தாக்கவும் பயன்படுகிறது. குறிப்பாக நாடுகள் தொடர்பான புலனாய்வு விபரங்களுக் கும் பயங்கரவாத செயற்பாடுகளையும் இனங் காணவும் பயன்படுகிறது.

இன்று GPS கலையானது எவ்வளவோ தூரம் முன்னேறி தான் தோன்றுவதற்கு காரண மாக இருந்த இலக்கைவிட மேலதிக இலக்கு களையும் அடைந்துள்ளது என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை!

# கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் காணும் வைரவிழாக் கண்டு "கிருஷ்ணாலயா" நாடக மன்றத்தின் வாழ்த்து மடல்

**இ.ருதேஸ்கரன்**
தலைவர்
கிருஷ்ணாலயா நாடக மன்றம்

சீர் பெறு ஈழத்திகழ் யாழ்ப்பாணத்தில்
ஊர் பெரு கோண்டாவிலில் அமைந்து
பார் புகழ்ந்திடும் நாராயணா சனசமூக நிலையத்தில்
தார் விளங்கிடும் வைரவிழா சிறக்க
கார் முகில் கமலக் கண்ணனின் நன்னருள்
வாரி பொழிந்திற்றான் வாழி வாழி.

வண்ணமிகு கட்டிடங்கள் பலவுங் கண்டாய்
வளமான விளையாட்டு நிலமுங் கண்டாய்
கண்ணெனவே மிளிருகின்றாய் கோண்டாவிலூரில்
விண்ணவரும் மன்னவர் போற்ற காணுகிறாய் – வைரவிழா
நானிலமும் உன்னை வாழ்த்தி நிற்க
நன்நாளில் நந்தமிழால் பல்லாண்டு வாழி வாழி

பல்வேறு கலைகளையும் பயிற்றுத் தந்து
பண்புமிகு நன்மாணாக்கரை உருவாக்கி
எங்கெங்கோ சேவை செய்ய வைத்து
எல்லோரும் புகழும் வகையில் தோற்றுவித்து
நிலையாய் ஞானத்தில் நிலைத்து நிற்கும் பாலர் பாடசாலை
நின்குபுகழ் என்றும் நீடுழி ஓங்க வாழி வாழி

செந்தமிழ் நங்கையரின் பண்பு காத்து
இந்நிலப் பெருமை வளர்த்திட உழைத்து
தரித்திரம் துடைத்திட என்றெண்ணி
சரித்திரம் படைக்க வந்த
புதுமைப் பெண் மலர்ந்து வருவதற்கு
பூரணை ஒளியாய் விளங்கும் மாதர் சங்கம் வாழி வாழி

ஊரினிலே மெய்வல்லுனர் விளையாட்டுக்களை நடாத்தி
பேர் விளங்க வீரர்களை உருவாக்கி
வெற்றிக் கேடயங்களை வேறிடமெல்லாம்
பெற்று வந்து பெருமை சேர்ந்திற்று
மணம் பரப்பி வைரவிழாக் காணும்
மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் வாழி வாழி

இதுவரை பெருக இயற்று தன்மை போல்
இனிமேலும் ஈண்டச்செய்து
எழுபத்தைந்தாண்டில் ஏற்றமிகு பவளவிழாக்காண
ஏகமனதாய் ஒருமித்து நாராயணருள் பெற்று
பாரினில் பல சேவைகளை செவ்வனவே செய்ய
கிருஷ்ணாலாயா நாடக மன்ற சார்பினில் வாழி வாழி...

**மனிக்கனக்கில் போதனை செய்வதிலும்**
**ஒரு கணப்பொழுது உதவிபுரிதல் நலம்**

*-சீனப்பழமொழி*

# கோண்டாவிலூர் சித்திராலயா நாடக மன்றத்தினரின் வாழ்த்துச்செய்தி மடல்

K.M.ராயு [மு. இராசலிங்கம்]

பாரிலங்க யாழ்ப்பாணப் பதியினிலே
சீர் இலங்கு கோண்டாவில் கிராமத்திலே
மன்னிலங்கு வைரவிழாதனிலே
பேரிலங்கு நாராயணா சனசமூக நிலையத்தினிலே
தாரிலங்கு நாராயணன் நல்லருளினாலே
மலிரிலங்கு மணம் பரப்பி நீடூழி வாழியவே!

சிந்துகின்ற புன்சிரிப்பால்
சிந்து நடைகள்தான் பயின்று
பள்ளியை வலம் வரும் பாலகர்களை
நானிலம் போற்றிடச் செய்திடும்
நாராயணா பாலர் பாடசாலைதனின்
வைரவிழா கண்டு வாழியவே நீடூழி!

வீட்டுக்குள் பெண்களைப் பூட்டுதல்
விரும்பத்தகுமோ கூறிவிடுவீர்
காட்டையும் களனியாக்கும்
கண்ணிறைந்த பெண்ணினத்தை
விண்ணையும் தொட்டு சாதனை படைக்க
மாதர் சங்க செயல்வடிவம் வாழியவே!

வீரத் திருநாடாம் நம் நாடு
வீரத்திலகங்கள் பெற்றெடுத்த பொற்கொடியாம் நாங்கள்
வீர விளையாட்டுகள் பல பயின்று
வினைத் திறனுடன் பரிசில்கள் பலபெற்று
இல்ல விளையாட்டுக்களையும் செம்மையுற வைத்ததுமே
நாராயணா விளையாட்டுக் கழகம் நீடூழி வாழியவே!

காலத்தால் அழியாத கலைகளையும்
கலை நுணுக்கம் காட்டி நிற்கும்
நாராயணா சன சமூக நிலையத்தின்
வைரவிழாக் கண்டு வியந்துநிற்கும் வேளையிலே
பவள விழாவும் காண வேண்டுமென்னும் அவாவினால்
வாழ்த்துகின்றோம் சித்திராலயா நாடக மன்றத்தினர்.

# "வந்தது வைரவிழா தந்தது வசந்தவுலா"

**இரத்தினசபாபதி டினேஸ்சன்**
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

வைரவிழா வந்தது எங்கள் வாழ்வில் வசந்தம் தந்தது
தைரியமாய் நாராயணா சனசமூகம் தரணியில் நிலைத்தது
பைந்தமிழும் நற்பாவிசைத்தது – கோண்டாவில்
வையகமே வைரவிழாவை வரவேற்று வாழ்த்தியது

பல்லாயிரக் கணக்கான பாலர், பாவலர், பாமரர் குதூகலித்து
வல்லீபுரன் வையகமே வானளாவி வானுயர்ந்தது
எல்லையில்லாப் பணியால் ஏற்றமிகு ஏணியாய் உயர்ந்தது
நல்ல சமுதாயமாய் நாராயணா சமூகம் மிளிர்ந்தது

மாகாணப் போட்டிகளில் பல மாணவரை மகிழவைத்தது
ஏகமனதாக எந்தப் போட்டியையும் ஏற்று வெற்றியீட்டியது
சோகங்கள் வந்தபோதும் சோர்வின்றி சேவைசெய்தது
அகமகிழ்ந்து அறுபதாவது ஆண்டையும் அடைந்தது

தன்னலமற்ற தன்பணியால் கோண்டாவில் தரணியே உயர்ந்தது
இன்பமான இனிய கலைநிகழ்வுகளால் இதயங்களை இதமாக்கியது
நன்மைகளை தன்மக்களுக்கு நடுநாயகமாய் பெற்றுக்கொடுத்தது
உன்னத பணியால் இன்று வைரவிழாவும் உதயமானது

செந்தமிழும், சைவமும், வைஸ்ணவமும் வாழி
பைந்தமிழொடு சேர்மிகு கல்வியும் கலையும் வாழி
செந்தாமரை வாழ் திருமால் பதியுறை கோண்டாவில் வாழி
விந்தை எழில் நாராயணா சனசமூக வைரவிழா! வாழி!! வாழி வாழி!!!

# வாழிய என்றும் வாழியவே!

S.P.மோகனரூபன்

வாழிய வாழிய எனக்கூற
எனக்கு வயது காணாது
உனது சேவையை புகழ்ந்திட
எனக்கு ஆயுள் காணாது.

தன்னகத்தே தாயாக நின்று
"நாராயணா எனும் நாமத்துடன்"
பல செல்வங்களை உன்னகத்தில்
பிள்ளைகளை போல் சுமந்தாய்
உன் பிள்ளைகளை செப்புகிறேன்
எனது கவி நடையில்

அறிவுப்பசி என்று வருவோருக்கு
நூல் நிலையமாகவும்
விளையாட்டை உயிராக நினைப்போர்க்கு
மறுமலர்ச்சி விளையாட்டு கழகமாகவும்
பாலர்களுக்கு உயிர் புகட்டுவதில்
பாலர் பாடசாலையாகவம்
மாதர்களின் உரிமையை வென்றிட
மாதர் சங்கமாகவும்
கிராம மக்களை முன்னேற்றிட
கிராம அபிவிருத்தி சங்கமாகவும் அத்துடன்
மக்களுக்கு எளிய விலையில் பொருள் வழங்க
நல்லூர் பல.நோ.கூ.சங்கமாகவும் கொண்டு
சேவையே உன் நோக்காக
உன் பிள்ளைகளை வளர்த்தாய்
இவற்றுக்கு மேலாக
எம் கலை திறனை காட்ட
உன் மடியில் இடம் தந்தாய்

“உமை யாம் வாழிய என்றிடுவோம்
நீடூழி வாழி என்போம்”
பல தலைமைகளை கண்டாய்
அசையாது ஓங்கி வளர்ந்தாய்
யாருக்கும் வளையாது
நீதிக்கு மட்டும் வளைந்தாய்

60 வயதை கண்டால்
தள்ளாடும் இவ்வுலகில்
இன்னும் இளமையாய் வாழும்
உன்சேவை மேலும் மேலும்
இல்லை மகத்தில் மாரிபோல் பொழிய
என் வாழ்த்துடன்
ஆனந்த கண்ணீரை சொரிகின்றேன்.

**நல்லவனுக்கு நலம் நடக்கும் என மட்டும்**
**நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா**

– பாரதியார்

# காலத்தின் அருமை

இராமசாமி சிவாநந்தி

காலம் கண் போன்றது அதை மதிப்பிட முடியாது, காலத்தை நாம் எப்படி உபயோகப் படுத்திக் கொள்கிறோமோ அதற்குத் தக்கதாக அது பயனைத் தரத்தக்கது.

காலம் கழியுந் தன்மை உடையது. இழந்து போன காலத்தை கோடிப் பொன் கொடுத்தாலும் பெற முடியாது. பின்னர் அதை நினைத்து அழுவதில் ஒரு பயனுமில்லை. அந்த தருணத்தில் நிறைவேற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் பின் மனம் வருந்த வேண்டி வரும். ஆகவே காலத்தைப் பொன்னாக மதிக்க வேண்டும்.

பள்ளி மாணவர்கள் தமது பள்ளிக் காலத்தை தக்க வழியில் உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இளமையில் வறுமை எவ்வளவு கொடியதோ அதைவிட பன் மடங்கு இளமையில் காலத்தை வீண் போக்குவது கொடுமை. தமது பள்ளிப் பாடங்களிலும் மற்றும் தமது அறிவை விருத்தி செய்யக்கூடிய பல உப வழிகளிலும் நேரத்தை செலவு செய்வார்களா யின் எதிர்காலத்தில் அவர்களின் வாழ்வும் உயர் நிலை அடைந்தும் பட்டம் பதவிகள் பெற்றும் புகழுடன் வாழ முடியும்.

இளம் சமுதாயத்தினர் சிலர் தங்களின் இளம் பருவத்தில் வாழ்க்கைத் தன்மையை உணராது வீணாக காலத்தை பொழுது போக்கு கிறார்கள். சந்திகளில் கூடி வீண் கதைகளும் கும்மாளமும் அடித்து சூது, மது, சினிமா சேஷ்டைகள் என்றும் வீதிகளில் போவோர் வருவோரை அரட்டை அடித்தும் பெரியோர்கள் முதியோர்கள் வந்தாலும் அவருக்கு மதிப்பளிக் காது விடுகின்ற இவ் இனிய காரியங்களைச் செய்து இதனால் பல பிரச்சனைகளைச் சந்தித்தும் வீண் கஸ்ரங்கள் தொந்தரவுகளில் சிக்குண்டு கொலை, களவு, சண்டைகள் செய்து சிறைவாசம் செல்லுகின்ற நிலைக்கும் தள்ளப் படுகின்றனர். இது அவர்களின் மடமைத்தனம் என்றே கூற வேண்டும்

கடவுள் படைக்கும்போது ஒருவரை பணம், பட்டம், புகழுடன் படைப்பதில்லை. அவரவர் ஏற்படுத்திக்கொள்வதே ஆகும். காலத்தை நேரத்தை சரியாகப் பயன்படுத்தியதே இதன் காரணம் ஆகும். இதைத் தவறியவர்கள் பல உபாதைகளைச் சந்திக்க நேரிடும் பொறா மைப்பட்டு வாழ்வதில் அர்த்தமில்லை அழகும் இல்லை.

இன்று எம்மால் போற்றப்படுகின்ற மதிக்கப்படுகின்ற வணக்கத்துக்குரிய பெரி யோர்கள் ஆன்றோர்கள் எல்லாம் திருவள்ளு வர், கம்பர், ஒளவையார், மகாத்மா காந்தி, நேரு, போன்ற பல பெரியோர்கள் தங்கள் காலத்தை சரியாக வகுத்து வாழ்ந்து காட்டியமையால் தான் இன்று உலகமே அவர்களை உச்சரித்துக் கொண்டிருக்கிறது. போற்றுதலுக்குரியவர்களாக இருக்கிறார்கள். இது மாத்திரமன்றி எம்மை எல்லாம் இன்று ஆச்சரியத்தில் ஆழ வைக்கும் விஞ்ஞான விந்தைகளை புரிகின்ற விஞ்ஞானி களை எல்லாம் நோக்கினால் அவர்கள் தங்கள்

காலத்தை சரியாகப் பயன்படுத்தியமையே ஆகும்.

இன்றைய நம் நாட்டு வளர்ச்சியில் பல தொழில் நுட்பங்கள் கணனி என்று வருகை தந்துள்ளது இவற்றை எல்லாம் சரியாகப் படித்துக் கொண்டால் முன்னேற்றம் அடைய முடியும்.

ஆகவே காலத்தின் அருமையை அறிந்து கொண்டு அதனைச் செலவிட்டு வாழ்வோமானால் வாழ்க்கை வளமாக அமையும், புகழுடன் வாழ முடியும், "காலத்தே பயிர்செய்" என்ற முதுமொழிக்கு இணங்க நாம் வாழ்ந்து காட்டுவோமாக.

***பிறருக்கு உதவி செய்வதன் மூலம் நீங்கள் உங்கள் சுமையைக் குறைத்துக் கொள்ளலாம்***

–பிரான்ஸ் முகாயஸ்

# உயர்ந்த வாழ்வு

இராமசாமி கவிதாகரன்

மானிடப் பிறவி அரிதென்று
தெள்ளுதமிழ் ஒளவையும் கூறினார்
சீருடன் அதை வாழாது
சீரழித்து வாழ்கிறோம் வாழ்வுதனில்
குய்ய உலகினில் வாழ்கிறோம்
மெய்ய வாழ்வுதனை தொலைத்து
உயர்ந்த வாழ்வுதனை வாழ்ந்திட
உண்மை வழிதனை கற்றிடுவோம்

மற்றவர்களின் மனதை நோகச் செய்து
மகிழ்வாய் வாழ்வதும் வாழ்வல்ல
பொய் களவு பொறாமையுடன்
பொருள் சேர்த்து வாழ்வதும் வாழ்வல்ல
வேலை செய்யாது பிறர் உழைப்பில்
வேண்டுமென்று வாழ்வதும் வாழ்வல்ல
உண்மை பேசி உத்தமராய்
வாழும் பண்பே உயர்ந்த வாழ்வாகும்.

அயலவர்கள் பசியில் துடிக்க
அவர்க்கு உதவி செய்யாமை வாழ்வல்ல
பெரியவர்கள் காட்டும் நல்வழியை
பேணி அதில் ஒழுகாமை வாழ்வல்ல
பணத்தின் செருக்கில் பிறரின்
பெண்களை விரும்புதல் வாழ்வல்ல
நற்குணமுடன் தீமை செய்யா மனமுடன்
இனிது வாழ்வதே நல் வாழ்வாகும்.

கட்டிய மனைவி கண்ணீர் மல்க
குடி போதையில் மூழ்குதல் வாழ்வல்ல
பெற்றதாய் மனம் தவிக்க
பொறுப்பில்லாமலூர் சுற்றுதல் வாழ்வல்ல
பிறரில் எரிச்சல் பகைமை கொண்டு
பிறர் கதை கொண்டு திரிதல் வாழ்வல்ல
தெய்வம் தொழுது அறநெறி தன்னில்
திகழ்வது நல்ல வாழ்வாகும்.

# சமகாலத்தகவல்கள்

## புதியவகை நோய்

திருமதி பங்கஜமலர் பஞ்சலிங்கம்
பொதுநூலகம்
கோண்டாவில்.

1) வன்னி இறுதிப்போரில் சிக்கிய மக்களைத் தாக்கிய புதிய வகை சுவாச நோய் Pneumono ultra Micro Scopic Silico Volcano Coniosis - என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது.
2) இந்நோய் 45 எழுத்துக்களைக் கொண்ட உலகில் மிக நீளமான சொல்லாக வர்ணிக்கப்பட்டாலும் இந்நோயின் தாக்கத்தினால் ஏற்படக் கூடிய நோய்கள் –
புற்றுநோய்
காசநோய்
சுவாச அழற்சி
3) இந்நோயின் தாக்கம் வெளியில் தெரியவர எடுக்கும் காலம் –
20 (இருபது) வருடங்கள்
4) இந்நோயின் தாக்கத்திற்கு ஒப்பான பாதிப்பு
எரிமலை வெடிப்பின்போது அதிலிருந்து வெளியாகும் தூசி மண்டலம் மற்றும் நுண்துகள்களைச் சுவாசிப்பவர் எதிர்கொள்ளும் பாதிப்பிற்கு ஒப்பானது.

## அதிவேக நெடுஞ்சாலை

- இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் 27.11.2011ல் திறந்து வைக்கப்பெற்றது.
- 96 கிலோ மீற்றர் தூரமானது (கொட்டாவை – காலி பின்னதுவ வரை)
- 700 கோடி ரூபா செலவிலான நேர்த்தியான நெடுஞ்சாலை.
- ஜப்பான் மற்றும் ஆசிய வங்கி அனுசரணையுடன் அமைக்கப்பட்டது.
- நான்கு வாகனம் செல்லக்கூடிய வசதிகள்
- 100 மைல் வேகம்
- பாதை நெடுகிலும் சி.சி.ரி.வி கமெரா கண்காணிப்பு
- 24 மணிநேர அவசர விபத்துச் சேவை, தீயணைப்புப்படை அம்புலன்ஸ் வண்டிச் சேவை
- சைக்கிள் ஆட்டோ, டிரக்டர் மாட்டு வண்டி செல்லத் தடை
- வாகன தரத்திற்கேற்ப நுழைவுக் கட்டணங்கள் அறவீடு
- உள்ளூராட்சி அமைச்சினதும், உள்ளூராட்சி திணைக்களத்தினதும் 2009, 2010ம் ஆண்டில் நடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் நல்லூர் பிரதேச சபை முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.
- இலங்கையில் முதன்முதலாக பார்வையற்றோருக்கான பிரெய்லி பத்திரிகையான "விஜய் பிரெய்லி" விஜய் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெளியிடப்படுகின்றது.

- அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் இரண்டு பதக்கங்களை வென்றுள்ள ஆசிரியர் யூட் நிரஞ்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)
- வடக்கு மாகாண தற்போதைய உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாசன் ஜெகூ ஆவார்.
- இலங்கையின் 2வது சிறுவர் நீதவான் நீதிமன்றம் அண்மையில் யாழ்ப்பாணம் – குருநகர் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. 1வது வத்தளையில் உள்ளது.
- அண்மையில் இத்தாலியில் டாக்டர் பட்டம் பெற்றுச் சாதனை படைத்த இலங்கைத் தமிழ்ப்பெண் ஞானசீலன் – பிரியா ஆவார். இவரின் வயது 25. ஊர்காவற்றுறை – நாரந்தனையைச் சேர்ந்தவர்
- வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் இணையத்தள முகவரி www.np.gov.lk என்பதாகும்.
- அண்மையில் ரூபாய்த்தாளில் தமிழ் எழுத்துக்களையும் பொறித்துள்ள நாடு மொறீசியஸ் ஆகும்.
- ஆசியாவின் இளம் உளநல சேவைக்கான சர்வதேச விருது இலங்கை வைத்திய யூடி ரமேஷ். இவர் கிளிநொச்சி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- வயதான பெற்றோரைக் கைவிட்டால் ஓராண்டு சிறைத்தண்டனை வழங்குவதற்கு தாய்வான் நாடு முடிவு செய்துள்ளது.
- சர்வதேச பெண்கள் அமைப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய நடிகை நந்திதா தாஸ்
- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை ஆவார்.
- மூன்று தலைகளுடன் கூடிய குழந்தை ஒன்று அண்மையில் இந்தோனேசியாவில் பிறந்துள்ளது.

> உலகத்தில் மக்கள்பால் அன்பு கொள்பவனே
> உண்மையாக வாழ்பவன் ஆவான்.
>
> –அந்தோணி

# உயிரினங்களும் சிறப்பியல்புகளும்

| | | |
|---|---|---|
| 1. | எதோலஜி (Ethology) என்பது? | விலங்குகளின்நடவடிக்கைபற்றிஆராய்வது |
| 2. | தூங்காத பறவை எனப்படுவது? | புறா |
| 3. | நாக்கில்லாத பிராணி? | முதலை |
| 4. | நினைவாற்றல் கூடிய மிருகம்? | யானை |
| 5. | மிகப்பெரிய முட்டை இடும் பறவை? | தீக்கோழி |
| 6. | உலகில் மிகப்பெரிய விலங்கு எனப்படுவது? | நீலத் திமிங்கிலம் |
| 7. | வேகமாக ஓடும் விலங்கு எனப்படுவது? | சிறுத்தை |
| 8. | ஆமையின் ஆயுட்காலம்? | 300 ஆண்டுகள் |
| 9. | கொசுவின் ஆயுட் காலம்? | 3 வாரம் |
| 10. | முட்டை இட்டும் பால் தரும் விலங்கு? | பிளாட்டிப்பசு |
| 11. | கரடியின் ஆயுட்காலம்? | 50 ஆண்டுகள் |
| 12. | வாயில் சுவை நரம்பு இல்லாத விலங்கு? | திமிங்கிலம் |
| 13. | சுவாசிக்காமல் உயிர் வாழும் உயிரினம்? | ஈஸ்ற் |
| 14. | இறக்கை இல்லாத பறவைகள்? | கிவி |
| 15. | சிலந்திக்கு கண்கள் எத்தனை? | 8 |
| 16. | வெட்டுக்கிளிக்குக் காது காணப்படுவது? | கால்களில் |
| 17. | பட்டாம்பூச்சியில் காணப்படும் இனங்கள்? | 28,000 |
| 18. | உணவு உட்கொள்ளும் முன் நீர் அருந்தும் விலங்கு? | குதிரை |
| 19. | மிகத்தடித்த தோல்களை உடைய பிராணி? | திமிங்கலம் |
| 20. | பறக்க முடியாத பறவை எது? | தீக்கோழி |
| 21. | கண் மூடாது உறங்கும் பிராணி எது? | மீன், பாம்பு |
| 22. | மிகச்சிறிய முலையூட்டி எது? | மூஞ்சூறு |
| 23. | அடை காக்கத் தெரியாத பறவை எனப்படுவது? | குயில் |
| 24. | அமிஸ் என்னும் விஞ்ஞானப்பெயர் குறிக்கும் பூச்சி? | தேனி |
| 25. | இனப்பற்றுள்ள பறவை எனப்படுவது? | காகம் |

வைர விழா மலர் புதுப்பொலிவுடன் மிளிர எம் நல்வாழ்த்துக்கள்

# Kajamugan Hardware

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டடப்பொருட்கள்

கம்பி வகைகள்

சீமெந்து




**PVC**பைப் வகைகள்


பெயின்ற் வகைகள்

**Mecson Mesh** நெற் வகைகள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய ஒரே இடம்





147, 149 STANLEY ROAD,
JAFFNA


TEL: 021 - 222 2833
FAX: 021 - 222 2368

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

வைர விழா மலரே வருக உன் புகழ் எங்கும் பரவுக

# Sriraam Hardware




**PALALY ROAD, KONDAVIL JUNCTION**
**T.P: 077 9898541**


---

சீர் சிறப்புடன் வைரவிழா மலர்
மலர வாழ்த்துகின்றோம்

# அன்னை புத்தகசாலை

பாடசாலைமாணவர்களுக்கான
அலுவலக உழியர்களுக்கான உபகரணங்கள்.
பாடசாலை புத்தகங்கள்.
நாவல்கள்.
சஞ்சிகைகள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்








பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்

---

பலவகை ஆக்கம் தாங்கி பாரினில் வரும்
வைரவிழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# V.M.K Brothers







Palali Road,
Kondavil Junction
Kondavil

# இளைஞர்களே விழித்தெழுங்கள்!

திரு. ப.பஞ்சலிங்கம்
பொதுமுகாமையாளர் (நிஸ்கோ)
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ்ப்பாண மாவட்டம்

தேசிய இளைஞர் சேவை மன்றமானது இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்திலும் செயற்படுகின்றது. அந்தவகையில் 1977ம் ஆண்டு இலங்கைத்திரு நாட்டில் உரு வாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இம் மன்ற மானது 13-29 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளை உள்வாங்கப்பட்டு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமய சமூக வேறுபாடு கள் அற்ற வகையில் அக்கிராம அலுவலர் பிரிவில் உள்ள சகல சமூகங்களையும் உள் வாங்கி இளைஞர் கழகங்களை அமைத்தபின் பிரதேச மட்டத்தில் பிரதேச சம்மேளனமும் பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரதேச சம் மேளனங்களை உள்வாங்கி மாவட்ட சம்மேளத் தினையும் அமைத்து செயற்படுகின்றது. இத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது இளை ஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

மேலும் இம் மன்றமானது இந்நாட்டில் வசிக்கின்ற இளைஞர் யுவதிகளிடையே மறைந் திருக்கின்ற திறமைகளை வெளிப்படுத்தி வரு கின்றது. அந்த வகையில் வருடா வருடம் பிரதேச விளையாட்டுப்போட்டி, கலாசாரப்போட்டி நடாத்தி வருவதுடன் இளைஞர் யுவதிகளுக்கு தையல் பயிற்சி வகுப்பு ஆங்கில, சிங்கள பயிற்சி வகுப்பு, கணனிப் பயிற்சி, அழகுக் கலைப்பயிற்சி போன்ற 6 மாத காலப்பயிற்சி வகுப்புகளும் இதனை விட சிரமதானம் பிரதேச மட்டத்தில் வருமானம் குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு அரச நிதியில் வீடு கட்டிக் கொடுத்தல் ஆலயங் கள், வீதிகள், பாடசாலை, விளையாட்டு மைதானம் புனரமைத்தல் போன்றவை செயற்படுத்துதல் 6 மாத கால வெளிநாட்டு சுற்றுப்பயணம் வழங்கல் போன்றவை செயற்படுத்தி வருகின்றது. இவை அனைத்தும் அரச நிதியிலேயே இடம்பெற்று வருகின்றது.

அதுமட்டுமல்ல தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஒரு அங்கமாக நிஸ்கோ பிரிவு செயற்படுகின்றது. இந் நிஸ்கோ பிரிவானது 13-29 வயதுக்கு இடைப்பட்ட இளை ஞர் யுவதிகளின் பொருளாதாரத்தை மேம்படு த்துவதற்காக அரச வங்கிகளூடாக ஒவ்வொரு வருக்கும் இரண்டரை இலட்சம் ரூபாய் வீதம் குறைந்த வட்டியில் கடன் பெற்றுக்கொடுத்தலும் யாழ் மாவட்ட நிஸ்கோ பிரிவில் சிறுசுய தொழிலை ஊக்குவிப்பதற்காக குறைந்த வட்டி யில் 35000/- சுய தொழில் கடன்வழங்கி வரு கின்றது.

அத்துடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது கிராம மட்ட இளைஞர் யுவதி களுக்கு விளையாட்டு உபகரணம் மற்றும் கதைப் புத்தகங்கள் வழங்கி ஊக்கவிக்கின்றது.

அந்த வகையில் செயற்படுகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயன்களைப் பெறுதலுக்காக அதனுடன் தொடர்பு கொண்டு பயன்பெற வாரீர் அதன் மூலம் இளைஞர் யுவதி களாகிய நீங்கள் பயன்பெறுவதுடன் உங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்தினை உயர்த்துங் கள். இவைகளை அறிந்து விழிப்படையுங்கள் செயற்படுங்கள்.

# ஸ்ரீ நாராயணா என் சிந்தையில்

செந்தமிழும் சைவ மதம் சிறப்புற்றோங்கும்
சீர்பூத்த கோண்டாவில் பதியில் மேவும்
விந்தை பல சேவையுடன் வீறு நடை போட்டு
விண்ணவரும் மண்ணவரும் புகழ்மாலை சூட்ட
அந்தமில்லா சேவையில் அறுபது அகவை மேவி
ஆற்றல் ஆழமை தலைமைத்துவம் தந்த
சிந்தை மளிர் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம்
ஸ்ரீ வல்லீபுரநாதர் ஆசியால் வாழி! வாழி!

ஆற்றல் அறிவு ஆழமை விருத்தி
அனைவரும் பெற்று அகிலத்தையாள
ஒற்றுமை கருணை உலகுயர் பண்பு
ஒருமித்தே ஓங்க ஒப்பரிய சேவை
பற்றுடன் மக்களுக்காய் பாரிய சேவை
பகல் இரவாய் செவ்வனே செய்து
கற்று உயர் கல்வியியலாளர்கள் தந்த – எங்கள் கிராம
காப்பகமே வாழி! வாழி!

இல்லமெய்வல்லுநர் விளையாட்டு தந்த
இனிய மறுமலர்ச்சி கழகம் வாழி!
கல்வி தொழில் கணனி சேவை தந்த
கனிநிகர் கிராம அபிவிருத்தி சங்கம் வாழி!
நல்ல கலை கவித்துவம் கலாச்சாரம் தந்த
காலத்தின் சனசமூக நிலையம் வாழி!
எல்ல வரும் போற்றும் ஏற்றமிகு நிலையமாய்
என்றும் வையத்தில் வாழி! வாழி!!

# நம்மூரை நம்மோரால்



அகவைகள் அறுபதிலே
வைரவிழா – காணும்
அறிவூட்டும் நிலையமாம்
ஸ்ரீ நாராயணா.................

பகைமைகள் நீங்கி
யாவரும் யாவும் ஒற்றுமையாய் – வாழ
பாடங்கள் சொல்கிறதே
உறுதுணையாய்

கல்வி கலை விளையாட்டு
மூன்றினையும்
எல்லையின்றி எம்மவர்க்கு
உவர்ந்தளிக்கும்

நல்லதொரு நிலையமிதை
நாம் மறவோம்
நம்மூரை நம்மோரால்
உயரவைப்போம்.

# 1951-ஆம் ஆண்டிலிருந்து முக்கிய பதவி வகித்த பெரியார்கள்
# 1951-ம் ஆண்டுச் சங்க அமைப்பாளர் திரு. நா. கனகையா

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1952 | திரு. ஆ. முருகேசு | திரு. நா. கனகையா | திரு. சி. ஐயாத்துரை |
| 1953 | திரு. ஆ. முருகேசு | திரு. நா. கனகையா | |
| | திரு. சி. ஐயம்பிள்ளை | திரு. நா. கனகையா | திரு. க. ஆசைப்பிள்ளை |
| 1954 | திரு. சி. ஐயம்பிள்ளை | திரு. நா. கனகையா | திரு. க. ஆசைப்பிள்ளை |
| 1955 | திரு. சி. ஐயம்பிள்ளை | திரு. நா. கனகையா | திரு. க. ஆசைப்பிள்ளை |
| 1956 | திரு. மு. சோமசுந்தரம் | திரு. நா. கனகையா | திரு. நா. அப்பையா |
| 1957 | திரு. சி. ஐயம்பிள்ளை | திரு. நா. கனகையா | திரு. வே. கந்தையா |
| 1958 | திரு. ப. சின்னத்துரை | திரு. க. செல்லையா | திரு. க. மார்கண்டு |
| 1959 | திரு. ப. கிருஸ்ணராசா | திரு. அ. ஐயாத்துரை | திரு. க. செல்லையா |
| 1960 | திரு. ஐ. பூபாலசிங்கம் | திரு. நா. சங்கரப்பிள்ளை | திரு. வி. மு. கந்தையா |
| 1961 | திரு. ப. சின்னத்துரை | திரு. அ. சின்னத்துரை | திரு. சி. சின்னப்பு |
| 1962 | திரு. க. செல்லையா | திரு. ஐ. வைரமுத்து | திரு. க. மார்க்கண்டு |
| 1963 | திரு. நா. கனகையா | திரு. வி. மு. கந்தையா | திரு. க. கனகு |
| 1964 | திரு. நா. கனகையா | திரு. ந. பூபாலசிங்கம் | திரு. நா. கிருஷ்ணபிள்ளை |
| 1965 | திரு. க. கிருஸ்ணராசா | திரு. க. கதிரேசு | திரு. சி. ஐயாத்துரை |
| 1966 | திரு. வேவ. கோபாலசிங்கம் | திரு. அ. சின்னையா | திரு. சி. சின்னத்துரை |
| 1967 | திரு. வேவ. கோபாலசிங்கம் | திரு. அ. சின்னையா | திரு. மார்க்கண்டு |
| 1968 | திரு. நா. சங்கரப்பிள்ளை | திரு. சி. இராசரத்தினம் | திரு. கிருஷ்ணராசா |
| 1969 | திரு. கிருஸ்ணராசா | திரு. க. கதிரேசு | திரு. சண்முகம் |
| 1970 | திரு. சு. சண்முகநாதன் | திரு. மு. இராசலிங்கம் | திரு. அ. நாகலிங்கம் |
| 1971 | திரு. நா. கனகையா | திரு. ஐ. வைரமுத்து | திரு. க. துரைராசா |
| 1972 | திரு. நா. கனகையா | திரு. நா. கிருஸ்ணபிள்ளை | திரு. க. தியாகராசா |
| 1973 | திரு. வேவகோபாலசிங்கம் | திரு. நா. கனகையா | திரு. வே. தில்லைநாயகம் |
| 1974 | திரு. நா. கனகையா | திரு. நா. கிருஸ்ணபிள்ளை | திரு. க. தியாகராசா |
| 1975 | திரு. க. கதிரேசு | திரு. நா. கிருஸ்ணபிள்ளை | திரு. வி. கனகசிங்கம் |
| 1976 | திரு. க. பரமநாதன் | திரு. நா. கிருஸ்ணபிள்ளை | திரு. மு. கந்தையா |
| 1977 | திரு. க. கிருஷ்ணராசா | திரு. வை. தம்புத்துரை | திரு. க. தியாகராசா |
| 1978 | திரு. சி. இராசரத்தினம் | திரு. தம்பி ஆனந்தன் | திரு. ச. மகாலிங்கம் |
| 1979 | திரு. சு. இரத்தினசபாபதி | திரு. த. குணநாதன் | திரு. க. கனகராசா |
| 1980 | திரு. ப. சின்னத்துரை | திரு. க. தியாகராசா | திரு. வை. தம்புத்துரை |
| 1981 | திரு. க. தியாகராசா | திரு. சி.ப. பஞ்சலிங்கம் | திரு. க. கனகராசா |
| 1982 | திரு. சி. வாமதேவன் | திரு. ஐ. இராஜரட்ணம் | திரு. க. நடராசா |
| 1983 | திரு. வே. வகோபாலசிங்கம் | திரு. செ. செல்வராசா | திரு. க. பத்மநாதன் |
| 1984 | திரு. சு. இரத்தினசபாபதி | திரு. ஐ. இராக்ரட்ணம் | திரு. த. குணநாதன் |
| 1985 | திரு. சி. தேவராசா | திரு. ந. அரியரத்தினம் | திரு. த. குணநாதன் |

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1986 | திரு. ஐ. இராசையா | திரு. நா. தவராசா | திரு. ஐ. இராசரட்ணம் |
| 1987 | திரு. ஜெ. அன்ரனிப்பிள்ளை | திரு. ம. லோகராசா | திரு. ச. தியாகராசா |
| 1988 | திரு. ஜெ. அன்ரனிப்பிள்ளை | திரு. ய. லோகராசா | திரு. ச. தியாகராசா |
| 1989 | திரு. செ. பேரின்பநாதன் | திரு. து. தவராசா | திரு. லிங்கவாசன் |
| 1990 | திரு. செ. சண்முகலிங்கம் | திரு. K.G. சத்தியகுமார் | திரு. சு. நற்குணசீலன் |
| 1991 | திரு. சி. ஞானசம்பந்தர் | திரு. ந. ஶ்ரீதரன் | திரு. புவனேஸ்வரன் |
| 1992 | திரு. ஐ. இராசரத்தினம் | திரு. வ. கையிலநாதன் | திரு. அ. லோகநாதன் |
| 1993 | திரு. ஐ. இராசரத்தினம் | திரு. செ. லிங்கராசா | திரு. சு. நற்குணசீலன் |
| 1994 | திரு. செ. சண்முகலிங்கம் | திரு. அ. யோகநாதன் | திரு. ச. லிங்கசபேசன் |
| 1995 | திரு. ந. ஶ்ரீதரன் | திரு. கோ. நரேந்திரன் | திரு. து. சத்தியலெனின் |
| 1996 | திரு. கே.ஜீ. சத்தியகுமார் | திரு. பே. நாகேந்திரம் | திரு. சி. தெய்வேந்திரா |
| 1997 | திரு. கே. ஜீ. சத்தியகுமார் | திரு. பே. நாகேந்திரம் | திரு. சி. தெய்வேந்திரா |
| 1998 | திரு. ஐ. இராசரத்தினம் | திரு. கோ. நரேந்திரன் | திரு. சு. நற்குணசீலன் |
| 1999 | திரு. ஐ. இராசரத்தினம் | திரு. கோ. நரேந்திரன் | திரு. சு. நற்குணசீலன் |
| 2000 | திரு. ஐ. இராசரத்தினம் | திரு. கோ. நரேந்திரன் | திரு. சி. தெய்வேந்திரா |
| 2001 | திரு. கோ. நரேந்திரன் | திரு. சீ. சுஜீவா | திரு. சி. தெய்வேந்திரா |
| 2002 | திரு. கோ. நரேந்திரன் | திரு. சீ. சுஜீவா | திரு. சி. தெய்வேந்திரா |
| 2003 | திரு. சீ. சுஜீவா | திரு. இ. தயாகரன் | திரு. பே. நாகேந்திரம் |
| 2004 | திரு. சி. கர்ணன் | திரு.ந.பரமரத்தினம் | திரு. செ. சுதிராசா |
| | | திரு. ச. விக்கினேஸ்வரன் | |
| 2005 | திரு. கோ. நரேந்திரன் | திரு. தெ. சுகிர்தன் | திரு. க. நிறஞ்சன் |
| 2006 | திரு. கோ. நரேந்திரன் | திரு. சுகிர்தன் | திரு. க. நிறஞ்சன் |
| 2007 | திரு. கோ. நரேந்திரன் | திரு.தெ. சுகிர்தன் | திரு. க. நிறஞ்சன் |
| 2008 | திரு. கோ. நரேந்திரன் | திரு.தெ. சுகிர்தன் | திரு. க. நிறஞ்சன் |
| 2009 | திரு. சீ. சுஜீவா | திரு. அ. ரவீந்திரகுமார் | திரு. கோ. நரேந்திரன் |
| 2010 | திரு. சீ சுஜீவா | திரு. அ. ரவீந்திரகுமார் | திரு. கோ. நரேந்திரன் |
| 2011 | திரு. தெ. சுகிர்தன் | திரு. அ. றஜீவன் | திரு. செ. கமல்ராஜ் |
| 2012 | திரு. தெ.சுகிர்தன் | திரு. து. கஜேந்திரன் | திரு. அ. றஜீவன் |

# 2012ஆம் ஆண்டு வைரவிழா நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| க. தியாகராஜா | : | காப்பாளர் |
| தெ. சுகிர்தன் | : | தலைவர் |
| யு.வு கஜன் | : | செயலாளர் |
| அ. றஜீவன் | : | பொருளாளர் |
| சு. குலதேவகுமார் | : | உப தலைவர் |
| ச. நிமலன் | : | உப செயலாளர் |

## நிர்வாக சபை உறுப்பினர்

| | | |
|---|---|---|
| ஜஸ்ரின் நியூட்டன் | : | கல்விக் குழு |
| கு. தனூரன் | : | மலர்க் குழு |
| இ. பார்த்தீபன் | : | கல்விக் குழு |
| பூ. கருணதாஸ் | : | கலைக் குழு |
| வே. சிவகுமாரன் | : | கலைக் குழு |
| ந. பிறேமானந் | : | கலைக் குழு |
| க. நிறஞ்சன் | : | விளையாட்டுக் குழு |
| ச. கஜதீபன் | : | விளையாட்டுக் குழு |
| க. புருசோத் | : | விளையாட்டுக் குழு |
| கோ. நரேந்திரன் | : | ஆத்மீகக் குழு |
| சீ. சுஜீபா | : | ஆத்மீகக் குழு |
| ப. சயிந்தன் | : | இல்லப் போஷகர் |
| மு. தனீஸ்வரன் | : | இல்லப் போஷகர் |
| அ. கஜதீபன் | : | இல்லப் போஷகர் |
| ம. சிவலிங்கம் | : | கணக்காய்வாளர் |

# கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை, மாதர்சங்கம் இணைந்து நடாத்தும் 60வது அண்டு (வைரவிழா) நிறைவுவிழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும்

## 2012

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன் தெ.சுகிர்தன்<br>ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் |
| காலம் | : | 13.04.2012 முதல் 21.04.2012 வரை |
| நேரம் | : | தினமும் பி.ப. 4.00 மணி |

### 13.04.2012 வெள்ளிக்கிழமை நிகழ்வுகள்

முதன்மை விருந்தினர் : **கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா**
(அமைச்சர் சிறுகைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சு)

சிறப்பு விருந்தினர்கள்: **M D U V Gunathilage**
(The Commanding Officer, 511 Brigit, Achchellu)

**திரு.க.கமலேந்திரன்**
(அமைப்பாளர், யாழ் மாவட்டம், ஈழமக்கள் ஜனநாயக கட்சி)

**திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா**
(முதல்வர், யாழ் மாநகரசபை)

**திருமதி ச.சுபாஸ்சந்திரன்**
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**திரு.அ.ரவீந்திரதாசன்**
(அமைப்பாளர், நல்லூர் தொகுதி)

# நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- சனசமூக நிலையக்கீதம்
- நிலையக் கொடியேற்றல் (நிலையத் தலைவர்)
- இல்லக் கொடியேற்றல் (இல்லத் தலைவர்கள்)
- ஆசியுரை : பிரம்மஸ்ரீ சு.இரவீந்திரகுமாரக்குருக்கள்
  (பிரதமகுரு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானம்)

  Pr.கனகலிங்கம் ராஜா D.Th, BA, M&M
  (போதகர் அற்புத மத்தியஸ்தானம்
  அசெம்பிளி ஒவ்கோட், கோண்டாவில் நிர்வாக அற்புத
  குட்டிகள் சர்வேத முன்பள்ளி)
- தலைமையுரை : செல்வன் தெ.சுகிர்தன் (தலைவர், ஸ்ரீ நா.ச.ச.நி)
- ஒலிம்பிக் தீபம் ஏற்றல் : திரு.ச.கஜதீபன் (விளையாட்டுக்குழு, ஸ்ரீ நா.ச.ச.நி)
- வரவேற்புரை : திரு.க.நிறஞ்சன் (விளையாட்டுக்குழு, ஸ்ரீ நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை உரை :
- நன்றியுரை : செல்வன் A.T.கஜன்
  (செயலாளர், ஸ்ரீ நா.ச.ச.நி)
- முதன்மை விருந்தினர் விளையாட்டினை ஆரம்பித்து வைத்தல்

# 14.04.2012 சனிக்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர் Rev.Pr.சாம் ராஜசூரியர்

  (தலைமை போதகர், அசெம்பிளி ஒவ்கோட், யாழ்ப்பாணம்,

  தலைவர் கியூமெடிக்கா லங்கா நிர்வாகி, ஏஞ்சல் சர்வதேச கல்லூரி, மானிப்பாய்)

- சிறப்பு விருந்தினர்கள்

  Lt.Col W.B Panditha RSP

  (The Commanding Officcer, Urellu)

  செல்வன் த.கவாஸ்கர் (ஹற்றன் நஷனல் வங்கி, கிளிநொச்சி)

  திரு.ந.நல்லசிங்கம் (வெளிக்கள உத்தியோகத்தர், கியூமெடிக்கா)

  செல்வன் க.கதீஸ் (உரிமையாளர், செல்வம் தச்சுத் தொழிலகம்)

  திரு.K.G.சத்தியகுமார் (தலைவர் ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்)

  திரு.செ.பேரின்பநாதன் (தலைவர், அன்னதானசபை, ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : திரு.கோ.நரேந்திரன் (ஆத்மீகக் குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : செல்வன் சு.குலதேவகுமார் (உபதலைவர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- நன்றியுரை : செல்வன் இ.பார்த்தீபன் (கல்விக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)

இதனைத் தொடர்ந்து பாரதி இல்ல வீரர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்

## 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகள்
### விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர்கள் — எம்.பி.வைத்தியதிலக (பொலிஸ் பொறுப்பதிகாரி, கோப்பாய்)

  திரு.S.கிரீஷன்
  (முகாமையாளர், சிங்கர்பிளஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்)

  திரு.S.சிவலிங்கம் (கட்டட ஒப்பந்தக்காரர்)

- சிறப்பு விருந்தினர்கள்

  Lt.PMAPS Samarakoon
  (Officer Comanding, Kondavil Camp)
  திரு.இ.சுரேஸ் (மாவட்ட பொறுப்பதிகாரி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு யாழ் செயலகம்)
  திரு.ஞான திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)
  திரு.சி.லிங்கவாசன் (உரிமையாளர், லவன் ரான்ஸ்போட்)
  திருமதி மதிமாலா கிருபாகரன் (ஆசிரியை, நாராயணா முன்பள்ளி)
  திருமதி நல்லசிங்கம் பரிபாலினி (தலைவி மாதர் சங்கம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : செல்வன் ந.பிறேமானந் (கலைக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : திரு.ச.நிமலன் (உபசெயலாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- நன்றியுரை : செல்வன் க.புருஷோத் (விளையாட்டுக் குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)
- மாவட்ட ரீதியாக நடைபெற்ற தாச்சிப்போட்டிக்கான பரிசு வழங்கல்

இதனைத் தொடர்ந்து காந்தி இல்ல வீரர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்

## 16.04.2012 திங்கட்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர் சில்வேஸ்திரி அலன்ரீன் (உதயன்)
  (யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,
  நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும்)

- சிறப்பு விருந்தினர்

  Lt.PMAPS Samarakoon *(Officer Comanding, Kondavil Camp)*

  திரு.ப.பஞ்சலிங்கம் (முகாமையாளர், நிஸ்கோ தேசிய இளைஞர் சேவை மன்றம்)

  திரு.வை.பிறேமதாஸ் (அரச நிலஅளவையாளர், திருகோணமலை)

  திரு.க.மதிரூபன் (ஆசிரியர், மு/பாரதி வித்தியாலயம், விசுவமடு)

  செல்வன் ப.அஜீவன் (ஆசிரியர், மு/முத்து ஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம்)

  திரு.க.ஸ்ரீபரன் (இலண்டன்)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : செல்வன் கு.தனுராரன் (மலர்க்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : திரு.சி.சுஜீவா (நிர்வாக உறுப்பினர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- நன்றியுரை : செல்வன் அஸ்ரின் நிரூட்டன் (கல்விக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)

இதனைத் தொடர்ந்து அன்னா இல்ல வீரர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

## 17.04.2012 செவ்வாய்க்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர் திரு.ப.வசந்தகுமார் (தலைவர், நல்லூர் பிரதேச சபை)
- சிறப்பு விருந்தினர்கள் :

Lt.PMAPS Samarakoon *(Officer Comanding, Kondavil Camp)*

திரு.நா.சிவலோகநாதன் (உறுப்பினர் நல்லூர் பிரதேசசபை)

திரு.க.கிருஸ்ணகுமார் (ஆசிரியர், மு/மாங்குளம் மகா வித்தியாலயம்)

திரு.ஐ.இராசரத்தினம் (தலைவர், இராஜகோபுர திருப்பணிச்சபை, ஸ்ரீவல்லீபுரநாதர் தேவஸ்தானம்)

திரு.உ.வதன் (ஆசிரியர், குட்டிச்சுட்டி கல்வி நிறுவனம்)

திரு.ஸ்ரீதரன் (சுவிஸ்)

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

இறைவணக்கம்

மௌனப் பிரார்த்தனை

வரவேற்புரை : திரு.வே.சிவகுமாரன் (கலைக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)

தலைமையுரை : திரு.செ.சண்முகலிங்கம் (தலைவர், ஸ்ரீ நாராயண கிராமஅபிவிருத்தி சங்கம்)

சிறப்பு விருந்தினர் உரை

முதன்மை விருந்தினர் உரை

நன்றியுரை : திரு.பூ.கருணதாஸ் (கலைக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)

சுழலும் சொல்லாடல் : விடயம் – மகாபாரதம் இன்று

இதனைத் தொடர்ந்து விசேட கலைநிகழ்வாக அமரர் கேசவராஜா ஞாபகார்த்தமாக திரு ச.நிமலன் அவர்களின் அனுசரணையுடன் "மதுரம்ஸ்" இசைக்குழுவினரும் "வசந்தம்" இசைக்குழுவினரும் இணைந்து வழங்கும் எதிரும் புதிருமான இசைச் சங்கமம் நடைபெறும்

## 18.04.2012 புதன்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர்கள்

திரு.க.றமேஸ்நேசன் (முகாமையாளர், மக்கள் வங்கி)

செல்வன் இ.கேமபாலா (யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்)

- சிறப்பு விருந்தினர்கள்

Lt.PMAPS Samarakoon *(Officer Comanding, Kondavil Camp)*

திரு.க.தவகீஸ்வரன் (அதிபர், கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்)

திரு.S.கர்ணன் (ஆசிரியர் மன்/சின்னவலையன் கட்டு அ.த.க பாடசாலை, மடு வலையம், மன்னார்)

திரு.ந.அரியரத்தினம் (எழுதுவினைஞர் யாழ் பல்கலைக்கழகம்)

திரு.ப.விமல்ராஜ் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், தொழில் துறைத் திணைக்களம், கைதடி)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : செல்வன் ஜஸ்ரின் நியூட்டன் (கல்விக்குழு, ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : செல்வன் தெ.சுகிர்தன் (தலைவர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை

2011ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள், தேசிய விருது பெற்ற மாணவர்களை கௌரவித்தல்

நன்றியுரை : செல்வன் A.T.கஜன் (செயலாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

இதனைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்வாக முற்றிலும் பெண்கள் பங்குபற்றும் "காத்தவராயன்" சிந்துநடைக் கூத்து இடம்பெறும்

## 19.04.2012 வியாழக்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர்

திருமதி இமெல்டா சுகுமார் (அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்)

- சிறப்பு விருந்தினர்கள்

Lt.PMAPS Samarakoon *(Officer Comanding, Kondavil Camp)*

Dr.தாரிணி குருபரன் (MBBS)

திரு.க.சுரேஸ்நேசன் (உதவி கணக்காளர், இலங்கை மின்சாரசபை, வடமாகாணம்)

திரு.நா.சுந்தரலிங்கம் (சுவிஸ்)

திரு.T.றவினதாஸ் (பொதுச்சுகாதார பரிசோதகர்)

திரு.செ.பதீஸ்ராஜா (ஆசிரியர், மு/மாங்குளம் மகா வித்தியாலயம்)

திரு.நா.கிருஸ்ணபிள்ளை (தலைவர் அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபை)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : செல்வன் அ. றஜீவன் (பொருளாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : செல்வன் தெ.சுகிர்தன் (தலைவர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை

சனசமூக நிலையத்தின் முன்னைநாள் தலைவர்களை கௌரவித்தல்

- நன்றியுரை : செல்வன் A.T.கஜன் (செயலாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

இதனைத் தொடர்ந்து விசேட கலைநிகழ்வாக "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகம் இடம்பெறும்

# 20.04.2012 வெள்ளிக்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

- முதன்மை விருந்தினர்

  பேராசிரியர் க.தேவராஜா (முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

  திரு.செ.பிரணவநாதன் (உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்)

- சிறப்பு விருந்தினர்கள்

  Lt.PMAPS Samarakoon *(Officer Comanding, Kondavil Camp)*

  திரு.S.K.N.தவராஜா (உதவிப் பதிவாளர், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

  திரு.ம.சிவலிங்கம் (கணக்காய்வாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி, ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

  திரு.க.தியாகராசா (காப்பாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

  திரு.சு.பிரசன்னா (விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்)

## நிகழ்ச்சி நிரல் – வைரமலர் வெளியீட்டு நிகழ்வு

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை
- ஆசியுரை
- தலைமையுரை
- தொடக்கவுரை
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- வெளியீட்டுரை
- ஆய்வுரை
- வைர மலர் வெளியீடு
- ஏற்புரை
- மலரின் பிரதிகள் வழங்கல்
- நன்றியுரை

இதனைத் தொடர்ந்து விசேட கலைநிகழ்வாக "முடிசூடா மன்னன்" என்னும் சரித்திர நாடகம் இடம்பெறும்

# 21.04.2012 சனிக்கிழமை நிகழ்வுகள்

விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்

முதன்மை விருந்தினர் : **கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா**

(அமைச்சர் சிறுகைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சு)

சிறப்பு விருத்தினர்கள் : **M D U V Gunathilage**

(The Commanding Officer, 511 Brigit, Achchellu)

Pr.**கனகலிங்கம் ராஜா** D.Th, BA, M&M

போதகர் அற்புத மத்தியஸ்தானம் அசெம்பிளி ஒவ்கோட், கோண்டாவில்)

**திரு.க.கமலேந்திரன்**

(அமைப்பாளர், யாழ் மாவட்டம், ஈழமக்கள் ஜனநாயக கட்சி)

**திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா**

(முதல்வர், யாழ் மாநகரசபை)

**திரு.அ.ரவீந்திரதாசன்** (அமைப்பாளர், நல்லூர் தொகுதி)

**திரு.க.தியாகராசா** (காப்பாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

**திரு.ம.சிவலிங்கம்** (கணக்காய்வாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌனப் பிரார்த்தனை
- வரவேற்புரை : செல்வன் அ.றஜீவன் (பொருளாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)
- தலைமையுரை : செல்வன் தெ.சுகிர்தன் (தலைவர் ஸ்ரீ.ந.ச.ச.நி)
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- நன்றியுரை : செல்வன் A.T.கஜன் (செயலாளர், ஸ்ரீ.நா.ச.ச.நி)

விசேட கலைநிகழ்வாக மணிக்குரல் வர்த்தக விளம்பர சேவையின் சிறந்த அறிவிப்பாளர் றஞ்சித் அமிர்தனின் ஞாபகார்த்தமாக கலைநிகழ்வுகள் இடம்பெறும்

| | காந்தி இல்லம் | அண்ணா இல்லம் | பாரதி இல்லம் |
|---|---|---|---|
| காப்பாளர் | அ.கஜதீபன் | ப.சஜிந்தன் | மு.தனீஸ்வரன் |
| தலைவர் | த.ஹரிகரன் | தி.நிமல்ரமணண் | ப.மோகனரூபன் |
| உபதலைவர் | ம.ரகுநந்தன் | அ.சுஜிகரன் | சி.சிவானுஜன் |
| தலைவி | சி.சிவானுயா | இ.ஜீவநந்தினி | உ.கோபிகா |
| உபதலைவி | க.தர்சினி | மு.மோகனவதி | ப.சகிலா |

மரதன் ஓட்ட அனுசரணை – "சுந்தர்சன்", மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

வாகனசேவை : சிவஞானம், சிவசாயி, லிங்கவாசன், கதீஸ், லகீதரன்

ஒலி அமைப்பு : பத்மஸ்ரீ, கோபி சவுண்ட்ஸ்
ஒளி அமைப்பு : க.ஸ்ரீதரன் குடும்பம் (சுவிஸ்)

டிஜிற்றல் ஒளியமைப்பு : JSK brothers Kondavil

13.04.2012 திகதி அன்று தேசிய கீத கதம்ப சுற்றுலா இடம்பெறும்

16.04.2012 திகதி அன்று காலை 8.30 மணிக்கு குட்டிச்சுட்டி, K.T.C கல்வி நிறுவனங்களில் பரீட்சை நடைபெறும்

17.04.2012 திகதி அன்று பேச்சுப் போட்டி நடைபெறும்

18.04.2012 திகதி அன்று கௌரவிப்பு விழாவுக்கான அன்பளிப்பு அனுசரணை
அமரர் செல்வராசா புஸ்பமலர் ஞாபகார்த்தமாக
செ.செல்வசுதந்திரன் அவர்களால் அன்பளிப்பு

19.04.2012 எமது சனசமூக நிலைய முன்னாள் தலைவர்களை திரு.நா.சுந்தரலிங்கம் (சுவிஸ்) அவர்களின் அனுசரணையுடன் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது

21.04.2012 திகதி அன்று இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்

21.04.2012 அன்று காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறும்
அன்று காலை 7.00 மணிக்கு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி இடம்பெறும்

# மெது நிலையத்தினால் வெளியிடப்பட்ட மலர்கள்

கோண்டாவில் - கிழக்கு

ஸ்ரீ நாராயணா

கிராம அபிவிருத்திச் சங்கம்

●

சனசமூக நிலையம்

●

மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்

●

பாலர் பாடசாலை

**42 - வது ஆண்டு விழா**

**சிறப்பு மலர் - 1994**

---

**சங்கோசை**

கோண்டாவில் - கிழக்கு

ஸ்ரீ நாராயணா

கிராம அபிவிருத்திச் சங்கம்

★

சனசமூக நிலையம்

★

மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்

★

பாலர் பாடசாலை

**43-வது ஆண்டு விழா**

**சிறப்பு மலர் - 1995**

---

**பொன் விழா மலர்**

1952-2002




கோண்டாவில் கிழக்கு

ஸ்ரீ நாராயணா

சனசமூக நிலையம்


கிராம அபிவிருத்திச் சங்கம்

மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்

பாலர் பாடசாலை

வெளியீடு


2002



எமது நிலையத்தின்
பழைய கட்டடத்தின்
முன் முகப்புத் தோற்றம்



எமது தற்போதைய
நிலையத்தின்
பழைய முகப்புத் தோற்றம்



எமது நிலையத்தின்
பாலர் பாடசாலை
கட்டடம்



நல்லூர் பிரதேச செயலகத்தினால்
நடாத்தப்பட்ட கலாசார போட்டியில்
2ம்இடத்தினைப் பெற்றுக்கொண்ட
சத்தியவான் சாவித்திரி
இசைநாடக கலைஞர்கள்

# நன்றிகள்

"வைர விழா" மலர் வெளியீட்டு நிகழ்விற்கு ஆசியுரைகள் வழங்கிய

மத குருமார்கள், வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கள்,

ஆக்கங்கள் தந்து நூலுக்கு மெருகூட்டிய

எழுத்தாளர்கள், துறை சார்ந்த வல்லுனர்கள்,

விளம்பரங்கள் ஊடாக நிதியுதவி அளித்த வர்த்தகப் பெருமக்கள்

இம் மலரை மிகவும் சிறந்த முறையில் அச்சிட்டு தந்த

மதி கலர்ஸ் அச்சகத்தினர் ஆகியோருக்கும்

எமது இதய பூர்வமான நன்றிகள்.

நிர்வாகிகள்



வைரவிழா மலர் பூத்து திக்கெட்டும் மணம் பரப்ப நல்வாழ்த்துக்கள்

# நியூ லக்ஷி தையலகம்

## *New Luxcy Tailoring Centre*



ஆண்கள்,
பெண்களுக்கான
ஆடைகள்
குறித்த
தவணையில்
விரும்பிய டிசையின்களில்
தைத்துக்
கொடுக்கப்படும்.

உரிமையாளர்
யோ. காந்தன்

பலாலி வீதி,
கோண்டாவில்
**T. P: 077 6557496**

---

வைரவிழாவில் உதிக்கும் வைரவிழா மலர்
தூவி வாழ்த்துகின்றோம்.

## சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்

## Sivaranjanam Offset printers

கணனி எழுத்தமைப்பு
ஓவ்செற் பிறிண்டிங்
சுவல் லெமனேட்டிங்
புத்தகம் கட்டுதல்
பல வர்ன நினைவு மலர் அட்டைகள்
அழைப்பிதழ்கள்
என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பலாலி வீதி,**
**கோண்டாவில்.**
தொ. பே. இல: 021 2226722
077 3068982

---

நிலை பெற்ற நித்தமும் வைரவிழா மலர்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## கோபி
## சவுண்ஸ் சேவிஸ்





திருமண விழா
பூப்புனித நீராட்டு விழா
புதுமனைப் புகுவிழா
பிறந்தநாள் விழா
எதுவாக இருந்தாலும்
சிறந்த முறையில்
ஒளி, ஒலி அமைப்பு
செய்திட நாட வேண்டிய ஸ்தாபனம்




**உரிமையாளர்**
**V. கோபி**
*T.P No: 077 6844382*
சென். செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.



# கஜன் டிஜீற்றல் வீடியோ
# அன் போட்டோ பான்சி கவுஸ்

- வீடியோ எடிட்டிங்
- போட்டோ டிசைனிங்
- சவுண்ஸ் சிஸ்ரம்
- டெக்கிறேசன்
- அல்பம் கட்டுதல்
- டிஜிற்றல் ஒளி அமைப்பு
- பாடசாலை உபகரணங்கள்
- போட்டோ கொப்பி
- சிறுவர்களுக்கான Games CD
- நெற் கபே
- தொலைபேசி வசதிகள்

## KAJAN DIGITAL VIDEO & PHOTO

*T.P No: 077 1910656*
*021 5681910*
*021 5682076*
*E.mail- Kajan89phot@gmail.com*
*skype - Kajan1910*

"காலத்தின் விம்பங்களைத் துல்லியமாகப் பதிவு செய்ய நாடுங்கள்"

கிளை:
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

உரிமையாளர் அ. துரைராசா
சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


MATHI
COLOURS
மதி கலர்ஸ்
உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...
திருமண அழைப்பிதழ்
காட்சியறை
WEDDING CARD SHOW ROOM
15/2, முருகேசர் லேன், முத்திரைச்சந்தி, நல்லூர்.
Tel: 021 2229285, 0777 222524